
ஈசனை தேடி...
எனது பயணங்கள்

நமது ,ஈசனை தேடி யூடியூப் சேனலை, இங்கு கிளிக் செய்து சப்ஸ்கிரைப் செய்து கொள்ளுங்கள்.

https://www.youtube.com/@esanaithedi



கோயம்பேடு

# அருள்மிகு குறுங்காலீஸ்வரர், வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயில் தல வரலாறு

*இந்நூல் இந்து சமய அறநிலையத்துறை ஆணையாளர்*

**திருமிகு ச. சாவர்கர்,** இ.ஆ.ப.,

அவர்களது பெரு முயற்சியால்

*மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர்*

**திருமிகு மு. தமிழ்க்குடிமகன்** அவர்களால்

வெளியிடப்பட்டது.

*நூலாசிரியர்*

"செந்தமிழ் நம்பி" *மயிலம்* **வேல். கார்த்திகேயன்**

திருக்கோயில் வெளியீடு - 2001

விலை : ரூ. 330

# உள்ளே..

பக்க எண்

வாழ்த்துரைகள்

1. ஆலயம் 23
2. இருப்பிடம் 28
3. கோயிலின் அமைப்பு 28
4. மூர்த்திகளின் பெயர்கள்: 31
5. குறுங்காலீஸ்வரரை வணங்க, அடையும் பேறுகள் 34
6. தலப் பெருமைகள் (தீர்த்தம், தல மரம்) 41
7. தலத்திற்குரிய சிறப்புப் பெயர்கள் 43
8. உற்சவ மூர்த்திகள் 46
9. புராண வரலாறு 48
10. சரபேஸ்வரர் 56
11. தொண்டை நாட்டில் கோயம்பேடு 61
12. வரலாற்று நோக்கில் கோயம்பேடு 63
13. தினப்பூசையும் திருவிழாவும் 99
14. குசலவபுரீஸ்வரர் பஞ்சகம் 103
15. அறம் வளர்த்த நாயகி பஞ்சகம் 105
16. அ/மி வைகுண்ட வாசப் பெருமாள் திருக்கோயில் 114

தமிழ்நாடு அரசு

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

**அருள்மிகு குறுங்காலீஸ்வரர்,**

**வைகுண்ட வாசப் பெருமாள் திருக்கோயில்,**

கோயம்பேடு, சென்னை - 600 107.

*மாண்புமிகு முனைவர்.* **மு. தமிழ்க்குடிமகன்** அவர்கள்
தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாட்டு மற்றும்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர்

**திரு. ச. சாவர்க்கர்**, இ.ஆ.ப. அவர்கள்
ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

**திரு. எஸ். கனகய்யா**, பி.எஸ்.சி., பி.எல்., அவர்கள்
கூடுதல் ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

**திரு. ப. தனபால்**, எம்.ஏ., பி.எல்., அவர்கள்
இணை ஆணையர் (தலைமையிடம்),
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

**திரு. இரா. சுப்பிரமணியம்**, பி.ஏ., பி.எல்., அவர்கள்
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை.

**திரு. அ. சுப்பிரமணியன்**, எம்.ஏ., எம்.ஏ., பி.எல்., அவர்கள்
உதவி ஆணையர்,
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை.

**திரு. பொன். சரவணன்**, பி.ஏ., அவர்கள்
செயல் அலுவலர்,
கோயம்பேடு.

**முனைவர் மு.தமிழ்க்குடிமகன்** எம்.ஏ., பி.எச்.டி.,

தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,

இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

தலைமைச் செயலகம்

சென்னை - 600 009.

நாள் 29.8.2000

தி.பி.2031 / ஆவணி 14.

# வாழ்த்துரை

சென்னை, கோயம்பேடு, அருள்மிகு அறம் வளர்த்த நாயகி உடனுறை குறுங்காலீசுவரர், வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயில் தலவரலாறு வெளிவருவதறிந்து பெரிதும் மகிழ்கிறேன்.

கல்வெட்டுகளின் வாயிலாக அறியப்படும் வரலாற்றுப் பழமையும், அருணகிரிநாதரின் திருப்புகழ் வாயிலாக அறியப்படும் இலக்கியப் பழமையும் உடைய இத் திருக்கோயிலின் வரலாறு அழகுறத் தொகுக்கப்பட்டுள்ளது.

இராமாயணக் கதைத் தொடர்பும், பழமொழிகளின் வாயிலாக அறியப்படும் தொன்மையும் வியப்புடையன. திருமேனிச் சிறப்பு, திருத்தலச் சிறப்பு, திருநீர்த்துறைச் சிறப்பு ஆகிய மூன்றாலும் இத்திருக்கோயில் சிறப்புடையதாக அமைந்துள்ளதால் இத்தலம் இறையடியார்களுக்குக் கிடைத்த அரும் பெரும் கலைப்புதையல் எனவே நூலாசிரியரைப் போற்றலாம்.

இத்தகு சிறப்புடைய கோயிலின் 'தல வரலாறு' எல்லார்க்கும் விளங்கும் வண்ணம் எளிய தமிழில் ஆக்கப்பட்டிருக்கிறது கண்டு வாழ்த்துகிறேன்.

அன்புடன்,

(மு.தமிழ்க்குடிமகன்)

## தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா

ஓங்கார ஆசிரமம்
சந்தோஷ் நிவாஸ்
M-14/2 கிழக்கு நிழற்சாலை,
கொரட்டூர், சென்னை - 80.


29.08.2000

*"Surrender yourself to that Supreme power.*
*That will free you from the toils of Karma"*

-Surguru Gnana Siddar Swamigal.

# ஆசியுரை

சந்தோஷம்.

உலகம் இன்புற உலகத்து உயிர்கள் இன்புற்று மெய்ஞ்ஞான மேல்நிலையடைந்து சிவஞான சாயுச்யம் அடைய மேல்நோக்கிய புண்ணியம் செய்து ஜீவன்கள் ஜீவப்பிரகாசம் அடைகின்றன. அதன் விளைவாகப் பிரகாசமடைந்த ஜீவன்கள் அநாதியான மெய்ஞ்ஞான மூலப்பொருளை நோக்கி, (கடவுளை நோக்கி) விரைகின்றன. கடவுளை அடைவதற்கு 3 மார்க்கங்கள் (வழி) உள்ளன. 1. அருவ வழிபாடு, 2. உருவ வழிபாடு, 3. அருவுருவ வழிபாடு. கடவுள் எங்கும் நிறைந்து பூரணமாய் இருக்கிறார். ஆகவே எந்த வழிபாட்டில் சென்றாலும் இறைவனை அடையலாம் என்பது அனுபூதிகள் கண்ட பேருண்மையாகும்.

சென்னையில் கோயம்பேடு என்ற திருத்தலம் உள்ளது. இங்கு திருவருள் நிறைந்த (சிவன் கோயில்) ஞானப் பெட்டகம் உள்ளது. இத்திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் சிவபெருமான் திருநாமம் குறுங்காலீஸ்வரர் என்பதாகும். குறுங்காலீஸ்வரர் உருவத்தின் மீதி பாதியான அம்பிகையின் திருநாமம் அறம் வளர்த்த நாயகி என்பது. இக்கோயிலில் 48 மூர்த்திகள் உள்ளன. இது பழம்பெரும் கோயில் கல்வெட்டுகள் நிறைந்ததுள்ளன. இதிகாசங்களில் இக்கோயிலைப் பற்றிப் பேசப்பட்டுள்ளது. லவகுசா வரலாற்றின் ஒரு பகுதி இங்கு இடம் பெற்றுள்ளது. குசலவபுரம், ராகவபுரம், கோயட்டிபுரம் போன்ற எட்டுப்பெயர்கள் இத்திருத்தலத்திற்கு உள்ளன. சூரியன், குருட்டுநாரை,

குசலவர், வால்மீகி முனிவர் போன்றோர் இத்தலத்தில் எழுந்தருளிய இறைவனை வழிபாடு செய்து பேரருள் எய்தினர். காடாக இருந்த இந்த இடத்தில் வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்து இருந்ததாக வரலாறு பேசுகிறது. பல ஆண்டுகளுக்குப் பிறகு இத்திருக்கோயிலுக்கு 11-2-2000 நாளன்று திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. இத்திருக்கோயிலுக்கு எதிரில் அ/மி.வைகுண்ட வாசப் பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. அத் திருக்கோயிலின் சிறப்பம்சங்களையும், மூர்த்தங்களின் பெருமையினையும் சுவைபட எழுத்தோவியமாக்கப்பட்டுள்ளது.

இத்தலம் முக்தி தரும் தலமாகும். இப்பெருமான் உலகத்து உயிர்களின் இடையூறுகளை நீக்க வல்லவர்.

இத்தலத்தின் மற்றொரு சிறப்பு ஸ்ரீ சரபேஸ்வர வழிபாடாகும். ஆக்கல் சக்தியும், அழித்தல் சக்தியும் இப்பெருமானுக்கு உண்டு. இப் பெருமானை ஆழ்ந்து வழிபட்டால் ஊழ்வினை நீங்கும். விஷஜந்துக்கள் பயம் விலகும். மந்திரவாதிகளின் தீய சக்திகள், ஏவல் போன்றவை நெருங்க முடியாது.

குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் தலவரலாறு, வரலாறு பூர்வமாகவும், சாத்திர நூல் குறிப்பாகவும் கல்வெட்டுகளையும் இணைத்து அருள்நயம் வெளிப்பட அழகோடு தொகுத்து சிறந்த நூலாக எழில் நிறைந்த தமிழ் நூலாக **நூலாசிரியர் திரு.வேல்.கார்த்திகேயன் அருள்மிகு அறம்வளர்த்த நாயகி சமேத குறுங்காலீஸ்வர பெருமானுக்குச் சமர்ப்பித்திருக்கிறார்.** இறை தேட்டகத்தில் முன்னணியில் இருக்கும் ஆலயச் செயல் அலுவலர் பொன். சரவணன் இந்நூல் வெளியீட்டுக்கு மூலமாக உள்ளார்.

**இந்நூல் படிப்பதற்கான நூல் என்று சொல்வதை விட உணர்ந்து உணர்ந்து மெய்ஞ்ஞான நிலை பெறுவதற்கான சீரிய நூல் என்று சொல்வது சாலச் சிறந்தது.**

இந்நூல் வெளிவர வினைபுரிந்த அத்துணையோர்க்கும் மயிலாடுதுறை பரப்பிரும்ம சற்குரு ஓம் ஸ்ரீ சித்தர் சுவாமிகளின் ஆசியை யாம் வழங்குகிறோம்.

சந்தோஷம்.

**- சுவாமி ஓங்காரானந்தா.**

**ச.சாவர்க்கர்**, இ.ஆ.ப.
ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை,
சென்னை - 600 034.

23-8-2000

# வாழ்த்துரை

கோயம்பேடு அருள்மிகு அறம் வளர்த்த நாயகி உடனுறை குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலின் தல வரலாறு வெளியிடுவது குறித்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். இத்திருக்கோயிலின் சிறப்பைப் பலரும் அறியும் வகையிலான அரிய புத்தகமாக இந்நூல் அமைந்திருக்கின்றது. பொதுவாக திருக்கோயில்களுக்குச் சென்று வழிபட்டால் கிடைக்கப்பெறும் நன்மையை இந்தத் திருக்கோயிலிலும் பெறலாம் என்பது பட்டியலிட்டுக் காட்டப்பட்டுள்ளது. வரலாற்றுச் செய்திகளுடன் புராணச் செய்திகளும் அதிக அளவில் காணப்படுகின்றன. ஆராய்ச்சிக் குறிப்புகளும் இடம் பெற்றிருக்கின்றன. தலவரலாறு என்ற தலைப்பில் முழுமையான அரிய நூலாக இந்நூல் வெளிவருகின்றது. இந்நூலைப் படிப்பவர்கள் அனைவரும் மகிழ்ச்சி அடைவார்கள் என்பது திண்ணம். திருக்கோயில் நிர்வாகத்தினருக்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ச.சாவர்க்கர்
ஆணையர்.

**அழக. இராஜசேகரன்**, B.A., B.L.,

துணை நீதிபதி மற்றும் உதவி அமர்வு நீதிபதி
சென்னை நகர உரிமையியல் நீதிமன்றம்
உயர்நீதிமன்ற வளாகம்
சென்னை - 600 104.

# மதிப்புரை

போற்றுதலுக்குரிய ஆற்றுப்படை நூல் இது! திருமுருகாற்றுப் படையைப் போலவே ஆற்றுப்படை இலக்கணம் அத்தனையும் அமையப் பெற்ற நூல் என்பது புனைந்துரை அன்று. ஆம். இது குறுங்காலீசுவரர் ஆற்றுப்படை.

சென்னை கோயம்பேடு ஒரு மாபெரும் வணிகத் தலம் என்பது நாடறிந்த ஒன்று. ஆனால் இந்நகரம் புராண, இதிகாசத் தொடர்புடைய புனிதத்தலம் என்பது நாடு அறியாத ஒன்று. அந்தப் புனிதப் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார் இந்நூலாசிரியர்.

ஆழ அகலம் அறிய முடியா அடர்த்தி மிகுந்த ஆன்மீகச் சிந்தனைகளை அத்தர் வாசம் அடிக்கும் அழகிய சொற்களால் தோரணங்களாய்க் கட்டியுள்ளார் இந்நூல் நெடுக!

திருக்கோயிலின் அமைவிடம் : உலகமே உச்சி முகரும் இராமாயணம் யாத்த வான்மீகி முனிவர் உள்ளிட்ட, பல்வேறு முனிவர்கள் இப்பகுதியில் தங்கி இருந்த சான்றுகள்; திருக்கோயில் சிற்பங்களுக்கான தத்துவ விளக்கங்கள்; இத்தலத்தில் அமைந்துள்ள கல்வெட்டுகள் தெரிவிக்கும் வரலாற்றுச் செய்திகள்; வழிபாட்டு முறைகள்; வழிபாடுகளால் அடியார் பெறும் பயன்கள். இப்படி பல்வேறு செய்திகளைப் பல்வேறு கோணங்களில் தம் எழுதுகோல் எனும் புகைப்படக் கருவியால் இனிமையாகப் படம் பிடித்திருக்கிறார் நூலாசிரியர்.

இத்தலத்தைப் பற்றிப் படிக்கும் வேகத்திலேயே கோயம்பேடு மண்ணைத் தொட்டுக் கும்பிடத் தோன்றுகிறது.

குறுங்காலீசுவரர் திருக்கோயிலின் முன் பகுதியில், கிழக்கு நோக்கிய நிலையில் வைகுண்ட வாசப் பெருமாள் விளங்குவது இவ்வாலயத்தின் தனிச் சிறப்பு!

சைவமும்-வைணவமும் கைகுலுக்கிக் கொள்ளும் கவின்மிகு காட்சி!

'அரியும் சிவனும் ஒண்ணு
அறியாதவர் வாயில் மண்ணு'

என்ற ஆன்றோர் மொழிக்குக் கட்டிட வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது.

கிழக்கு பார்த்த நிலையில் அத்தனை ஆலயங்களும் அமைந்திருக்க, வடக்கு நோக்கிய நிலையில் சிவபெருமான் இத்தலத்தில் அருள்புரிந்து வருகிறார் - இது ஓர் ஐதீகப் புரட்சி எனில் மிகையில்லை.

பாடல் பெற்ற தலவரிசையில் 32 சிவத்தலங்கள் அமைந்துள்ளன. அவ்வரிசையில் இத்திருத்தலம் அமையவில்லையே என்ற ஏக்கம் இந்நூலின் வழியே வெளியிடப்பட்டுள்ளது. அவ்வரிசையில் இடம்பெறாதது அக்காலப் புலவர்களின் கவனக்குறைவாலேயே ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற கருத்தையும் ஆசிரியர் வெளியிட்டுள்ளார்.

சிவனைத் தாங்கி நிற்கும் அடியார்களின் மனங்களே உண்மையான சிவத்தலம். அப்படியிருக்கையில் சிவனடியார்கள் அலைபோல் திரளும் இத்திருத்தலமும் சிவத்தலமே என்று எதிர்கால பக்தி இலக்கியங்கள் எழுதி வைக்கும்.

கோபுரங்கள் பெரும்பாலும் உயர்ந்த நிலையிலேயே இருக்கும். அதற்கு மாறாக, இத்திருக்கோயிலுள் இருக்கும் இராஜ கோபுரம் குறுகிய அ ளவு உடையதாக காட்சியளிக்கிறது. இராமபிரானின் புதல்வர்களான இலவ குசர் சிவபெருமானை நோக்கி பூஜிக்க, அவர்களுக்குச் சிவபெருமான் குறுகத் தரித்து அருட்காட்சி தந்தான் என்ற புராணத்திற்குப் பொருள் சேர்ப்பதாக இந்த இராஜகோபுரத்தின் குறுகிய அளவு இருக்கலாம். இதிலிருந்து, வானத்திற்கும் பூமிக்கும் விஸ்வரூபம் எடுத்த சிவபெருமான் தன் அடியார்களுக்கு ஏற்ப குன்றிமணி போலவும் உருவெடுப்பான் என்பது தெளிவாகிறது.

நாற்பது கால் மண்டபம், இலவ குசர்கள் நிற்பது போன்ற கல்தூண், ஊஞ்சல் மண்டபம், திருக்கல்யாண மண்டபம் போன்ற திருக்கோயிலின் பகுதிகள் சிறப்புற வர்ணிக்கப்பட்டுள்ளன. நூலைப் படிக்கும்போதே கோயம்பேடு - குறுங்காலீசுவரர் திருக்கோயிலைத் தரிசிப்பது போன்ற உணர்வு உள்ளத்தில் எழுகிறது.

எழுதுகோல் நிகழ்த்தும் ஒரு நேர்முக வர்ணனை என்றே கூடச் சொல்லலாம்.

வான்மீகி முனிவர் வாழ்ந்த குறிப்பும், குசலவர் சிவபெருமானைப் பூசித்த குறிப்பும், மூவேந்தர்களில் சோழன் கட்டிய கருவறையும், விசயநகர அரசர்களின் வழிவந்த புக்கராயரின் அர்த்த மண்டபமும் காலத்தினால் அழியாத கல்வெட்டுகளும் இத்தலத்தின் பெருமைகளைப் பேசுகிறது என்றால் அப்பெருமைகளை உலகின் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்ததில் இந்நூலுக்குத் தனிப் பெரும் பங்கு உண்டு.

கைவிரல்களைச் சொடுக்கிக் கொள்வதிலும் இந்நூலை உங்கள் கரங்களில் தவழ விடுவது சுகமானதாக இருக்கும். இறைவனின் நல்லாசியும் என்றும் உங்கள் பக்கமே!

ஓம் நமோ நமச்சிவாய!

வாழ்த்துக்களுடன்,

***– அழக. இராஜசேகரன்***

**முனைவர்.வ.ஜெயதேவன்**, M.A., Ph.D.,
தலைவர், தமிழ்மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை-5.

# அணிந்துரை

*கோயம்பேடு என்றதும் இன்று நினைவுக்கு வருவது மலர், காய், கனி முதலிய பொருள்களின் வணிகச் சந்தை தான். தலம், மூர்த்தி, தீர்த்தம் இம் மூன்றாலும் பெருமை பெற்றது கோயம்பேடு என்பது இன்று பரவலாக அறியப்படாத உண்மை.*

*இந்தியாவின் இரு மாபெரும் இதிகாசங்களுள் ஒன்றான இராமாயணத்தை வடமொழியில் இயற்றிய வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்துத் தங்கித் தவம் மேற்கொண்ட இடம் கோயம்பேடு. அவரது ஆசிரமத்தின் கண் இருந்த பசுக்களை இரும்பு வேலியிட்டு இராமபிரானின் மக்களான இலவன், குசன் ஆகிய இருவரும் காத்தமையால் கோயம்பேடு (கோ - பசு, அயம் - இரும்பு, பேடு - காப்பு அல்லது வேலி, கோ+அயம்+பேடு = கோயம்பேடு) என்னும் பெயர் பெற்றது.*

*வால்மீகி முனிவர் அறிவுறுத்த, இலவன், குசன் இருவரும் சிவபெருமான் அருளினைப் பெறக் கோயம்பேட்டில் தவம் மேற்கொள்ள, அத்தவத்திற்கிரங்கிக் குறுங்கால் கொண்டு சுயம்புலிங்கமாக ஈசன் எழுந்தருளி அருள்பாலித்தமையால் குறுங்காலீசுவரர் என்னும் பெயர் பெற்று அங்குக் கோயில் கொண்டுள்ளார். இத் தெய்வத் திருக்கோயிலின் தலவரலாற்றினை என் இனிய மாணவர் திருமிகு.வேல்.கார்த்திகேயன் இந்நூலின் கண் தெளிவுறத் தீட்டியுள்ளார்.*

*திருக்கோயிலின் அமைப்பு, மூர்த்திகளின் பெயர்கள், தலப்பெருமைகள், தலத்தில் பேறுபெற்றவர்கள், தீர்த்தங்கள், பூசைகள், விழாக்கள், கல்வெட்டுக் குறிப்புகள், இலக்கியங்கள், வைகுண்ட வாசப் பெருமாள் திருக்கோயில், பஞ்சகங்கள், வழிபடுவோர் பெறும் பேறுகள் முதலியன சிறப்புற இந்நூலின்கண் விளக்கப்பட்டுள்ளன. சமய ஈடுபாடு உடைய தமிழர்கள் அனைவருக்கும் பயன்படும் வகையில் எளிய இனிய நடையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது. அரிதின் முயன்று அரிய செய்திகள் பலவற்றைத் தொகுத்து இச் சீரிய நூலைப் படைத்துள்ள கார்த்திகேயனைப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன். இந்நூல் தமிழ் மக்களின் நல்வரவேற்பைப் பெறும் என்று நம்புகின்றேன்.*

**- வ. ஜெயதேவன்**

ச.மெய்கண்ட தேவன், இ.ஆ.ப.,
ஆணையர், மறுவாழ்வுத்துறை,
எழிலகம், சென்னை.

# அணிந்துரை

அருள்மிகு அறம்வளர்த்த நாயகி உடனாய குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் வரலாற்றை நம் அன்பர் வேல்.கார்த்திகேயன் அவர்கள் சுவைபட வரிவடிவில் தந்திருக்கிறார்கள். பல செய்திகளையும் முனைப்புடன் தொகுத்து அவர்கள் தந்திருக்கும் பாங்கு பாராட்டுதற்குரியது.

குறுங்காலீஸ்வரரை இராமாயண காவிய நாயகன் இராகவனுடைய பிள்ளைகளாகிய இலவன், குசன் ஆகியோரை வழிநடத்திச் சென்ற வால்மீகி முனிவரும் வழிபட்டுப் பயன் பெற்றது அவருடைய பர தத்துவத்தை நிலை நாட்டுவதாக இருக்கிறது. இங்கே அம்மன் திருவடி இரண்டும் இணையாக இல்லாமல் இடக்கால் முன்னமைந்த நிலையிலே இருப்பது, இத்தலத்தின் சிறப்பு என்று ஆசிரியர் மிக அழகுற எடுத்துக்காட்டி உள்ளார். அம்பிகையினுடைய திருவடிகள் அபரஞானத்தையும், பரஞானத்தையும் குறிக்கும். இங்கே இடக்கால் அபர ஞானத்தையும், வலக்கால் பரஞானத்தையும் காட்டுவதாக ஆன்றோர் குறிப்பர். எனவே, இத் திருக்கோயிலில் அம்பிகையினுடைய இடக்கால் முன்னமைந்திருப்பது அபர ஞானமாகிய சாத்திரம் ஓங்கிய நிலையைக் காட்டுகிறது. இங்கே அம்பிகையை வழிபடுபவர்கள் சாத்திரத்தால் மெய்யுணர்வு ஓங்கி உவமையிலா கலைஞானம் பெறுவர் என்பது குறிப்பு.

இத்திருக்கோயில் கோபுர அமைப்பின் முன்னதாக பதினாறு கால் மண்டபத்தை அமைத்துள்ளது நினைந்து போற்றற்குரியது. காரணம், இறைவன் உள்ளமைந்த உண்ணாழி (கருவறை)க்கு எதிரே பதினாறு கால் மண்டபம் அமைத்திருப்பது இறைவனுக்குப் பதினாறு உபசாரங்களைச் செய்வதாகக் குறிக்கிறது.

இப்படி பல அரிய செய்திகளை ஆசிரியர் அவர்கள் குறிப்புக் காட்டி வகுத்தமைத்திருப்பது பாராட்டுதற்குரியது.

இத்திருக்கோயிலில் சுமார் பதினான்கு கல்வெட்டுச் செய்திகள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சேகரித்து வெளியிட்டிருப்பது வரலாற்று ஆசிரியர்களுக்கு விருந்தாகும். கல்வெட்டுச் செய்திகளில் பொதுவாகக் காணப்படும் ஒன்று நமது கவனத்தை ஈர்க்கிறது. அளிக்கப்பட்ட நன்கொடைகளை எல்லாம் சிவபிராமணன் கௌதமன், பெருமாள்பட்டன் மற்றும் சிவஞானதேவன் ஆகியோர் பெற்று ஒரு அறங்காவலர் குழுவைப் போல செயல்பட்டிருக்கின்றனர். இவர்கள் இணைந்து செயலாற்றி இருப்பது சைவ வைணவ நல்லிணக்கம் அக்காலத்தில் நிலவி இருந்ததைக் காட்டி, நமக்கு நம்பிக்கையையும், நல்வழியையும் காட்டுவதாக இருக்கிறது. அருள்மிகு வைகுண்டவாசப் பெருமாள் திருக்கோயில் வரலாறும் இணைக்கப்பட்டிருப்பது சிறப்பானது.

இத்தலம் பாடல் பெற்ற தலமாக இருக்கவேண்டும் என்ற ஆசிரியரின் கருத்து ஆராய்தற்குரியது. சென்னை, அதைச் சுற்றி அமைந்துள்ள தலங்கள் பலவும் அருணகிரிநாதரால் பாடப் பெற்றுள்ளன.

திருவொற்றியூர், திருமயிலை, திருவான்மியூர், கோயம்பேடு, திருவேற்காடு, திருவலிதாயம், திருமுல்லைவாயில் ஆகிய தலங்கள் அருணகிரிநாதரால் பாடப்பெற்றவை. கோயம்பேடு தவிர்த்து மற்ற தலங்கள் அனைத்தும் தேவாரப் பாடல் பெற்றவை. இவ்வூர்களுக்கு இடையிலமைந்த ஊர் கோயம்பேடு ஆகும். ஆகவே இத்திருத்தலமும் தேவாரப் பாடல் பெற்றிருக்கலாம் என்பது சிந்தித்து தெளிவதற்குரியது.

பொதுவாக இந்த நூலைக் **கோசை நகரின் கலைக் களஞ்சியம்** என்றே பாராட்டவேண்டும்.

இந்த நன்னூலை வெளியிடுவதில் இந்து அறநிலையத்துறை செயல் அலுவலர் பொன்.சரவணன் அவர்கள் காட்டிய ஆர்வமும், ஆதரவும் தமிழ் மற்றும் சைவ அன்பர்களால் போற்றிப் பாராட்டற்குரியது.

தமிழும் சைவமும் தழைத்து இனிது ஓங்குக.

— *மெய்கண்ட தேவன்.*

**அ.சுப்பிரமணியன்**, M.A. (S.W), M.A.(Tamil)., B.L.

உதவி ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை
சென்னை - 34.

14.9.2000

# நூல் சிறப்புரை

சென்னை மாநகரக் கோவில்களில் கோயம்பேடு அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோவில் மிகவும் தொன்மை வாய்ந்த கோவிலாகும். இராமரின் பிள்ளைகள் இலவனும் குசனும் வழிபட்ட சிறப்புடையது இக்கோவில். இத்திருக்கோவிலுக்கு இந்த ஆண்டு தொடக்கத்தில் *(11-2-2000 - வெள்ளிக்கிழமை)* திருக்குட நீராட்டு விழா இனிதே நடைபெற்றது. தற்போது அருள்மிகு அறம்வளர்த்த நாயகி உடனுறை அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோவிலின் தலவரலாறு வெளியிடப்படுகிறது.

இந்நூலில் திருக்கோவில் பற்றிய இருப்பிடம், கோவில் அமைப்பு, அடையும் பேறுகள், தலப்பெருமைகள், இத் திருக்கோவிலை வணங்கி பேறு பெற்றவர்கள், தீர்த்தம், மூர்த்திகள், புராண வரலாறுகள், அருகே உள்ள அருள்மிகு வைகுண்டவாசப்பெருமாள் திருக்கோவிலின் பெருமைகள் என இன்னோரன்ன அனைத்து செய்திகளும் இடம்பெறுமாறு அமைந்திருப்பது பாராட்டுதற்குரியது.

இத்திருக்கோவில் மண்டபத்தில் அமைந்துள்ள அருள்மிகு சரபேஸ்வரருக்கு ஞாயிறு தோறும் ராகு காலத்தில் சிறப்பான பூசனை செய்யப்பட்டு வருவதை ஆயிரக்கணக்கான பக்தர்கள் கண்டு இன்புற்று பெரும்பயன் அடைகின்றனர். பக்தப் பெருமக்கள் அனைவரும் இந்நூலைப் படித்துத் திருக்கோவிலை வழிபட்டுப் பயன் பெற்று பெரும்பேறு பெற வேண்டுகிறேன்.

***அ.சுப்பிரமணியன்.***

**ப.தனபால்**,எம்.ஏ., பி.எல்.,
இணை ஆணையர் (தலைமையிடம்)
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை 600 034.

# முன்னுரை

"மூர்த்தி தலம்தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்க்கோர்
வார்த்தை சொல சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்று தாயுமானவசுவாமிகளின் அருள்வாக்கிற்கு இணங்க மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றாலும் சிறப்புற்று விளங்கும் திருத்தலம் கோயம்பேடு அருள்மிகு குறுங்காலீசுவரர் ஆலயம் ஆகும்.

இராமபிரானின் புதல்வர்களான குசனும், லவனும் வழிபட்டு அருள் பெற்றமையால் குசலபுரீசுவரர் ஆலயம் எனவும் இவ்வாலயம் வழங்கப்பட்டு வருகின்றது. நந்தியும், சூரியனும் வழிபட்ட திருத்தலம்.

அருணகிரிநாதர் இங்கெழுந்தருளியுள்ள முருகப்பெருமானைத் திருப்புகழ் பாடிப் போற்றியுள்ளார்.

இவ்வாலயத்தில் நூதன பஞ்சவர்ண நவக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

தீராத பிரச்சனைகளைத் தீர்த்துவைக்கும் சரபேஸ்வர மூர்த்திக்கு இவ்வாலயத்தில் ஞாயிறுதோறும் சிறப்பான வழிபாடு நடைபெற்று வருகின்றது.

இத்தகைய பெருமை வாய்ந்த கோயம்பேடு அருள்மிகு குறுங்காலீசுவரர் விரிவான தலவரலாறு நூல் வெளியிடப் பெறுவது அறிந்து நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பயன்மிகு நூலை மெய்யன்பர்கள் அனைவரும் விரும்பிப் படித்து எல்லாம் வல்ல அறம்வளர்த்த நாயகி உடனுறை அருள்மிகு குறுங்காலீசுவரர் திருவருள் பெற்று இம்மை, மறுமைப் பயன்கள் பெற்று இன்புற அன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

அன்புடன்

*ப.தனபால்*

**இரா.சுப்பிரமணியன்**, பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையர்
இந்து சமய அறநிலையத்துறை
சென்னை - 34.

# நூல் சிறப்புரை

கோயம்பேடு, அருள்மிகு குறுங்காலீசுவரர் திருக்கோயில் தலவரலாறு எனும் நூல் சிறப்பாக எழுதப்பட்டு அழகுற அச்சிடப்பட்டு உங்கள் மலர்க்கரங்களில் தவழ்கின்றது. இந்நூலை மிகச் சிறப்பாக வடிவமைத்து நம் கரங்களில் ஒப்படைத்ததற்கு நூலாசிரியர் திரு.வேல் கார்த்திகேயன் அவர்களை மனமுவந்து வாழ்த்துகின்றேன்.

சென்னையிலுள்ள திருவொற்றியூர், மயிலாப்பூர், திருவான்மியூர், திருமுல்லைவாயில், திருவேற்காடு முதலான பாடல் பெற்ற சிவத்தலங்களோடு கோயம்பேடும் ஒன்றாக வைத்துப் போற்றக்கூடிய தலச் சிறப்புடையது. இத்திருத்தலமாகிய கோயம்பேட்டில் வீற்றிருக்கின்ற அருள்மிகு குறுங்காலீசுவரரின் பெருமைகளையும் உடனுறைகின்ற அறம் வளர்த்த நாயகியம்மனின் திருப்புகழையும் இந்நூல் சிறப்பாக விளக்குவதோடு இத்திருத்தலத்தைப் பற்றியும் இன்ன பிற தகவல்களையும் நமக்குத் தருகின்றது.

அக்காலத்தில் கோயம்பேடு, கோசை நகர் குசலவபுரி எனும் குசலவபுரம், பிராயசித்த புரம், கோயட்டிபுரம் முதலான பல பெயர்களோடு எல்லா வளமும் சூழ்ந்த நகரமாக விளங்கியுள்ளது. இங்குள்ள ஈசன் குறுங்காலீசுவரன் என்னும் லிங்க ரூபமாக எழுந்தருளியுள்ளார். அவரின் துணைவி, அசுரர்களை அழிப்பதற்காக இடக்காலை முன் வைத்த ஆங்கார ரூபமாக 'அறம் வளர்த்த நாயகியம்மன்' எனும் பெயரில் வீற்றிருந்து அருள் புரிந்த சிறப்பை நயமுடன் இந்நூல் கூறுகிறது. இங்கு முருகப்பெருமான் எழுந்தருளி அருள்புரிந்த சிறப்பைக் கூறுவதோடு மட்டுமின்றி அருணகிரிநாதரின் திருப்புகழ்ப்பாடல் உணர்த்துகிறது. இத்தலத்தில் வீற்றிருக்கும் மூர்த்தியானவர் வேறு எந்தத் தலத்திலும் காணமுடியாத சிறப்புடைய குறுங்காலீசுவரராகக் காட்சி தந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கிறார். எல்லாக் கோயில்களிலும் சிவபிரான் கிழக்குத் திசை

நோக்கிய நிலையில் வீற்றிருப்பது இயல்பு என்பது நாம் அறிந்ததே. மாறாக குபேர திசையான வடதிசையை நோக்கிச் சிவபிரான் வீற்றிருப்பதால் இங்கு வழிபடும் அன்பர்களுக்கு ஐஸ்வர்யம் பெருகும் என்பது ஐதீகமாக கருதப்பட்டு வருகிறது. பீடத்தில் அமைந்துள்ள ஆவுடையாருக்கு மேல் 4 அங்குல அளவில் மடக்கினைக் கவிழ்த்து வைத்தது போன்ற நிலையில் இருக்கும் லிங்கம் வேறு எங்கும் காணமுடியாத ஒன்றாகும். இக்கோயிலை வழிபட்ட நம் முன்னோர்கள் கோயிலைப் பெருமைப்படுத்துவதாக அமைந்த

"வடக்குப் பார்த்த சிவனும் இல்லை

மடக்குப் போன்ற லிங்கமும் இல்லை"

எனும் இப்பழமொழியை நூலாசிரியர் எடுத்தியம்பியிருப்பது அவரின் நுண்ணறிவினையும் இத்திருக்கோயிலைப் பற்றி, ஆழ்ந்து ஆராய்ந்து இருப்பதனையும் உணர்த்துகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் சேர்ந்திருப்பது இத்தலத்தின் சிறப்பம்சங்களாகும். இத்தலத்தில் இராமனின் பிள்ளைகளான இலவனும், குசனும் இந்த சுயம்புலிங்கப் பிரானைத் தீர்த்தம் உண்டாக்கி வழிபட்ட சிறப்பும் நந்தியம்பெருமான் சித்தங் கலங்கிய நிலையில் வந்து வழிபட சித்தம் தெளிந்ததும் நந்தி மூக்கணாங்கயிற்றுடன் திகழ்வதும் ஆதி பிரதோஷம் முதன் முதலில் தொடங்கியதும் இத்தலத்தில் தான் என்பன போன்ற பல பெருமைகளை எடுத்து இயம்பியிருப்பது இந்நூலுக்கு மேலும் மெருகூட்டுகிறது.

கருவறையின் முகப்பில் அமைந்துள்ள 40 கால் மண்டபத்தில் அசுவமேத யாகத்திற்காகத் திக்கு விசயம் செய்த குதிரையைத் தடுத்தவுடன் இலக்குவன் எதிர்த்துச் செல்ல அத்துமீறி லவகுசர்களைக் கடக்க நினைத்ததால் அவரை எதிர்த்து வீழ்ச்சியடையச் செய்த குதிரையைக் கயிற்றுடன் பற்றியிருப்பது போன்ற நிலையிலுள்ள சிற்பத்தின் மூலம் இந்த இடத்தில் வரலாற்று நிகழ்ச்சிகள் நிகழ்ந்துள்ளன. இத்திரு ஊரில் வரலாற்று நிகழ்வு நடந்ததை ஆசிரியர் சுட்டிக் காட்டியிருப்பது இத்தலத்திற்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

விஷ்ணுவின் ஆங்கார ரூபமான நரசிம்ம அவதாரம் எடுக்கும் போது இரணியனைக் கொன்றதால் அசுர ரத்தம் தலைக்கேறி வெறியோடு உலவ

தேவர்கள் சிவனைக் கண்டு அவரின் உக்ர ரூபத்தை அடக்க வேண்டியதால் சிவன் எடுத்த வடிவமே சரபேஸ்வர வடிவம் எடுத்துச் சாந்தப்படுத்துகின்றார். இவ்வரலாறு கோயிலின் வெளியிலுள்ள 16 கால் மண்டபத்தூணில் சிற்பமாக அமைந்துள்ளது. பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில் இராகு கால நேரத்தில் மக்கள் வெள்ளம் வந்து வணங்கி வழிபாடு செய்கின்றனர். இதனால் பில்லி, சூனியம், ஏவல் முதலான செய்வினைகள் வழிபடுவோரை நெருங்காது என்பது ஆன்றோர் வாக்கு.

சைவமும், வைணவமும் இருவேறு பிரிவுகளாக இருந்த காலக் கட்டத்திலும் அருள்மிகு குறுங்காலீசுவரர் திருக்கோயிலும், அருள்மிகு வைகுண்ட வாசப் பெருமாள் திருக்கோயிலும் அருகருகே அமைந்திருப்பது அன்று முதல் இன்று வரையுள்ள சமய ஒற்றுமையை எடுத்துக் காட்டுகிறது.

எனவே நாமும், (வாசிக்கின்ற ஆன்மீக அன்பர்களும்) குறுங்காலீசுவரனை வழிபட்டு வாழ்வில் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ்வாங்கு வாழ இந்த என் ஐயனை எண்ணத்தில் வைத்து வணங்குகின்றேன்.

மேலும் ஒரு சிறப்பு மிக்க தலத்தில் வரலாற்றை குறிப்பாக இத்தனை நாள் பேரும் புகழும் பெற்று இருப்பினும் வேறு யாரும் இத்தல வரலாற்றினை எழுதாமல் முதன்முதலில் இவர் நெஞ்சில் இந்த எண்ணத்தை விதைத்து இவராலேயே இயற்றப்படவேண்டும் என்பது சிவனது எண்ணமாக இருந்திருக்கிறது. அவ்வண்ணமே அன்னாரும் பக்தி சிரத்தைக் குறையாமல் ஆன்மீக மணம் கமழ இப்புத்தகத்தை எழுதிக் கொடுத்துள்ளார்.

இப்புத்தகத்தின் எழிலை மேலும் எடுத்தியம்ப எத்தனித்தேன். எண்ண வார்த்தை இல்லை. என்னுள் வார்த்தையே இல்லை. இந்த எழிலை எழில் கூட்ட வாழ்த்தி வணங்கி நன்றி உரைப்பதோடு இப்புத்தகம் எழுதியமைக்கு நன்றி. ஆசிரியரின் எழுத்துப் பணி தொடர வாழ்த்தி எனக்கு வாழ்த்துரை எழுதும் பணி தந்தமைக்கு மகிழ்ந்து மனமுவக்கிறேன்.

*இரா.சுப்பிரமணியன்,*

# பதிப்புரை

தர்மமிகு சென்னையில் கோயம்பேட்டில் வரலாற்று சிறப்புமிக்க குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் ஆன்மீக பக்தர்களாலும், ஆன்றோர்களாலும் போற்றி வழிபடும் ஆலயமாக விளங்குகிறது. இத்திருக்கோயிலின் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா தமிழ்நாடு இந்து சமய அறநிலயத் துறை அமைச்சர் மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் சீரும் சிறப்புமாக நடைபெற்றது.

இத்தலத்தின் பெருமைகளை பக்தர்கள் அறிந்து வழிபட ஏதுவாக இத்தல வரலாறு வெளிவருவதற்கு ஊக்கமூட்டி, வாழ்த்துரை வழங்கியுள்ள மாண்புமிகு அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும், ஆசியுரை வழங்கியுள்ள சுவாமி ஓங்காரனந்தா அவர்களுக்கும், ஆணையர் திரு.சாவர்க்கர் மற்றும் நூலைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கியுள்ள சான்றோர் பெருமக்களுக்கும் ஆலய நிர்வாகத்தினர், பக்தர்கள், அறநிலையத்துறை சார்பாக மகிழ்ச்சி கலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பக்தர்கள் வேண்டுகோளுக்கிணங்க இத்தல வரலாற்று நூலினை வரலாறு, புராண, இலக்கிய, சமய ஆதாரத்துடன் செம்மையாக ஆக்கியுள்ள மயிலம் செந்தமிழ் நம்பி திரு. வேல். கார்த்திகேயன் அவர்களது பக்தி ஈடுபாட்டினைப் பாராட்டி, இந்நன்முயற்சிக்கு ஆன்மீக மெய்யன்பர்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இப்புத்தகத்தினைச் சீரிய முறையில் அச்சிட்டுக் கொடுத்த பதிப்பகத்தாருக்கு எங்களது பாராட்டுதலும் நன்றியும் உரித்து.

இந்நூலை, ஆன்மீக மெய்யன்பர்கள் படித்துப் பயனடைய வேண்டுகிறோம்.

**A. ராஜப்பன்**, தலைவர், அறங்காவலர் குழு.

*பொன். சரவணன்*
*செயல் அலுவலர்*

அறங்காவலர்கள் :

S. சவுரி ராஜிலு

A. வெற்றிசெல்வி

R. சுகுமார்

V. ராமச்சந்திரன்

மயிலம் வேல். கார்த்திகேயன்

## நன்றிப்பெருக்குடன்...

அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் தலவரலாற்று நூலை அருள்மிகு அறம்வளர்த்த நாயகி உடனுறை குறுங்காலீஸ்வரரின் திருவடித் தாமரைகளுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

எனது எழுத்துகளை நேசத்துடன் நேசிக்கும் அன்பு நெஞ்சங்களே! உங்கள் மலர்க்கரங்களில் தவழ்ந்து கொண்டிருப்பது அடியேனது மூன்றாவது அறிவுக் குழந்தையாம் (நூல்). யான் எழுதிய முதல் நூலான "சென்னையில் திருப்புகழ்த் தலங்கள்" என்னும் குறிக்கோள் தூணின் மேல் உருவான சிறு சிங்காரமண்டபமே "குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் தலவரலாறு" என்னும் மூன்றாவது நூலாகும்.

எனது முதல் நூலைத் திருக்கோயில் செயல் அலுவலர் திரு.பொன். சரவணன், அவர்களும், திரு.ஆ. இராஜப்பன் அவர்கள் உள்ளிட்ட அறங்காவலர் குழுவும் படித்து இன்புற்றனர். காலம் கடந்த வரலாற்றுச் சிறப்பும், இலக்கியச் சீர்மையும், புராண, இதிகாச காலத் தொடர்புமிக்க இக்கோயிலுக்குத் தலவரலாறு இல்லையென்பதைத் தெரிவித்து அடியேனைத் தொகுத்து நூலாகத் தரும்படி அன்புடன் வேண்டினர். தொகுத்த பின் உயர்திரு ஆணையர் திரு.ச. சாவர்கர் இ.ஆ.ப. அவர்களின் பெருமுயற்சியால் நூலாக அச்சிட்டுத் தமிழ்ப்பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு முனைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன் அவர்களின் பொற்கரங்களால் இந்நூல் வெளியிடப்படுவது எனக்குப் பேருவகையைத் தந்தது. இதனை யான் கிடைத்தற்கரிய அருட்செல்வமாகவே கருதுகிறேன்.

இங்கு எழுந்தருளியுள்ள இறைவனின் பெருமையும், வரலாற்றுப் பழமையும், புராண இதிகாச காலத் தொடர்பினையும் அறிவதற்குப் பல சான்றாதாரங்களை அரிதின் முயன்று தொகுத்தேன்.

மேலும் முன்னோர்கள் வழங்கி வந்த கோவில் மற்றும் ஊர் பற்றிய செவிவழிச் செய்திகளையும் சொல்லியுதவியவர்கள் பலர். அவர்களுள் மிகவும்

குறிப்பிடத்தக்கவர்கள் திரு.சதாசிவ குருக்கள், திரு.ராமன் பட்டாச்சாரியர், திரு.கண்ணன் பட்டாச்சாரியர் மற்றும் ஊர்ப்பெரியவர்கள் முதலானோர்கள். அவர்களுக்கு இவ்வினிய வேளையில் எனது நெஞ்சு நெகிழ்ந்த நன்றியினைத் தெரிவிப்பது என் கடப்பாடு.

தலவரலாற்றுக்குரிய செய்திகளைத் தொகுக்கும் போது பல சிரமங்கள் ஏற்பட்டது. அப்போது மனம் தளராவகையில் எளிய வழிகாட்டியுதவியவர் வலையப்பேட்டை திரு.ரா. கிருஷ்ணன் அவர்கள்.

காலம் பல கடந்து நின்றாலும் வரலாற்று மூலங்களை அறியும் ஆதாரங்களுள் ஒன்றாக விளங்குவது கல்வெட்டுகள். கோயிலில் உள்ள கல்வெட்டுகள் பல உள்ளன என்பதை அறிந்தேன். இது தொடர்பாக பல கல்வெட்டாய்வு நிறுவனங்களைத் தொடர்பு கொண்டேன். அவர்களும் உதவினார்கள். South Indian EPIGRAPHY on India 1933-34 மேலும் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையில் கல்வெட்டாய்வாளராகப் பணியாற்றுபவர் திரு.சு. இராசவேல் அவர்களுக்கும் தமிழ்க் கல்வெட்டுகளையும் ஆய்வு செய்ததை இந்நூல் மெருகேறிட தந்துதவியவர் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் பரப்பாய்வுத்துறையில் பணியாற்றும் M.சேரன் அவர்களுக்கும் யான் கைம்மாறாக என்ன செய்வேன்.

அருள் நலமிக்க சிறந்த நூல் என தவத்திரு சுவாமி ஓங்காரநந்தா அவர்கள் ஆசியுரை வழங்கியுள்ளார்கள். இது யான் செய்த புண்ணியமே. மாண்புமிகு அமைச்சர் முனைவர் திரு. மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், இறையடியார்களுக்குக் கிடைத்த அரும்பெரும் கலைப்புதையல் எனப் பாராட்டி வாழ்த்துரை வழங்கியுள்ளார். சமய இலக்கிய ஆராய்ச்சிக் குறிப்புக்களடங்கிய ஞானப் பெட்டகம் என வாழ்த்திய ஆணையர் திரு.ச. சாவர்கர் இ.ஆ.ப. அவர்கள், திரு.மெய்கண்ட தேவன் இ.ஆ.ப. அவர்கள் கோசை நகரின்கலைக் களஞ்சியம் என்று பாராட்டியுள்ளார். துணை நீதிபதி திரு. அழக. இராஜசேகரன் அவர்கள் நூலைப் படிக்கும் வேகத்திலேயே கோயம்பேடு மண்ணைத் தொட்டு க் கும்பிடத் தோன்றுகிறது என்று மதிப்புரை தந்துள்ளார். முனைவர் ஜெயதேவன் அவர்கள் அணிகலனாக அணிந்துரையினை அணிவித்துள்ளார். நூலாசிரியர் நெஞ்சில் விளைந்த எண்ணம் சிவனது எண்ணமே எனச் சிறப்புற பாராட்டிய பெருந்தகையாளர் இணை ஆணையர் திரு.இரா. சுப்ரமணியம் அவர்கள். பயன்மிகு நூல் என நூலுக்கு முன்னுரையினை முகவரியாகத் தந்தவர் திரு. ப. தனபால் அவர்கள். இந்நூல்

திருக்கோயில் வெளியீடாகத் திகழ்வதற்குத் துணைபுரிந்தவர்கள் செயல் அலுவலர் திரு.பொன். சரவணன் அவர்கள், அறங்காவலர்கள் குழு. மேற்கூறிய சான்றோர்களுக்கு நெஞ்சு நெகிழ்ந்த நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமை கொள்கிறேன்.

முனைவர் அறிவன் திரு.மா. சற்குணம் அவர்களும், ஞானக்கருவூலமாகிய நூல்களைத் தந்து உதவியவர் திரு.கருணை. நக்கீரன் அவர்களும், எனது மாமா திரு.சுந்தரம் அவர்களும், எனது அத்தை திருமதி. ஞானாம்பிகை சரவணபவானந்தன் அவர்களும் இந்நூல் சிறப்பாக அமைந்திட ஆலோசனை வழங்கியவர்கள் ஆவர்.

என்னால் இயன்றவரையில் எண்ணி எண்ணி எந்த முக்கிய நிகழ்ச்சிகளையும் விடாமலும் கதைத் தொடர்பு விட்டுபோகாமலும் இந்நூலைத் தொகுத்துள்ளேன்.

நான் புதுப்புது முயற்சிகளில் ஈடுபடும் போதெல்லாம் ஊக்க உரை தந்து மகிழ்வதும் மெய்ப்புத்தாள்களை திருத்தும் பணியிலும் செம்மையுடன் ஒத்துழைத்தவர்கள் திரு.க.கணேசன் அவர்கள், எனது தங்கை வேல்.மகேஸ்வரி அவர்கள், திருமதி மாலா. வெங்கட்ராமன் ஆகியோர்க்கு நான் மறந்தாலும் என் நெஞ்சம் நன்றி மறவாது.

ஆன்மிக நெறியில் ஈடுபடுத்திக்கொள்ள ஊக்கப்படுத்திய எனை ஈன்ற தாய் தந்தையர் பரிமளா வேல்முருகானந்தன் அவர்களை இவ்வினிய நேரத்தில் உள்ளன்போடு வணங்கி நினைவுகூர்கிறேன்.

நூல் வெளிவர பெரும் துணைப் புரிந்தவர்கள், படிக்கும் மெய்யன்பர்கள், இலக்கிய ஆர்வலர்கள் எஞ்சி நின்ற அன்பு நெஞ்சங்கள் யாவர்க்கும் என் இதயத்தில் நன்றியைப் பதிவு செய்வதில் பெருமகிழ்வு அடைகிறேன்.

ஆன்மீக மெய்யன்பர்கள் படித்து உணர்ந்தால், மக்கள் இறையுணர்வையும் கலையுணர்வையும் சாத்வீக பண்பையும் பெற முடியும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாகும்.

5/38, சன்னதி வீதி,
மயிலம்-604 304.

*நலம் நாடி,*

**வேல். கார்த்திகேயன்**

# ஆலயம்

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்ற இறைவன், தன்னை நாடி வரும் அடியவர்களுக்கும், அன்பர்களுக்கும் அருள்பாலிக்கும் இடங்களே ஆலயங்களாகும். ஆலயங்களில் ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன், உலகத்திலுள்ள பல உயிர்களும் துன்பம் நீங்கி இன்பம் அடைய வேண்டும் என்றும், உய்வடைய வேண்டும் என்றும், அருவ நிலையிலிருந்து இறங்கி உருவ நிலையில் திருமூர்த்தமாக எழுந்தருளி மக்களுக்கு அருள் செய்து வருகின்றார்.

*"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"*

*"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"*

*"கோவில் விளங்க குடி விளங்கும்"*

*"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"*

- என்பன பழமொழிகள் என்றாலும் அவை உணர்த்தும் செய்திகள் ஏற்றுக் கொள்ள வேண்டியனவாகும். எங்கும் பரந்து விரிந்த உலகில் இறைவனை, உருவநிலையில் எழுந்தருளச் செய்வது தான் ஆலயத்தின் (கோயிலின்) பணியாகும். அன்பர்கள் மனத் தூய்மையுடன் சென்று, பூசைக்குரிய பொருள்களைக் கொடுத்து இறைவனைப் பொருள்சேர்

புகழினால் பாடி, அவனருளால் அவன் தாள் வணங்கி அருள்பெற வேண்டும். இதுவே மனித உயிரின் பிறவிக் கடமையாகும். வந்த, வருகின்ற தீவினை நீங்கி, இப்பிறப்பிலும் மறுபிறப்பிலும் இன்பமுடன் வாழலாம். வீடு பேறு எனும் முத்திப் பேறு பெற்று உய்யலாம்.

## கோயம்பேடு:

கோயம்பேடு என்றவுடன் நம்முடைய நினைவுக்கு உடனடியாக வருவது, வீட்டிற்குத் தேவையான அனைத்து வகையான காய்கறிகள், பழங்கள், கீரை வகைகள் விற்கும் காய்கறி அங்காடிதான். கோயம்பேடு மார்க்கெட்டிலிருந்தும் (KOYAMBEDU MARKET) பேருந்து நிறுத்தத்தி லிருந்தும் 10 **நிமிட நடை தூரத்தில்** உள்ள **சிவன் கோயில்** புராண, இதிகாச காலத்தோடு தொடர்புடையது. இத்திருக்கோயில் பழமையும், சிறப்பும் வாய்ந்தது. கருவறையிலிருக்கும் மூலவராகிய சுயம்பு லிங்கம், இராமனின் பிள்ளைகளான இலவன், குசன் ஆகியோர் போற்றி வழிபட்ட சிறப்புடையது. இங்கு, குறுங்காலீஸ்வரர் என்னும் பெயர் தாங்கி வடக்கு நோக்கிய நிலையில் சிறிய பாணலிங்க வடிவில் அமைந்து சிவபெருமான் அருள்புரிந்து வருகின்றார்.

முன்னோர்கள் வழங்கி வந்த **பழமொழியால் சுவாமியின் பெருமையையும், தலத்தின் பெருமையையும்** எளிதில் அறியலாம்.

*"கோயம்பேடு என்ற ஊரும் இல்லை*
*குறுங்காலீஸ்வரர் என்ற பேரும் இல்லை"*

*"வடக்குப் பார்த்த சுவாமியும் இல்லை*
*மடக்குப் போன்ற இலிங்கமும் இல்லை"*

தர்ம சம்வர்த்தனி எனும் அறம் வளர்த்த நாயகி அம்மையின் இடது திருவடி முன்னிறுத்திய நிலையில் விளங்குவது இத்தலத்தின் சிறப்பாகும். அருணகிரி நாதர் முருகப் பெருமானைப் பாடிய திருத்தலம் இது. தமது திருப்புகழில் முருகனைக், **"கோசை நகர் வாழ வரும்** ஈசனே" என்று போற்றிப் பாடியருளினார். இது, **இதிகாச காலத்தோடு தொடர்புடைய இராமனின் பிள்ளைகளான இலவனும், குசனும் தன் தந்தையை எதிர்த்துப் போரிட்ட பாவத்திற்காக ஈசனைப் போற்றி தோஷம் நீங்கப் பெற்றுப் புண்ணியமடைந்த திருத்தலம்.** வரலாற்றுச்

சிறப்புகளைப் பறைசாற்றும் **14 தமிழ்க் கல்வெட்டுக்கள்** இத்திருத்தலத்தில் அமைந்துள்ளன. **மூன்றாம் குலோத்துங்க சோழன், விஜய நகர அரசரான வீர புக்கராயர்** முதலானவர்கள் திருப்பணிகள் செய்து நிவந்தங்கள் அளித்துள்ளனர். குசலவர்கள், அசுவமேத யாகக் குதிரையைக் கடிவாளத்துடன் பற்றி உள்ளதாக அமைந்த சிற்பம், நாற்பது கால் மண்டபத்தூணின் நுழைவாயிலில் அமைந்திருப்பது இன்றும் மக்கள் கண்டு மகிழும் அளவில் உள்ளது. குறும்பலா தலவிருட்சமாகவும், இலவ குசர்கள் பூசித்தத் திருக்குள தீர்த்தமும் உள்ளது. சுருங்கக் கூறின் **மூர்த்தி, தலம், தீர்த்தம்** ஆகிய மூன்றினாலும் **சிறப்புற்று விளங்கும் திருத்தலம் கோயம்பேடு** எனில் மிகையாகாது.

அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலும், எதிரில் அமைந்துள்ள அருள்மிகு வைகுண்ட வாசர் பெருமாள் கோயிலும் ஓரிடத்திலே அமைந்திருப்பது, **சைவ-வைணவ சமய ஒற்றுமையைக் காட்டும் திருத்தலமாக கோயம்பேடு,** சென்னை மாநகரத்தில் தன்னிகரற்று விளங்குகின்றது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## ஊரைச் சுற்றிலும் கோயில்கள்

1. இலவ புரீஸ்வரர் கோயில்
2. வாலீஸ்வரர் கோயில்
3. திருமங்கலீஸ்வரர் கோயில்
4. கிராம தேவதை - சேமாத்தம்மன் கோவில்

சென்னை மாநகர எல்லையாகக் "கோயம்பேடு' திகழ்கின்றது.


அஞ்சலகக் குறிப்பு எண் : 600 107.

**சென்னை மாநகராட்சி**

மண்டலம் : 5

கோட்டம் : 65

# அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் தரைப்பட விளக்கம்



# அருள்மிகு குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் தரைப்பட விளக்கம்

1. அருள்மிகு குறுங்காலீஸ்வரர்
2. அருள்மிகு அறம் வளர்த்த நாயகியம்மன்
3. நந்தியெம்பெருமான்
4. சிம்ம வாகனம்
5. அனுக்ஞை விநாயகர்
6. உற்சவ மூர்த்திகள் எழுந்தருளும் மேடை
7. துவார பாலர்
8. வெண்சாமரை விநாயகர்
9. பிரம்மா
10. சண்டிகேஸ்வரர்
11. தட்சிணாமூர்த்தி
12. மகா விஷ்ணு
13. விஷ்ணு துர்க்கை
14. சந்திரன்
15. நடராஜர் சபை
16. சூரியன்
17. விநாயகர் முதல் நாகர் மேடை வரை
18. அலங்கார மண்டபம்
19. துயர் தீர்க்கும் தும்பிக்கை துவார விநாயகர்
20. பால சுப்பிரமணியர்
21. பலிபீடம்
22. நவக்கிரக சந்நிதி
23. அ/மி விசாலாட்சி உடனுறை காசி விசுவநாதர்
24. அ/மி சோமாஸ்கந்தர் உற்சவர் சந்நிதி
25. கால பைரவர்
26. நாற்பது கால் மண்டபத்தூண் நுழைவாயில்
27. சித்தந் தெளிந்த நந்தி
28. கொடிக்கம்பம்
29. பலிபீடம்
30. கபால பைரவர்
31. திருக்கிணறு
32. ஊஞ்சல் மண்டபம்
33. மடைப்பள்ளி
34. பசுமடம்
35. வில்வமரம்
36. அ/மி வில்வ விநாயகர்
37. அ/மி அண்ணாமலையார் சந்நிதி
38. அ/மி வள்ளி தெய்வயானையர் உடனுறை முருகன் சந்நிதி
39. திருக்கல்யாண மண்டபம்
40. இராச கோபுரம்
41. அதிகார நந்தி
42. வாகன மண்டபம்
43. 16 கால் மண்டபம்
44. இலவகுச தீர்த்தம்
45. அ/மி வைகுண்டவாசப் பெருமாள் கோயில்
46. அ/மி ஆஞ்சநேயர் சந்நிதி
47. அரசடி விநாயகர்
48. அரசமரம்
49. குறுங்காலீஸ்வ ரர் கோயில் தெரு

# குறுங்காலீஸ்வரர் திருக்கோயில்

## இருப்பிடம்:

சென்னை மாநகரத்தின் எல்லையாக விளங்குவது கோயம்பேடு. தாம்பரத்திலிருந்து ஆவடிக்குச் செல்லும்போது வடபழநிக்கு அருகிலும், சென்னை பாரிமுனையிலிருந்து பூவிருந்த வல்லிக்குச் செல்லும் வழியில் அரும்பாக்கத்தை அடுத்தும் கோயம்பேடு என்னும் திருத்தலம் அமைந்துள்ளது. கோயம்பேடு பேருந்து நிறுத்தத்திலிருந்து 10 நிமிட கால்நடை தூரத்தில் குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது.

## கோயிலின் அமைப்பு:

பொதுவாக, திருக்கோயில்கள் சூரியன் உதிக்கும் கிழக்குத் திசை நோக்கி அமைந்திருப்பது இயல்பு. வடதிசையைப் பார்த்த நிலையில் இத்திருக்கோயில் அமைந்திருப்பது ஓர் சிறப்பம்சமாகும். 226 அடி நீளமும் 139 அடி அகலமும் கொண்ட அளவில் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

''**கோபுர தரிசனம் கோடி புண்ணியம்**' என்பார்கள். அதற்கிணங்க, கோபுரங்கள் பெரும்பாலும் உயர்ந்த நிலையில் விளங்கும். அதற்கு மாறாக இத்திருக்கோயிலின் **இராச கோபுரம் குறுகிய அளவு உயரமும், அகலமும்** கொண்டு 3 நிலைகளுடன் விளங்குகின்றது. கோயிலின் மதில் சுவர் உயரமும் நீளமும் உடையது. இராச கோபுரத்தின் எதிரில் 16 கால் மண்டபம் சிற்பச் சிறப்புடன் விளங்குவதைக் காணலாம்.

கருவறையில் மூலவர், சுயம்புலிங்கப் பெருமானாக குறுங்காலீஸ்வரர் எழுந்தருளியுள்ளார். சுவாமி ஆவுடையாருக்கு மேல் நான்கு அங்குல உயரத்துடன் அகல் விளக்கினைக் (மடக்கு) கவிழ்த்து வைத்ததுபோல் சாய்வான நிலையில் வடக்குத் திசை நோக்கியபடி அமர்ந்துள்ளார். கோமுகம், வலப்பக்கம் உள்ளது. சண்டிகேஸ்வரர், கிழக்குத் திசையில் அமர்ந்து, மேற்கு நோக்கிக் காணப்படுகின்றார். நான்கு திருக்கரங்களுடன் அனுக்ஞை விநாயகர் எழுந்தருளியுள்ளார். மூலவருக்கு எதிரில் சிறிய அளவில் நந்தியெம்பெருமானும், பலிபீடமும் அமைந்துள்ளது. கருவறை மண்டப நுழைவாயிலில் இரு துவார

குறுங்காலீஸ்வரரை வழிபாடு செய்து பேறு பெற்ற **சூரியனின் திருவுருவம்** அமைந்துள்ளது. அருகில் சந்திரன் தனி நிலையில் உள்ளார். உற்சவமூர்த்தியாகிய நடராஜர், சிவகாமியம்மை, மாணிக்கவாசகர் முதலான மூவரும் எழுந்தருளியுள்ளனர். கருவறைச் சுவரில் கோஷ்டங்கள் அமைந்துள்ளன. கிழக்குக் கீழ்ப்புறச் சுவரில் வெண்சாமரை விநாயகர் வீற்றிருந்து அருள்புரிகின்றார். நின்ற கோலத்தில் பிரம்மா விளங்குகின்றார். சண்டிகேஸ்வரரின் திருவுருவம் கோமுகத்தை நோக்கிய நிலையில் அமைந்துள்ளது. தென்புற கருவறைச் சுவரில் 'தென்முகக் கடவுளாம் தட்சிணாமூர்த்தி காட்சிதருகின்றார். மேற்குத் திசைக் கருவறைச் சுவரில் மகா விஷ்ணு மூர்த்தம் உள்ளது. அருகில் **மிக விசேஷமானதாகக் கருதப்படும் விஷ்ணு துர்க்கை மூர்த்தம்** இருப்பது தல சிறப்பம்சங்களுள் இதுவும் ஒன்றாகும்.

கிழக்குத் திசை நோக்கிய நிலையில் அமைந்துள்ள தெய்வத் திருவுருவங்களின் பெயர்கள் பின்வருமாறு கூறப்படும். அருள்மிகு பிரதான விநாயகர், அருள்மிகு ஜொரகேஸ்வரர், அருள்மிகு அகத்தீஸ்வரர், விநாயகர், சாஸ்தா, பிரம்மா, குறுகிய லிங்கம், லட்சுமி, அப்பர், திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர், ஞான சரஸ்வதி, நாகர் மேடை, சிவலிங்கம் முதலியன. அருகில் அலங்கார மண்டபம் உள்ளது.


கருவறைச் சுவரின் நுழைவாயிலின் அருகில் அருள்மிகு துயர்தீர்க்கும் தும்பிக்கை விநாயகர் திருவுருவம் இடதுபுறமும், அருள்மிகு பாலசுப்பிரமணியர் திருவுருவம் வலதுபுறமும் அமைந்துள்ளது.

கருவறை மண்டபச் சுவரை ஒட்டி எழுப்பப்பட்ட திருக்கோயில், **தர்மசம்வர்த்தினி எனும் அறம் வளர்த்த நாயகியம்மன் ஆலயம்** விளங்குகின்றது. சிவ மந்திர சக்திகளோடு அம்பாள், தமது 36,000 கோடி மந்திர சக்திகளையும் சேர்த்து 72,000 கோடி மந்திர சக்தி பெற்ற பீடேசுவரியாகத் திகழ்பவள். நின்றகோலத்துடன், நான்கு திருக்கரங்களுடன், இடது திருவடியை முன்னிறுத்திய நிலையில் அன்னையவள் காட்சி தருகின்றாள்.

அம்மன் சந்நிதிக்கு எதிரே, நவக்கிரக சந்நிதி உள்ளது. 8-2-1965 ஆம் நாளன்று **திருவலம் மௌன குரு சுவாமிகள் நூதன பஞ்சவர்ண நவக்கிரகப் பிரதிஷ்டையும், கும்பாபிஷேகமும்** செய்தருளினார்கள். இந் நவக்கிரக சந்நிதி, தலச் சிறப்பம்சங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இச்செய்திகள் பின்னர் விரிவாகப் பேசப்பட்டுள்ளது.

அர்த்த மண்டபச் சுவரையொட்டி நாற்பது கால் மண்டபம் அமைந்துள்ளது. இம் மண்டபம் சிற்பக் கலைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றது. அர்த்த மண்டபச் சுவரையொட்டிய மண்டபத்தின் இடது புறத்தில் அருள்மிகு விசாலாட்சி உடனுறை விஸ்வநாதர் சந்நிதியும், அருகிலுள்ள சந்நிதியில் சோமாஸ்கந்தர், உற்சவமூர்த்தியாகவும் எழுந்தருளியுள்ளார். அதற்கு அருகில் தெற்கு நோக்கிய நிலையில் கால பைரவர் சந்நிதி அமைந்துள்ளது. சிவன் சந்நிதி, அம்மன் சந்நிதி எனும் இரு சந்நிதிக்கு எதிரில் நாற்பது கால் மண்டபத் தூண் அமைந்துள்ளது. அந்நாற்பது கால் மண்டபத் தூணின் முகப்பில் இலவ குசர்கள் அசுவமேத யாகக் குதிரையைக் கடிவாளத்தோடு பிடித்த நிலையில் நிற்பது போன்ற கல்தூண் கலைநுட்பத்துடன் சிறந்து விளங்குகின்றது. இம்மண்டபம் விஜயநகரப் பேரரசரால் கட்டப்பட்டது என்றும், மண்டபம் கட்டப்பட்ட காலம் 14-ஆம் நூற்றாண்டு எனவும் வரலாற்றாராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள்.

நாற்பது கால் மண்டபத்தின் நுழைவாயிலுக்கு முன் சிறுகோபுரத்துடன் சித்தங்கலங்கி சிவனருளால் தெளிந்த **நந்தியம்பெருமான் மூக்கணாங் கயிற்றுடன் சிவனை நோக்கிய** நிலையில் காணப்படுகின்றார். அதற்கு அடுத்த நிலையில் அண்மையில் புதுப்பித்த கொடிக்கம்பம் (துவஜஸ்தம்பம்) மரத்தால் 33 அடி உயரத்தில் செய்து, செப்புத் தகடுகளால் வேயப்பட்டு திருவுருவ வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. அருகில் பலிபீடம் உள்ளது. முதல் பிரகாரம் தொடங்கும் முன் கபால பைரவர் விளங்குகின்றார். எதிரில் திருக்கிணறும், நான்கு கால்களைக் கொண்ட ஊஞ்சல் மண்டபம் 25 அடி உயரத்தில் காணப்படுகின்றது. பசுமடமும், மடைப்பள்ளியும் கோயில் மதில் சுவரையொட்டி உட்புறமாகவே அமைந்துள்ளது. கோவிலை வலம் வருகையில் வில்வமரம் உள்ளது. அருகில் விநாயகப்பெருமான் எழுந்தருளியுள்ளார். கொடிக்கம்பத்தின்



குசன் இலவன் வழிபட்ட
குசலவபுரீஸ்வரர்
எனும் குறுங்காலீஸ்வரர்

அருகில் கிழக்கு நோக்கிய நிலையில் அண்ணாமலையார் சந்நிதியும், வள்ளி, தெய்வயானையருடன் விளங்கும் முருகப்பெருமான் சந்நிதியும் உள்ளது. அருணகிரிநாதரின் திருவுருவமும் உள்ளது. தனித்தனி கோபுரங்களுடன் சுண்ணச் சுதை வேலைப்பாடுகளால் அமைந்த சிலைகள் அழகு மிளிர்வது கண்ணுக்கு விருந்தும், மனத்திற்கு மகிழ்ச்சியும் தருகின்றது. அருகில் திருக்கல்யாண மண்டபம் உள்ளது. அதிகார நந்தியின் கோட்டம், வாசலின் இடப்புறம் அமைந்துள்ளது. கோயிலை ஒட்டியவாறு வெளிப்பகுதியில் வாகன மண்டபம் அமைந்துள்ளது.

இராச கோபுரத்தின் எதிரில் பதினாறு கால் மண்டபம் உள்ளது. அதில் கலையம்சங்கள் கொண்ட சிற்பங்கள் உள்ளன. இவற்றில் ஒரு சிற்பம் சரபேஸ்வர மூர்த்தம். இம் மூர்த்தத்தை ஞாயிறன்று மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரையிலான இராகு கால வேளையில் அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்து அன்பர்கள் வழிபடுகின்றனர். அருகில் குசலவர் **பூசித்த தீர்த்தக்குளம்** உள்ளது.

குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலின், முன் பகுதியில் கிழக்கு நோக்கிய நிலையில் வைகுண்ட வாசர் பெருமாள் திருக்கோயில் விளங்குகிறது. எதிரில் "**முடிசூடா பக்த ஆஞ்சநேயர்**", பெருமாளைக் கரம் கூப்பி வணங்கும் நிலையில் காட்சி தருகின்றார்.

## மூர்த்திகளின் பெயர்கள் - சிறப்புகள் :

## இறைவர் : குறுங்காலீஸ்வரர், குசலவபுரீசுவரர்

உலகிற்கு ஆதிகாரணமாகிய பரம்பொருள், இத்தலத்தில் சுயம்பு வடிவமாக எழுந்தருளி அருள்புரிகின்றார். சமய உலகில் வேறு எங்கும் காண இயலாத தனிச்சிறப்புடன் இங்கு எழுந்தருளிய சுயம்பு சிவலிங்கம் வியக்கத்தக்க நிலையில் அமைந்துள்ளது. பீடத்தின் மேல் அமைந்துள்ள **ஆவுடையாருக்கு மேல் 4 அங்குல அளவில் சிறிய பாண லிங்க வடிவில் பரம்பொருள், தானே வடிவமாக எழுந்தருளி இருக்கின்றார்.** இங்கெழுந்தருளிய பெருமான், குறுங்காலீஸ்வரர் என்ற திருப்பெயரோடு விளங்குகின்றார். **4 அங்குல அளவில் மடக்கினைக் கவிழ்த்து வைத்ததைப் போன்ற நிலையில் சுயம்புலிங்கம் காணப்படுவது தனிச்சிறப்பாகும்.** முத்தி தரும் சுயம்பு லிங்கங்களுள் இதுவும்

ஒன்றாகும். கோயம்பேடு என்னும் தலத்தில் பெருமான் வடதிசை நோக்கிய நிலையில் வீற்றிருக்கின்றார். தலத்தில் எழுந்தருளிய பெருமானின் சிறப்பினை, நமது முன்னோர் வழங்கி வந்த பழமொழியின் வாயிலாக அறியலாம்.

1) ***"கோயம்பேடு என்ற ஊரும் இல்லை;***
***குறுங்காலீஸ்வரர் என்ற பேரும் இல்லை"***

2) ***"வடக்குப் பார்த்த சிவனும் இல்லை***
***மடக்குப் போன்ற லிங்கமும் இல்லை"***

**இத்தலத்தில் உள்ள சிவ வடிவம், வடக்குத் திசை நோக்கிய நிலை. ஊர்ப் பெயர் முதலான சிறப்புகள் இந்தியாவில் உள்ள ஆலயங்களில் காணமுடியாத சிறப்பு அம்சங்களாகும்.**

மேலும் இத்தலத்தில் இராமனின் பிள்ளைகளான இலவன், குசன் ஆகிய சிறுவர்கள் இருவரும் ஈசனின் அருளைப் பெற தவஞ் செய்தனர் என்றும், தவத்திற்கு இரங்கி, குறுகிய வடிவில் லிங்கப் பெருமானாக எழுந்தருள் புரிந்தார் என்றும் கூறுவார்கள். **சிறு பிள்ளைகளான குசன், இலவன் வழிபட்ட ஈசனை, அவர்களது பெயரோடு சேர்த்து 'குசலவபுரீஸ்வரர்' என்று கூறுவது வழக்கமாகி விட்டது.** இதற்குச் சான்றாதாரமாக **வைகுண்ட வாசப் பெருமாள் கோயிலில் அர்த்தமண்டபத்தின் இடப்பக்கத்தில் வால்மீகி முனிவர், குசலவன், கோயட்டிப்பறவை முதலான உருவங்கள் அமைந்த ஒரு சிற்பம் உள்ளது.**

## அறம் வளர்த்த நாயகி (தர்ம சம்வர்த்தினி)

தம்மை அன்போடு வழிபடுவோர்க்கு அருள் புரியும் அன்னையாக இருந்து அருள் புரிபவள் அறம் வளர்த்த நாயகி (தர்ம சம்வர்த்தினி). பூமலி உலகில் அறம் தழைத்து விளங்கவும், சிறப்புற்று ஓங்கவும் எழுந்தருளியவள். நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்துடன், இடது திருவடி முன்னிறுத்திய நிலையில் அழகுதிகழ் திருக்கோலத்துடன், வழிபடும் அன்பர்களுக்கு அருள்புரியும் மாட்சிமை பெற்றவள்.



நாற்பது கால் மண்டபத் தூணில் குசலவர்
குதிரையைப் பிடித்திருக்கும் காட்சி



பிரதோஷ நந்தி




துயர் தீர்க்கும் தும்பிக்கையான் துவார விநாயகர்



வள்ளி தெய்வயானையருடன் முருகன்

## விநாயகர் :


முழு முதற் கடவுளான விநாயகப்பெருமான் ஐந்து திருக்கரங்களுடன் அமர்ந்த கோலத்துடன் வீற்றிருந்து அருள்புரிகின்றார். இத்தலத்து விநாயகர், **ஆதி விநாயகர்** என அழைக்கப்படுகின்றார்.

## முருகப்பெருமான் :

வள்ளி, தெய்வயானையரோடு முருகப்பெருமான் நான்கு திருக்கரங்களுடன் அருள்புரிகின்றார். இம்முருகனைப் போற்றி, **அருணகிரிநாதர்**, "**ஆதவிதபார** ... " என்று தொடங்கும் ஒரு **திருப்புகழ்ப்** பாடலைப் பாடியுள்ளார். தருப்பைக் கொடிகள் சூழ்ந்த நகரத்தில் வாழ வரும் முருகனே என்பதைக் "**கோசை நகர் வாழவரும் ஈசனே.,** என்று தமது திருப்புகழில் பாடியுள்ளார். 600 **ஆண்டுகளுக்கு முன் கோயம்பேட்டில் தர்ப்பைக் கொடிகள் முழுதும் பரவி இருந்திருக்கலாம். குசம் - தருப்பை - குசம் என்பது கால வழக்கில் குசை என மருவிப் பிற்காலத்தில் கோசை என மருவி இப்பெயர் வந்திருக்கலாம்.**

## குறுங்காலீஸ்வரரை வணங்க, நாம் அடையும் பேறுகள்:

1. அசுவமேத யாகம் செய்த பலன் கிடைக்கும்.
2. பித்ரு தோஷம் நிவர்த்தியாகும் (பிள்ளைகள் இல்லாத குறை)
3. நந்தி சித்தம் தெளிந்த தலமாதலால், வருபவரின் மனக்கவலை நீங்கும்.
4. ஆதி பிரதோஷ தலம், மூல க்ஷேத்திர தலம் என்று கூறுவர். ஒரு பிரதோஷ தினத்தன்று குறுங்காலீஸ்வரரை வணங்கினால் 1000 முறை பிரதோஷ தினம் வணங்கிய பலன் கிடைக்கும். இங்குதான் முதன் முதலாக பிரதோஷ வழிபாடு தொடங்கியதாக ஆன்றோர்கள் கூறுவார்கள். அன்று முதல் இன்றும் சிறப்பாக பிரதோஷ வழிபாடு நடைபெற்று வருகின்றது.
5. கோயட்டிப் பறவையின் சாபம் நீங்கி, நன்னிலை அடைந்ததுபோல், நமது முன்வினைகள் (பழ வினை), வரும் தீவினைகள் அகன்று நற்பயன் கிட்டும்.
6. சித்தர்கள் சித்தியடைந்த தலமாதலால், இங்கு வந்து வணங்கிச் சென்றால் காரிய சித்தி அடையும்.
7. சிவலிங்க வடிவமே, முத்தி தரும் நிலையாக உள்ள குறுங்காலீஸ்வரனை வணங்கிப் பிறவிப் பயனை அடையலாம்.
8. தீராத வியாதிகளும் தீரும்.
9. முனிவர்கள் வாழ்ந்த பகுதியாதலால் அறநெறியும், தவநெறியும் சிறந்து விளங்கும் தலமாகும். மேலும் எளியவர்களுக்காக இறைவன் எழுந்தருளிய தலம் என்பதால், நாமும் வழிபட விரைவில் பலனை அடைந்திடலாம்.



# அறம் வளர்த்த நாயகி அம்மன் அருட்புகழைப் பாடிடுவோம்

## நீலகண்டா போற்றி!

திருப்பாற்கடலைத் தேவர்களும், அசுரர்களும் மாறிமாறி கடைந்தபோது முதலில் நஞ்சு தோன்றியது. பின் கிடைத்தற்கரிய அமுதம் தோன்றி வழிந்தது. அமுதத்தினைத் தேவர்கள் முதலானோர் உண்டனர். அசுரர்கள், அமுதம் கிடைக்காமல் ஏமாற்றமடைந்தனர். அமுதம் கிடைப்பதற்கு முன் நஞ்சு தோன்றியது. அதனைக் கண்ட தேவர்கள் அஞ்சினர். நெஞ்சு சிதறும்படி பதறினர். அஞ்சி ஓடினர், ஆபத்திற்கு அடைக்கலம் தருகின்றவனும், மூவர்க்கும் முதல்வனாகி நின்ற பரம்பொருளாகிய சிவபெருமானிடம் சென்று, அமுதத்திற்கு முன் தோன்றிய நஞ்சின் கொடிய நிலையை எடுத்துக்கூறி முறையிட்டு இரந்து நின்றனர். அடைக்கலம் வேண்டி நின்றனர். விலக்க வேண்டியதும், வேண்டாத பொருளுமாகிய அந்த நஞ்சினை, கணங்களின் தலைவனாக விளங்கிய நந்தி தேவர் மூலமாக எடுத்துவரச் செய்து, அமுதம் போல் பருகினார். இதனை அறிந்த பார்வதி உடனே, நாதா! தாங்கள் செய்வதென்? என்று அருந்திய அமுதொத்த நஞ்சினை உள்ளே செல்லா வண்ணம் கழுத்துப் பகுதியின் மிடற்றினை தன் கரத்தினால் பிடித்து நிறுத்தினாள். நஞ்சு உள்ளே செல்லாமல் மிடற்றிலே கரு நிறமாய் நின்றதால், "நீல மணி மிடற்றன், கறைமிடற்றன், நீலகண்டன்'' எனப் பலவாறாகப் போற்றப்படும்படி செய்தவள், இத்தலத்தில் வீற்றிருக்கும் அன்னை, தர்ம சம்வர்த்தினி என்கின்ற அறம் வளர்த்த நாயகியம்மையாவாள். அறம் வளர்த்த நாயகியானவள், சிவன் ஆலகால விஷத்தைப் பருகும்போது, தன் இடது காலை முன் வைத்து, வலது காலைப் பின் வைத்து தன் மலர்க் கரங்களால் நஞ்சினை நிற்கச் செய்து சிவபெருமானை, "நீலகண்டன்" என்று போற்றி அழைக்கும்படி செய்தவள்.

இத்தலத்தின் சிறப்பம்சங்களுள் மிக முதன்மையானதாகப் போற்றப்படுவது, இடது திருவடியினை முன் ஊன்றிய அறம் வளர்த்த

நாயகி யருளிய அருட் செயல்களே யாம். ஒன்று, சிவபெருமானை "நீலகண்டன்" என்ற பெயர் சூட்டி, அழைத்தவளும் இவளே, இரண்டாவதாக, மக்கள் துன்பத்தில் அவதிப்பட்டபோது, காக்கும் அன்னையாகி மாறி நின்றவளும் இவளே.

## இடது திருவடி முன்னிற்பது ஏன்?

எல்லாத் திருத்தலங்களிலும் அன்னையவளின் திருப்பாத மலரடிகள் இணைந்த வண்ணம் இருப்பதே இயல்பு. சில தலங்களில் வலது திருவடியை முன் வைத்த நிலையில் காண்பது அரிது என்றாலும் அச்செயலின் திருநோக்கம், உலகில் மகிழ்ச்சி நிலைக்கவும் செல்வம் பெருகவும் செய்திட அருள் புரிவதாகக் கூறுவர்.

கோயம்பேடு எனும் திருத்தலத்தில் ஓர் அசுரன் ஆட்சி செலுத்தி வந்தான். அறநெறி உணர்ந்து வாழ்வாங்கு வாழ்ந்த மக்கள், தேவர், முனிவர் முதலானோர் நலம் பல பெருகி, மகிழ்ச்சி பொங்க வாழ்ந்தனர். மக்கள் முதலானோர் மகிழ்ச்சியுடனும், இன்பமுடனும் வாழ்வதைக் கண்டான் அவ்வசுரன். அசுரனின் மனத்தில் பொறாமையும், தீய குணங்களும் மேலோங்கி எழுந்தது. அழுக்காறு, அவா, வெகுளி முதலிய குணங்களில் அசுரன் ஆட்பட்டுத் தன்னிலை மறந்து துன்பஞ் செய்தான். மக்கள், தேவர், முனிவர்கள் ஆகியோரைத் துன்புறுத்தினான். நல்வழியில் அமைதியுடனும், சிறப்புடனும் வாழவிடாமல் கொடுமைப்படுத்தினான். அதர்ம நெறியில் நிலவுலகை ஆட்டிப் படைத்தான். அசுரனின் துன்பத்திற்கு ஆளான மக்கள் பெரும் வேதனைப்பட்டு, நொந்து நொந்து யாவரும் தங்களையே நிந்தித்துக் கொண்டனர். பிறகு மக்கள் சிந்தை தெளிந்து உலகைக் காத்து நிற்கின்ற அன்னையிடம் சென்று தஞ்சம் வேண்டி முறையிட்டு வந்தனர். அன்பர்களின் அடிமைத் துன்பத்தை நீக்க, அருட்சக்தி வடிவமாகிய அறம் வளர்த்த நாயகி புறப்பட்டாள். அவனை அழித்து உலகம் நன்மை பெற வேண்டுமானால் **இடது திருவடியை முன் வைத்து, வலது திருவடியைப் பின் நிறுத்தி வெற்றி காண விரும்பினாள்.** அவ்வண்ணமே நின்று வெற்றி கண்ட திருவடி நிலையே, அறம் வளர்த்த நாயகியின் திருமூர்த்த வடிவமாகும். இடது திருவடி முன்னின்ற காட்சிக்குரிய நிலையை நம் தலமாகிய கோயம்பேட்டில் இன்றும்

காண்கிறோம். என்றும் காண்போம். "**இத் திருவடிச் சிறப்பு கொண்ட திருத்தலம் வேறு எங்குமில்லை**" என்று சமய உலகம் கூறுமளவில் சிறப்புற்றுத் திகழ்கிறது.

## இராமாயணத்தில் இடது திருவடி

இடது திருவடி முன்னின்று செய்த சிறப்பின் செய்தி, இதிகாச இலக்கியங்களின் வழி அறியலாம். இதிகாசங்கள் என்றவுடன் நம் நினைவுக்கு வருவது இராமாயணமும், மகாபாரதமுமே. **இராமாயணத்தில் "துயர் தீர் திருவடி"** பற்றிய செய்தி வெளிப்படுவதைக் காணலாம். இராமனின் ஏகபத்தினியாகிய சீதாதேவியை யாருமறியா வண்ணம் இராவணன் கவர்ந்து கொண்டு இலங்கையில் கொண்டு போய் சிறைவைத்தான். இராமன் முதல் யாவரும் சீதையைத் தேடி அலைந்தனர். சொல்லின் செல்வனாகிய அனுமன், பல இடங்களில் தேடி அலைந்து இறுதியில் இலங்கை மாநகரில் சென்று தேடலாம் என நினைத்தான். இலங்கை மாநகரில் நுழையும் முன்,

**"வலதுகால் வைத்துச்சென்றால்**
**இராவணனுக்கு நலம் பெருகும்**
**இடதுகால் வைத்துச்சென்றால்**
**சீதையைக் கண்டறிந்ததும்**
**இராவணனையும் அழிக்கலாம்"**

என்று சிந்தித்து முடிவு செய்தான். சிந்தித்த வண்ணம் இடதுகால் முன் வைத்துச் சென்று வெற்றிகண்டவன் **இராமதூதன் அனுமனேயாவான்.**

## அம்மனை வழிபட்டால் ....

அறம் வளர்த்த நாயகியை நாள்தோறும் வழிபடுவோர்களின் துன்பம் தூசாய்ப் போகும். செல்வம் செழிக்கும். தீராத கவலை நீங்கி, இன்பமுடன் வாழலாம். மேலும் இத்தலத்தின் சிறப்பம்சங்கள் வருமாறு:

திருமணமாகாதவர்களுக்குத் திருமணம் நடைபெறும். தீராத வழக்குகள், தீராத வியாதிகள், அகலாத துன்பங்கள் யாவும் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள அறம் வளர்த்த நாயகியம்மையை வழிபட்டால் விரைவில் நீங்கும் என்பது ஆன்றோர் வாக்கு. இவ்வம்மனை வழிபட்டுத்

துன்பம் நீங்கி நலம் பல பெற்றோம் என்று அன்பர்கள் கூறியது அனுபவ வாக்கு.

அம்மனை வழிபடுவோர் நல்லெண்ணெய் தீபமிட்டு, குங்குமத்தால் அர்ச்சனை செய்து துன்பம் நீங்கி, அம்மன் அருள் பெற்று இன்பமுடன் வாழலாம்.

# முருகப் பெருமான்

## அருள்தர வருவாயே

*தானதன தானதன தானதன தானதன*
*தானதன தானதன தனதான*

*"ஆதவித பாரமுலை மாதரிடை நூல் வயிற*
*தாலிலையெ னாமதன கலைலீலை*
*யாவும்விளை வானகுழி யானதிரி கோணமதி*
*லாசைமிக வாயடிய னலையாமல்*
*நாதசத கோடிமறை யோலமிடு நூபுரமு*
*னானபத மாமலரை நலமாக*
*நானநுதி னாதினமு மேநினைய வேகிருபை*
*நாடியரு ளேயருள வருவாயே.*
*சீதமதி யாடரவு வேரறுகு மாஇறகு*
*சீதசல மாசடில பரமேசர்*
*சீர்மைபெற வேயதவு கூர்மைதரு வேலசிவ*
*சீறிவரு மாவசுரர் குலகாலா*
*கோதைகுற மாதுகுண தேவமட மாதுமிரு*
*பாலுமுற வீறிவரு குமரேசா.*
*கோசைநகர் வாழவரு மீசடியர் நேசசரு*
*வேசமுரு காவமரர் பெருமாளே"*

## அடியேனுக்கு அருள்புரிக :

தலையில் அணிந்த சந்திரன், ஆடும் பாம்பு, அழகிய அறுகு, குளிர்ந்த கங்கை நீர், இவை தமைக் கொண்ட அழகு திகழ் சடையை உடைய பரமேஸ்வரன், உலகங்கள் நிலைபெற்றுச் செம்மையுடன்

திகழ்ந்திட அருள் வடிவமாகத் தந்த வடிவேலனே! சிவனே! கோபமுடன் அரக்கத்தனங்கள் செய்திடும் அரக்கர்களின் கூட்டத்துக்கு எமனே! குறவர் மடமகள் வள்ளி, தேவர்கள் காத்த தேவானை ஆகிய இருவரும் இருமருங்கிலும் விளக்கமுடன் திகழும் குமரேசனே! கோசை நகரில் வீற்றிருக்க வந்துள்ள ஈசனே! அடியார்க்கு அன்பனே! எல்லா இடங்களிலும் விளங்குபவனே! முருகனே! தேவர்களின் அதிபதியே! நாதனே!

## முருகப் பெருமானே!

பொதுமகளிரிடத்தில் காணும் உறுப்பழகினைக் கண்டு மயங்கி அடியேன் அலையாமல் தடுத்து, 'ஓம் எனும்' ஒலியுடன் கூடிய நூறு கோடி மறைகள், ஆகம மந்திர உபதேசப் பொருள்களைச் சத்தத்தால் தெரிவிக்கும் உனது சிலம்பு முன்னதாக விளங்கும் திருவடியாம் அழகிய மலரை என்றும் வணங்கி, நன்மை அடையுமாறு அருள்தர வருவாயே!

## சென்னையில் அருணகிரிநாதர் :

திருப்புகழ்ப் பாடல்கள் ஒவ்வொன்றும் ஒரு ஒரு பாடல்களாக இருந்தாலும் ஒப்புயர்வற்ற பாடல்கள் என்பது **உள்ளங்கையில் நெல்லிக்கனி** போன்றதாகும். திருப்புகழ்ப் பாடல்கள் யாவும் திருத்தலங்கள் தோறும் சென்று பாடிய தேனமுதமாகும். அருணகிரிநாதர் தமது வாழ்நாளில் 200 **திருத்தலங்களைச்** சென்று வழிபட்டுள்ளார் என்பது அவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்களைக் கொண்டு ஆராய்ந்து அறியப்பட்ட ஓர் முடிவாகும். திருவண்ணாமலை தொடங்கி அமராவதி ஈறாகக் கொண்டவை 200 திருத்தலங்கள் ஆகும் என்று தணிகைமணி வ.சு.செங்கல்வராயப் பிள்ளை எழுதிய சரித்திர ஆராய்ச்சிக் குறிப்பின் வழி அறியலாம்.

மேற்கூறிய தரிசித்த தலவரிசையில் **"கோசை நகர்" என்ற "கோயம்பேடு"** திருத்தலம் 175-**வது இடத்தைப்** பெற்றிருக்கின்றது. சென்னையைச் சார்ந்த பகுதிகளில் ஏழு இடங்களில் அருணகிரிநாதர் பாடியிருக்கின்றார் என்ற செய்தியை, யான் எழுதிய **"சென்னையில் திருப்புகழ்த் தலங்கள்"** எனும் நூலில் மிகவிரிவாக எழுதியுள்ளேன். சென்னையில் "கோயம்பேடு" என்னும் திருத்தலம் **ஆறாவது இடத்தைப்** பெற்றுள்ளது. இவ்வூர் தற்போது மொத்த வணிக வளாக மையமாக

(Koyambedu Market) விளங்குகிறது.

## முருகனின் திருவுருவத் தோற்றம் :

முருகப் பெருமான் ஒரு முகமும் நான்கு கரங்களும் கொண்டு இருபுறமும் தேவிமார் சூழ, மயில் பின்புறம் விளங்க நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கிய நிலையில் கம்பீரமாக விளங்குகின்றார். முருகன் சந்நிதியில் அருணகிரிநாதர் திருவுருவம் உள்ளது.

அடியவர்களுக்கு அருள்புரிய ஆலயத்துள் ஆண்டவனே வீற்றிருந்தருள்வான். மேலும் தன்னை நாடி வந்தவர்க்கும், வர இயலாத நிலையில் தன்னை நினைத்தவர்களுக்கும் ஐம்பொன் சிலை வடிவில் (உற்சவ மூர்த்தி வடிவில்) எழுந்து அருள்வது மற்றொரு நிலை. இத்தகு உற்சவமூர்த்தி வடிவில் எழுந்தருளும் முருகப்பெருமான் ஓர் முகமும் நான்கு கரங்களும் கொண்டு, இருபுறமும் தேவியர் புடைசூழ அமர்ந்த கோலம் சிறப்பாக உள்ளது.

## வாழ வரும் முருகனே! அருள்தருவாயே!

வள்ளி, தெய்வயானையருடன் வீற்றிருக்கும் குமரேசனே! சர்வேசனே! முருகனே! தேவர் பெருமானே! கோசை நகரில் வீற்றிருக்க வந்துள்ள ஈசனே! நான், மாதர்களின் உறுப்பழகில் மயங்கி, அதிலே ஆசை மிகவும் கொண்டு, அவதிப்படாமல் இருக்க, நான் நாள்தோறும் உனது கழலிணை நாடி வணங்கிட அருள்தர வருவாயே! என்று அருணகிரிநாதர் வேண்டிப் பாடுகின்றார்.

நானநுதி னாதினமு மேநினைய வேகிருபை

நாடியரு ளேயருளவருவாயே!

கோசை நகர் வாழவரும் ஈசடியர் நேசசரு

வேசமுரு காஅமரர் பெருமாளே!

# தலப் பெருமைகள்

1. குறுங்காலீஸ்வரர் - வடக்கு நோக்கியிருப்பது தலத்திற்குப் பெருமை சேர்ப்பதில் முதல் நிலையாக விளங்குகிறது.
2. இராமனின் பிள்ளைகளான குசனும், இலவனும் இந்தச் சுயம்பு லிங்கப் பெருமானை வழிபட்ட சிறப்பினையுடையது.
3. அறம் வளர்த்த நாயகியின் இடது திருவடி, முன்னோக்கியிருப்பது தீமைகளை அகற்றி, நன்மைகளைச் செய்விக்க வந்தவள் என்பது மிகவும் குறிப்பிடத்தக்கது.
4. நந்தியெம்பெருமான் சித்தங் கலங்கிய நிலையில் வந்து வழிபட சித்தம் தெளிந்தது. நந்தி மூக்கணாங்கயிறுடன் திகழ்வது தலத்திற்குப் பெருமை சேர்க்கிறது.
5. சூரியன் வழிபட்ட பெருமைக்குரியது.
6. அருணகிரிநாதர், ஒரு திருப்புகழ்ப்பாடல் பாடியருளிய தலம்.
7. அதிகார நந்தி - கபால பைரவர் ஆகிய திருமூர்த்தம் கொண்ட திருத்தலம்.
8. இலவனும், குசனும் வழிபாடு செய்ய உண்டாக்கிய தீர்த்தம் தலப்பெருமையை மேலும் மெருகேற்றுகிறது.
9. மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றினாலும் சிறப்புற்று விளங்குவது.
10. தீராத வியாதிகள், பிரச்சினைகள் வழக்குகள் முதலான பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் வல்லமை பெற்றவர் சரபேஸ்வர மூர்த்தி. அவருடைய திருவுருவம் பதினாறு கால் மண்டபத்தில் அமைந்துள்ளது.
11. வடக்குத் திசை நோக்கிய நிலையில் அமைந்த குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலும், கிழக்குத் திசை நோக்கிய நிலையில் அமைந்த வைகுண்ட வாசப்பெருமாள் கோயிலும் (சைவ - வைணவ ஆலயங்கள்) ஒரிடத்தில் அமைந்திருப்பது சமயப் பிணக்கின்றி ஒற்றுமையோடு இருப்பதை வெளிக்காட்டுகின்றது.

12. கோயட்டி எனும் குருட்டு நாரைப் பறவை, முத்தி பெற்ற தலம்.

13. சித்தர்கள் சித்தியடைந்த பதி.

14. நூதன பஞ்சவர்ண நவக்கிரக பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

15. இராசகோபுரம் மூன்று நிலைகளுடன் சிறிய கோபுரமாகக் காணப்படுகிறது. நான்கு மாடவீதிகள் கொண்ட தலம்.

16. அதிகார நந்தியிடம், கோயில் திறக்கும் முன்னும், மூடும் முன்னும் சாவியை ஒப்படைத்துச் செல்லும் வழக்கம் இத்தலத்தில் பின்பற்றப்படுகிறது.

17. அஷ்ட திக்கு பிரதோஷ வழிபாடு சிறப்பாக நடைபெறும் தலம்.

## இத்தலத்தில் பேறு பெற்றவர்கள்

1. சூரியன் இத்தலத்தில் விளங்கும் ஈசனைப் போற்றி வழிபாடு செய்து பேறு பெற்றுள்ளார்.

2. கோயட்டி எனும் குருட்டு நாரைப் பறவை (பாவம்) சாபம் நீங்கிப் புண்ணியம் அடைந்துள்ளது.

3. குசலவர், ஈசனை வழிபட்டு அழியா இன்பம் பெற்றுள்ளனர்.

4. வால்மீகி முனிவர் வணங்கி வழிபட்ட தலம்.

# வேண்டுதலும் விமோசனமும்

குசலவர்கள், இராம இலக்குவனை எதிர்த்துப் போரிட்டதால் ஏற்பட்ட தோஷம், வால்மீகி முனிவரின் வழிகாட்டலால் சிவபெருமானிடம் வேண்ட, பாவ விமோசனம் கிடைத்தது.

கோயட்டி என்னும் குருட்டு நாரைப் பறவை சாபம் பெற்றது. தீவினை நீங்க, இத்தலத்தில் வாழ்ந்த வான்மீக முனிவரின் வழிகாட்டலால், மீனை உண்ணாமல், தவநெறி நின்று குறுங்காலீஸ்வரரை வணங்கியதால் சாபம் நீங்கப் பெற்றது. நல்வினைப் பயனை அடைந்து பார்வை பெற்றது. அதன் பெயரால் "கோயட்டி புரம்" என வழங்கினார்கள்.

# தலத்திற்குரிய சிறப்புப் பெயர்கள்

## 1. குசலவபுரம், குசலவபுரி

இராமனின் மைந்தர்கள் இலவன், குசன் வாழ்ந்த இப்பகுதியினைக் குசலவபுரி என்றும், குசலவபுரம் என்றும் நம் முன்னோர்கள் வழங்கினார்கள். மேலும், சிறுவர் இருவரும் இத்தலத்து ஈசனைப் போற்றி வழிபட்ட காரணத்தால் 'குசலவபுரீஸ்வரர்' எனவும் வழங்குவர். குறுகிய அளவு கொண்ட ஈசன் என்பதால் "**குறுங்காலீஸ்வரர்**' என்றும் கூறுவர். இலவ, குசர்கள் பெயரிலே '**குசலவபுரி**' என்றும், '**குசலவபுரம்**' என்றும் இத்தலத்தினைச் சிறப்பாகப் போற்றிக் கூறுவர்.

## 2. பிராயச்சித்த புரம்

வால்மீகி முனிவர், இலவகுசர்கள் தம் தந்தையை எதிர்த்த பாபத்தை நீக்கும் பொருட்டு (பிராயச்சித்தத்திற்கு) ஈசனை வணங்க வழிகாட்டினார். அதன்படி கடைபிடித்த **சிறுவர்கள் பிராயச்சித்தம்** அடைந்தனர். அதனால் இப்பகுதியைப் **பிராயச்சித்த புரம்** என்று அழைத்தனர்.

## 3. இராகவ புரம்

இராமனுக்கு 'இராகவன்' என்று மற்றொரு பெயருமுண்டு. இலவன், குசன் ஆகிய இருவரையும் இத்தலத்தில் வந்து கண்டு மகிழ்ந்ததாலும், இவ்விடம் சில காலம் தங்கியதாலும் அவர் பெயராலே இப்பகுதி '**இராகவ புரம்**' என்று முற்காலத்தில் ஊர்ப்பெயராக அமைத்து வழங்கியுள்ளனர். இச்செய்தியை முன்னோர்கள் கூறியதாக, செவி வழிச் செய்தியால் அறிய முடிந்தது.

## 4. கோயட்டி புரம்

கோயட்டி என்னும் குருட்டு நாரைப் பறவை , சாபம் பெற்ற தீவினை நீங்க வேண்டும் என்று வான்மீக முனிவரிடம் வந்து பணிந்து வேண்டியது. அவர் தக்க வழிகாட்டி அருளினார். இதுவரை மீனை உண்டு வந்த குருட்டு நாரைப் பறவை, முனிவரின் வழிகாட்டலால்,

தவநெறி நின்று இத்தலத்து குறுங்காலீஸ்வரரை வணங்கி **சாபவிமோசனம் பெற்றதால்** அப்பறவையின் **பெயராலே, 'கோயட்டி** புரம்' என ஊர்ப்பெயர் வழங்கலாயிற்று.

## 5. செல்வபுரி, செல்வபுரம்

முற்காலத்தில் கோயம்பேடு, செல்வச் செழிப்புடன் சிறப்புற்று விளங்கியதால், செல்வபுரி என்றும், செல்வபுரம் என்றும் பழங்காலத்தில் வழங்கி வந்ததாக அறிய முடிகிறது.

## 6. வான்மீக புரம்

வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்து வாழ்ந்து வந்ததால் அவர் பெயராலே வான்மீகபுரம் என்று மக்கள் வழங்கி வந்துள்ளனர்.

## 7. தண்டகாரண்ய புரம்

தண்ட காரண்யம் என்றால் அடர்ந்த காடு எனப் பொருள் தரும். காடு சார்ந்த பகுதியாதலால் நம் முன்னோர்கள் தண்டகாரண்ய புரம் என்று இப்பகுதியை அழைத்து வந்துள்ளனர்.

## 8. கோசை நகர் (குசை நகர்)

அருணகிரிநாதர் இத்தலத்திற்கு வந்தபோது தர்ப்பைக் கொடிகள் (குசம் - தர்ப்பை - குசம் - கோசம் என மருவி) ஊர் முழுவதும் செழித்துத் தழைத்திருந்தது. அவர் முருகனை வழிபட்டுப் பாடும்போது **'கோசை நகரில் வாழ வரும் முருகனே'** என்று பாடியுள்ளார். இதனால் ஊரின் சிறப்பினை அறிந்து 'கோசை நகர்' என்ற பெயரிட்டுப் பலகாலம் அழைத்து வந்ததாக **இலக்கியத்தின்** வழி அறிந்து கொள்ள முடிகிறது. இவருடைய காலம் கி.பி.600 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனலாம்.

## 9. கோயம்பேடு

முற்காலத்தில் கோயம்பேடு அடர்ந்த காடாக இருந்தது. அங்கு வான்மீக முனிவர் ஆசிரமம் அமைத்து வாழ்ந்து வந்தார். அங்கு ஆசிரமத்தில் வாழும் பசுக்களைக் காவல் காக்கும் பொருட்டு இரும்பு வேலி போடப்பட்டுக் காத்து நின்றனர். அவர்கள் வேறுயாருமல்லர். இராமனின் பிள்ளைகளான இலவன், குசன் தான்.

கோ - பசு; அயம்-இரும்பு; பேடு-காக்கும் வேலி, பசுக்களைக் காக்கும் பொருட்டு போடப்பட்ட இரும்பு வேலி எனப் பொருள். இப் பெயரே தற்காலத்தில் வழக்கத்தில் உள்ளது.

1964 ஆம் ஆண்டு வரை கோயம்பேடு, காடாக இருந்தது. ஒரு தலைமுறையில் (36 வருடத்தில்) அடர்ந்த காடு; நகரமாக மாறி, சிறப்பான நிலையை அடைந்துள்ளது. இந்தத் தலைமுறையினர் **கோயம்பேடு** என்றே அழைத்து வருகின்றனர்.

# தீர்த்தம்

## இலவ குச தீர்த்தம்

கோயிலுக்கு வெளியில் பதினாறு கால் மண்டபத்தின் அருகில் கிழக்குத் திசையில் இலவகுச தீர்த்தம் அமைந்துள்ளது. இராமனின் பிள்ளைகளான **இலவ குசர் ஈசனைப் போற்றி வழிபட உண்டாக்கிய திருக்குளமே, இலவகுச தீர்த்தம்** என்றுபோற்றப்படுகின்றது. குளத்தின் மேற்கரையில் ஆஞ்சநேயர் சந்நிதி அமைந்துள்ளது. திருக்குளம் 180 அடி நீளமும் 172 அடி அகலமும் கொண்ட நிலையில் விளங்குகின்றது.

# தல மரம்

## குறும்பலா

இராமனின் மைந்தர்களான இலவ, குசன் ஆகிய இருவரும் தாம் வழிபடுவதற்கேற்ற நிலையில் குறுகிய அளவுடைய பலா மரத்தின் கீழ், ஈசனைப் போற்றி வழிபட்டுள்ளனர். ஆதலால், தல மரமாக (விருட்சமாக) குறும்பலா மரம் விளங்கிற்று. ஆனால் தற்போது குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் வளாகப் பகுதியில் இல்லை இருந்தாலும், ஆதாரமாக அருகிலுள்ள **வைகுண்டவாசப் பெருமாள் கோயிலில்** வடதிசையில் **குறும்பலா மரம்** இன்றும் கனிகளோடு செழித்து விளங்குவதைக் காணலாம்.

# உற்சவ மூர்த்திகள்

ஆண்டவனை, அடியவர்கள் வணங்குவதற்காக திருக்கோயிலின் கருவறையில் மூலவராக நின்று அருள் புரிகின்றார். ஆண்டவனை வந்து வணங்கி வழிபாடு செய்ய வேண்டும் என்று எண்ணம் இருந்தாலும் வர இயலாத அன்பர்களுக்காக மனமிரங்கி ஐம்பொன்னாலான செப்புத் திருமேனி வடிவில் அலங்காரத்துடன் உற்சவ மூர்த்தியாக எழுந்தருளி திருவீதியுலா வந்து அருள்புரிவார், வயது முதிர்ந்தோர், உடல் தளர்ச்சியுற்றோர், உடல் ஊனமுற்றோர் முதலானவர்களுக்கு இறைவனே எளிவந்த நிலையில் காட்சி தந்து அருள் புரிகின்றார்.

பரம்பொருள் ஒன்றாயினும், பல நிலையில் பல வடிவங்களில் எழுந்தருளி ஆன்மாக்களுக்கு ஆன்ம பரிபக்குவம் செய்தருளுவார். இந்த **ஆன்மா ஈடேற்றம் செய்வது இந்து சமயத்தின் அடிப்படை** தத்துவமாகும். அவ்வகையில் நம் தலத்தில் எழுந்தருளியுள்ள உற்சவ மூர்த்தங்களைக் கீழ் காணலாம்.

## 1. நடராஜர்

நான்கடி உயரத்தில் நடனமாடும் திருக்கோலத்தில் நடராஜர் அற்புதமாக புன்னகை பூத்த முகத்துடன் காட்சி தருகிறார்.

## 2. சிவகாமியம்மை:

தனி மூர்த்தமாக நின்ற கோலத்தில் மூன்றரை அடி உயரத்துடன் அமைந்த சிவகாமியம்மை விளங்குகின்றார்.

## 3,4,5,6: நால்வர் சிலை

திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமயம் தழைக்க அரும்பாடுபட்ட அருளாளர்களுள் மிகவும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். பீடத்திலிருந்து ஒன்றை அடி உயரத்துடன் பொலிவுடன் காணப்படுகின்றார்கள்.

***திருஞானசம்பந்தர்:*** கையில் தாளத்தை ஏந்தியுள்ளார்.

***திருநாவுக்கரசர் :*** உழவாரப் படையுடன் கைகூப்பிய நிலையில் விளங்குகின்றார்.

***சுந்தரர்:*** வைதீகத் திருக்கோலத்துடன் திருமூர்த்தம் அமைந்துள்ளது.

***மாணிக்கவாசகர்:*** தமது திருக்கரத்தில் ஓலைச் சுவடிகள் ஏந்திய

நிலையில் நின்ற கோலத்துடன் காட்சி தருகின்றார்.

## 7. விநாயகர்:

நான்கு திருக்கரங்களுடன் ஓர் அடி உயரத்தில் நின்ற கோலமாக நின்று கம்பீரமாக காட்சி தருகின்றார்.

## 8. முருகன்

மயில் வாகனத்தில் ஒன்றரை அடி உயரத்தில் நான்கு திருக்கரங்களுடன் வள்ளிதெய்வயானையர் தனித்தனி மூர்த்தங்களாக ஓர் அடி உயரத்துடன் நின்றகோலத்தில் காட்சி தருகின்றார்.

## 9. இலிங்க சத்தியம்பாள்

## 10. பிரதோஷ நாயகர்

பிரதோஷ தினங்களில் வழிபாடு செய்பவர்க்குத் தானே எளிவந்தநிலையில் காட்சி தருபவர்.

## 11. ஈஸ்வரன், ஈஸ்வரி

## 12. சோமாஸ்கந்தர்

இறைவன் தனி அம்பாளுடன் வீற்றிருக்கிறார்.

## 13. சந்திரசேகரர்

அம்பாளுடன் சந்திரசேகரர் உற்சவமூர்த்தமாக காட்சி தருகின்றார்.

## 14. நவராத்திரி அம்பாள்

புரட்டாசி மாதம் நவராத்திரி திருவிழாவிற்கு என்றே தனி அம்பாள் இங்கு எழுந்தருளியிருப்பது மிகவும் சிறப்பாகும்.

## 15. மாரியம்மன்

கிராம தேவதையாக விளங்குபவள். ஒன்றரை அடி உயரத்துடன் நான்கு திருக்கரங்களுடன் எழுந்தருளியுள்ளாள்.

## 16. பரி வேட்டை சாமி

## 17. பாவை

## 18. அஸ்திர தேவர்

# புராண வரலாறுகள்

## வால்மீகி முனிவர் வாழ்ந்த இடம்:

பூமலி உலகில் இதிகாசங்கள் என்று போற்றப்படுவது இராமாயணமும், மகாபாரதமுமே. இவ்விரண்டினுள் முதலில் நிற்பது இராமாயணம். இராம + அயணம் - இராமனது வரலாற்றை முழுதும் விரித்துத் தொகுத்து உரைக்கும் நூல் இராமாயணம். இம் மாபெரும் பணியை செய்திட்ட இலக்கியக் கர்த்தாக்கள் இருவர். முதலில் வழங்கிய பெருமை வால்மீகி முனிவரையே சாரும். வால்மீகி எழுதிய இராமாயணத்தைத் தழுவி தமிழில், தமிழ்ப் பண்பாடு இணைய கம்பர் எழுதியதால் கம்பராமாயணம் எனப் பெயர் பெற்றது.

## வால்மீகி ஆசிரமம்:

வால்மீகி முனிவர் வடமொழியில் இராமாயணத்தைத் தந்த மாபெரும் தவசி. பேராற்றல் படைத்தவர். முக்காலம் உணர்ந்த ஞானி. தமிழகத்தின் பல பகுதிகளில் வந்து, தவஞ்செய்து மக்களுக்கு இறைநெறிக்கு வழிகாட்டியவர் என்பதனை நிலைநிறுத்தும் இலக்கியச் சான்றுகளும், வரலாற்றுச் சான்றுகளும் முன்னின்று பறை சாற்றும். அவ்வகையில் ஆன்றோரும் சான்றோரும் உடைய தொண்டை நாட்டில் 32 சிவஸ்தலங்கள் விளங்குகின்றன. அவற்றுள் நம் சென்னைப்பகுதிக்குட்பட்ட திருவான்மியூர், பாடி (திருவலிதாயம்), திருவேற்காடு முதலான பல தலங்கள். அவற்றோடு ஒப்ப வைத்துப் போற்றப்படும் தலமாகிய கோயம்பேடு என்னும் தலமும் சிறப்புற்று விளங்குகிறது. கோயம்பேடு என்னும் தலத்தில், முற்காலத்தில் வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்துத் தங்கினார். தவஞ்செய்து இறைவனை வணங்கி எண்ணிலா ஆண்டுகள் வாழ்ந்து வந்தார். பரம்பொருளை எண்ணி நாள்தோறும் வழிபட்டார் என்பது தலபுராணத்தின் மூலமாகவும், செவிவழிச் செய்தியின் வாயிலாகவும் அறிய முடிகிறது.

இதற்குச் சான்று ஆதாரமாக; அருகிலிருக்கும் **அருள்மிகு வைகுண்ட வாசப் பெருமாள் கோயிலின் உள் மண்டபத்தின் இடப்புறமாக பலா மரத்தின் கீழ் இலவகுசர்களுடன் வால்மீகி முனிவர் தவஞ்செய்வது போன்ற சிற்பக்காட்சி அமைந்துள்ளது.**

**அருகில் 3 அடி உயரத்தில் சீதாதேவியின் திருவுருவச்சிலை** இன்றும் பொலிவுடன் திகழ்கின்றதைக் காணலாம்.

# குசன், இலவன் வாழ்ந்த குசலவபுரி

## கானகத்தில் விட்டு வா..

"சக்கரவர்த்தித் திருமகன்" என்று சிறப்பாகப் போற்றப்படுபவர் இராமபிரான். தன் மனைவியாகிய சீதையை, பத்துத் தலை கொண்ட இராவணன் தன் நகராம் இலங்கை மாநகரில் பத்துத் திங்கள் சிறை வைத்தான். இராமபிரான், இராவணனோடு போரிட்டு, வென்று பெருநில மடந்தையாகிய சீதையை மீட்டான். இருப்பினும், உலகிலுள்ளோர் பழி தூற்றுவர் எனக் கருதித் தன் தம்பியாகியஇலக்குவனனிடம், **நீ சீதாப்பிராட்டியைத் தேரேற்றிக் கானகத்தில் சென்று விட்டு வா.** என்று கட்டளை இட்டார் இராமபிரான். தன் அண்ணனின் கட்டளையை மீற முடியாத இலக்குவன், சீதாப்பிராட்டியைக் கானகப் பகுதியில் விட்டுவிட்டுப் போனான். சீதையை கானகத்தில் விட்டுச் சென்ற கானகப்பகுதியே இன்று நாம் காணும் கோயம்பேடு.

## சீதாப்பிராட்டியே ஆசிரமத்தில் எழுந்தருள்க

கருவுற்ற நிலையில் சீதாப்பிராட்டி கானகத்தில் தனித்திருந்தார். யாருடைய துணையுமில்லாமல் இருக்கும் தன்னிலையையே எண்ணி வருந்திப் புலம்பினார். அப்போது ஆசிரமத்தில் தங்கியிருந்த வால்மீகி முனிவர், அழு குரல் கேட்கும் திசையை நோக்கி விரைந்து வந்தார். முக்காலம் உணர்ந்த ஞானியல்லவா! வால்மீகி முனிவர், தாயே! வருந்தற்க. எம் ஆசிரமத்தில் எழுந்தருள்க என்று ஆறுதல் மொழிகள் பல கூறி தம்முடன் அழைத்துச் சென்றார்.

## அருங்கலைகள் உணர்ந்த பிள்ளைகள்

வால்மீகி முனிவர், நற்றவ மடந்தையாகிய சீதைக்கு ஒரு குறையும் நிகழா வண்ணம் போற்றி வந்தார். எல்லாச் செல்வங்களும் நிறைந்து வளமுடன் வாழ்ந்து வந்த கருக் கொண்ட சீதாப் பிராட்டி, பெறுதற்கரிய இரு மக்கட் செல்வத்தைப் பெற்றெடுக்கும் பேறு பெற்றாள். அருந்தவப் புதல்வர்கள் குசன் இலவன் என்னும் பெயரினர்.

மண்ணில் வளமுற வளர்ந்த இரு புதல்வர்களுக்கும் அழிவிலாச் செல்வமாம் கல்வியைப் போதிக்க எண்ணினார் வால்மீகி முனிவர். குசன், இலவன் என்னும் இரு மைந்தர்களுக்கும் வால்மீகி முனிவர் அருங்கலைகள் பலவற்றைக் கற்றுக் கொடுத்த இடமும், சிறுவர்களாகிய இலவனும், குசனும் போற்றி வழிபட அருள்புரிந்த இடமே கோயம்பேடு. முற்காலத்தில் கானகப் பகுதியாக இருந்தது. இன்று காடழிந்து மக்கள் வாழும் மாநகரமாகத் திகழ்கின்றது.

## தந்தையை எதிர்த்த மைந்தர்கள்

### இலக்குவனின் தோல்வி

அசுவமேத யாகம் செய்தற் பொருட்டு திக்கு விஜயம் செய்திட அனுப்பிய குதிரையை, இலக்குவன் செலுத்தி வந்தான். பல திசைகளைக் கடந்து வருகின்ற போது முன்னாளில் காடாக இருந்த கோயம்பேட்டினை அடைந்தான்.

அடர்ந்த காடாக இருந்த காட்டுப் பகுதியின் மையத்தில் ஆசிரமம் அமைத்துத் தங்கி, தவ வாழ்க்கை புரிந்து வந்தார் வால்மீகி முனிவர். தமது ஆசிரமத்தில் பசுக்கள் மிகுதியாய் இருந்தன. அதனால் காக்கும் பொருட்டு, அவ்விடத்தைச் சுற்றிப் போடப்பட்ட வேலி சாதாரண வேலியல்ல. எளிதில் தகர்க்க முடியாதபடி இரும்பு வேலி போடப்பட்டு இருந்தது. காவலுக்கு இரு வீரர்கள் காவல் காத்தனர். அவர்கள் யார் தெரியுமா? வேறு யாருமல்லர். சீதை பெற்றெடுத்த அருந்தவப் புதல்வர்களான இலவன், குசன் எனும் இருவருந்தான்.

கோயம்பேடு - கோ+அயம்+பேடு - கோ-பசு, அயம்-இரும்பு, பேடு-காப்பு அல்லது வேலி. பசுக்களைக் காக்கும் பொருட்டு போடப்பட்ட இரும்புவேலி எனப் பொருள். அதுவே ஊருக்குப் பெயராக அமைந்து கோயம்பேடு என வழங்கலாயிற்று. இன்றும் தற்காலத்தில் "கோயம்பேடு' என்றே வழங்கப்படுதல் குறிப்பிடத்தக்கது.

அடர்ந்த கானகப் பகுதியினை அடைந்தபோது இவ்விடத்தைக் காக்கும் பொருட்டு காவலர்களாக இருந்த இலவன், குசன் ஆகிய இருவரும் மேலும் செல்ல முடியாதபடி, திக்கு விஜயம் செய்து வருகின்ற அசுவமேதயாக குதிரையைத் தடுத்து நிறுத்திக் கட்டிப்போட்டனர். பின் வந்த இலக்குவன், ஏன்? .குதிரையைக் கட்டிப் போட்டீர்கள் என்று

வினாத் தொடுத்தபோது, எம் பகுதியில் எம்மை அணுகாமல் ஒரு பொருளும் செல்ல அனுமதிக்க மாட்டோம் என்று கூறினர் இளைய மைந்தர்கள்.

இலக்குவன், சிறிய உருவத்தினைக் கண்டு ஏளனமாக இருவரும் சிறுவர் தானே என்று எண்ணி அச்சுறுத்தினான். தன் குருவிடம் கற்ற வித்தையை அரங்கேற்றி, சிறுவர்கள் வலிமையோடு போரிட்டு வென்று, இலக்குவனைத் தோல்வியுறச் செய்தனர்.

## அமைந்த கரையில் இராமன்

படைவீரர்கள், இராமபிரானிடம் சென்று இலக்குவனின் தோல்வியையும், அசுவமேத யாகக் குதிரை திக்கு விசயம் செல்ல முடியாமல் நிற்பதையும் கூறி முறையிட்டனர். இதனைக் கேட்ட இராமன் படையுடன் அவ்விடம் செல்ல எண்ணினார். படைவீரர்கள் கானகத்திலிருக்கும் ஆசிரமத்தை ஒட்டி ஓடும் பாலாற்று நதியினைக் கடக்கும்போது, குதிரையிருக்குமிடம் ஆற்றின் வடக்குப் பகுதியில் உள்ளது என்று கூறினார்கள். இராமபிரான் தெற்குக் கரையில் அமர்ந்தபடி வால்மீகி முனிவர் தங்கி தவம்புரியும் ஆசிரமத்தையும் பார்த்தார். இவ்வாறு தென்கரை மீது அமர்ந்து பார்த்ததனால் **"அமர்ந்த கரை"** என அழைக்கப்பட்டது. **அமர்ந்த கரை** பேச்சு வழக்கிலும் காலப்போக்கிலும் மருவி **"அமைந்த கரை'** என்றும் **"அமைஞ்சிக் கரை'** என்றும் ஊர்ப் பெயர் வழங்கலாயிற்று என்பது செவிவழிச் செய்தி யாயினும், **இன்னும், இன்றும் நடைமுறையில்** வழங்குவதன் வாயிலாகவும் அறியலாம்.

## இராமனோடு சண்டை செய்த புதல்வர்கள்

இராமபிரான், ஆற்றின் வடகரையிலிருக்கும் ஆசிரமத்திற்கு எழுந்தருளினார். ஆசிரமத்திற்கு முன் இலவன், குசன் ஆகிய இருவரும் காவலர்களாக நின்றனர். அருகில் திக்கு விஜயம் செல்லும் அசுவ மேத யாகக் குதிரை நிற்பதையும் கண்டார். இராமபிரான், தன் மைந்தர்கள் எனத் தெரியாத நிலையில் சிறுவர்களாகிய இலவ, குசர்களுடன் உரையாடினார். பேசுகின்ற போது கருத்து மாறுபாடு ஏற்பட்டு போரிடத் தொடங்கினார்கள். இராமனுடன் இலவ, குசர்கள் போர் புரிகின்ற போது ஏற்பட்ட பேரொலி கேட்டது. ஆசிரமத்திற்குள் யோக நிலையில் தவம் புரிந்த வால்மீகி முனிவர்க்குப் பேரொலி, பேரிடி போல் முழங்கியது.

தவ நிலை கலைந்த முனிவர் வெளியில் வந்து பார்த்த போது, போரிடுவது தெரிந்தது. முக்காலம் உணர்ந்த ஞானியல்லவா! வால்மீகி சிறு கணப் பொழுதில் வந்தவர் யாரென்று அறிந்து கொண்டார். வந்தவர் **இராமபிரானே, மனித வடிவில் வந்துள்ளார்** என்பதனை அறிந்து பதறி ஓடி வந்து ஐயனே! பிழைபொறுக்க, என வேண்டி நின்றார். "நீங்கள் போரிடும் சிறுவர்கள் வேறு யாருமல்லர், தங்கள் புதல்வர்களே" என்றார். இது கண்ட யாவரும் அதிர்ச்சியடைந்தனர்! **இவர் எம் தந்தையா!** என்ன **தவறு செய்தோம். ஐயகோ! தந்தையை எதிர்த்துப் போரிட்டோமே** என தன்னையே நிந்தனை செய்து கொண்டனர். தவமுனியே! நாங்கள் இருவரும் செய்த பிழையை நீக்க, ஓர் நல்வழியைக் கூறுங்களேன் என்று வேண்டி நின்றனர். உடனே **வால்மீகி முனிவர் தக்க வழி** கூறுகிறேன், கேளுங்களேன். சிவநெறி நின்று **சிவலிங்கப் பூசனைப் புரிந்தால் செய்த பாவம் அகலும்** என்று மொழிந்தார்.

## குச, இலவன் போற்றிய குறுங்காலீஸ்வரர்

வால்மீகி முனிவர் காட்டிய நல்வழியைத் தொடர்ந்து, சிவ பூசைக்கு வேண்டிய பொருள்களைத் தயார் செய்து கொண்டனர். தமது வழிபடு கடவுளாகிய சிவலிங்கப் பெருமானைத் தம் நிலைக்கேற்ப சிறிய அளவில் உள்ள லிங்கத்தினைத் தேர்ந்தெடுத்து சிவ பூசனைப் புரிந்தனர். பொருள்சேர் சிவ பூசையினை ஏற்று மனமகிழ்ந்த சிவபெருமான் "பாவம் நீக்கி, சகல கலைகளும், செல்வங்களும் சித்திப்பதாகுக' எனக் கூறி அருள்புரிந்தார்.

குசலவர்கள் இருவரும் தம் நிலைக்கேற்ப தாமாகவே 4 அங்குலம் கொண்ட அளவில் உள்ள குறுகிய சிவ லிங்கத்தைப் '(சிறிய பாணலிங்கம்) பூசனைப் புரிந்தனர். இறைவனோ சிறுவர்கள் செய்த பூசனையினை ஏற்று அருள் புரிந்தார். அதனால் **குறுகிய உயர அளவுள்ள ஈசன் - குறுங்காலீசுவரன்** எனப் பெயர் பெற்றார். இன்றும் இவ்விறைவனுக்குக் "குறுங்காலீஸ்வரர்" என்ற பெயராலேயே வழங்கப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாம். மேலும் **பழங்காலக் கல்வெட்டுகளில் இவ்விறைவனைக் "குறுங்காலாண்டார்"** என்றே வழங்கப் பெற்றுள்ளமையைப் படித்து அறிந்துணரலாம்.

**குசன் இலவன்** ஆகிய இருவரும் இத்தலத்தில் வாழ்ந்திருந்து, **சுயம்புலிங்கப் பெருமானை வழிபட்டதால்**, அவர்கள் பெயராலே **"குசலவபுரீஸ்வரர்"** என்று சிறப்பாகப் போற்றி அழைக்கப்பட்டார். இத் தலத்தில் குசலவர்கள் வாழ்ந்த காரணத்தால் அவர்கள் பெயரிலே **"குசலவபுரி"** என்றும் **"குசலவபுரம்"** என்றும் மக்களால் அழைக்கப்பட்டு வந்ததை நமது முன்னோர்கள் வாயிலாக அறிய முடிகிறது.

**இன்றும் கோயிலுக்குச் செல்லும் வீதியை குறுங்காலீஸ்வரர் தெரு என்று பெயரிட்டு வழங்குவதைக் காணலாம்.**

# முத்தி தரும் குறுங்காலீஸ்வரர்

சிவனை வணங்கி வழிபட்டால், பூசனையினை ஏற்று மகிழ்ந்து அருள்புரிந்து முத்தியளிப்பான் என்பது நடைமுறையில் உள்ள ஓர் அருள்நெறியாகும். எளியோர்க்கு எளியவனாகிய சிவபெருமான், அடியவர்களுக்காக தாம் விரும்பிய வண்ணத்தில் வந்து அருள்புரிவது மட்டுமல்லாமல், சிவலிங்க வடிவத்தில் கூட வந்து அருள்புரிவான் என்பது வியக்கத்தக்க வொன்றாம். இது பெருமைப்பட வேண்டிய சிறப்பம்சங்களில் ஒன்றெனில் மிகையாகாது. சிவபுராணங்கள் சிவலிங்கச் சிறப்பினையும் எளிதில் முத்தி கிடைக்கும் நிலைகளையும் கூறுவது நூலின் சிறப்பம்சமாகும். அவை கூறும் வழி, வழிபாடு செய்து **முத்தியடைய வழி காட்டுவது இந்து சமயத்தின் அடிப்படைத்** தத்துவமாக விளங்குகிறது. அவ்வகையில் நம் தலமாகிய கோயம்பேட்டில் உறையும் **சுயம்பு லிங்க சிவபெருமான் "முத்தி தரும் பெருமானாக"** விளங்குகின்றார், மேலும் ஐம்பூத தலங்களை வழிபட்டால் அடையும் அனைத்துப் பேறுகளையும் இத்தலத்துறையும் "குறுங்காலீஸ்வரனை" வழிபட்டால் அடையலாம் என்பது ஆன்றோர் வாக்கு.

## பாணலிங்கம்

சிவபுராணங்கள் 6 அங்குலம் அளவு வரை உள்ள சிவலிங்கத்தை வழிபடுவோர்க்கு முத்தி கிடைக்கும் என்று கூறுகின்றன. அவ்வகையில்

இத்தலத்தில் 4 அங்குல அளவில் சாய்வாக சிறிய பாணலிங்க வடிவில் **சுயம்புருவாக "குறுங்காலீஸ்வரர்"** எழுந்தருளியிருக்கின்றார். இச்சிறப்புமிக்க ஈஸ்வரனை வழிபட்டால் நிலையான பேறுகளும், பெறுதற்கரிய வீடுபேறு எனும் முத்தியும் எளிதில் கிடைக்கும் என்பதை இலவ, குசர் வழிபாட்டினால் உணரலாம். மண்ணில் பிறந்த பிறவிப்பயனை அடைந்திடவும், அருமருந்தாய் விளங்கும் பிறவா நிலையை அடைந்திடவும் இறை வழிபாடு உதவுகின்றது என்பதனை நாம் உணரலாம்.

## பழமொழியே பெருமையைக் கூறும்

முன்னோர்கள், தாம் வாழும் போது ஏற்படுகின்ற அனுபவத்தைக் கூறிய சொற்றொடர்களே, அனுபவ மொழி அல்லது பழமொழி என்பர்.

கோயம்பேடு என்னும் தலத்தினைப் பற்றியும் தலத்தில் வீற்றிருக்கும் பெருமானைப் பற்றியும், பழமொழிகளாக இன்றும் வழக்கத்தில் இருப்பதும், போற்றுதற்கு அரியதாகவும் விளங்குகிறது.

நிலவுலகில் 4 திசைகள் உள்ளன. நான்கு திசைகளுக்கும் நான்கு பயன்கள் கூறப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| கிழக்கு | - | நன்மை விளைப்பது |
| மேற்கு | - | செல்வம் தருவது |
| தெற்கு | - | எம பயம் நீக்குவது |
| வடக்கு | - | தவத்திற்குரியது |

இறைநிலை அடைய வேண்டுமாயின் விரதம் பூண்டு வடதிசை நோக்கி தவநிலை புரிந்தால் எளிதில் பலன் கிட்டும். இந்தச் செய்தியை விளக்கும் பொருட்டு சிவபெருமானே, வடக்கு நோக்கி சிவலிங்க வடிவில் வீற்றிருக்கிறார். கோமுகம் வலது பக்கம் உள்ளது. அம்பாள், எப்பொழுதும் இடப்பக்கம் இருப்பது இயல்பு என்றாலும் வலப்பக்கம் இருப்பது சிறப்பு. நாடறிந்த நகரங்களாக **மயிலாப்பூரும், திருக்காளத்தியும்** விளங்குகின்றன. இவ்வாறு அம்பிகை வலப்புறம் வீற்றிருந்து அருள் செய்து வருகின்றாள். அம்பாள் வலது பக்கத்தில் வீற்றிருப்பது திருமணத்திற்கு முன்னிலையினைக் குறிப்பிடுவது போன்று உள்ளது. ஒன்றே மேற்கூறிய சிறப்பு நிலை அடைந்த

தவக்கோலத்தோடு ஒப்ப வைத்துக் கருதும் நிலையில் கோயம்பேட்டில் வலது புறத்தில் தர்ம சம்வர்த்தினி எனும் அறம் வளர்த்த நாயகியம்மை வீற்றிருந்து அருள் புரிகின்றாள் என்பது மேலும் ஓர் சிறப்பம்சமாகும்.

## காண்பது அரிது

வடதிசை நோக்கிய சிவலிங்கப் பெருமானைப் புகழ்பெற்ற நிலவுலகில் காண்பது அரிது. அதனை விளக்கும் பொருட்டே பழமொழி எழுந்தது. இந்த **ஊரைப் பற்றியும், சிவனைப் பற்றியும்** வழங்கி வருகின்ற பழமொழியினைக் கீழே காணலாம்.

***"கோயம்பேடு என்ற ஊரும் இல்லை;***
***குறுங்காலீஸ்வரர் என்ற பேரும் இல்லை".***

**என்றும்**

***"வடக்குப் பார்த்த சிவனும் இல்லை'***
***மடக்குப் போன்ற லிங்கமும் இல்லை"***


என்றும் கூறுவதன் வாயிலாக இச்சிறப்புமிகு தலத்தினைப் பற்றியும், ஈசனைப் பற்றியும் போற்றி வழங்குகின்ற பழமொழியே, பெருமையை பறைசாற்றி விளக்குகிறது. நாம் அனைவரும் சிறப்புமிகு தலத்தினைச் சென்று வணங்குவோம். அரிதாய்ப் பெறும் முத்தியினை எளிதில் பெறுவோம்.

# சங்கடம் நீக்கும் சரபேஸ்வரர்

ஆண்டவனின் பெருமை அடியவர்கள் வாயிலாக வெளிப்படும் என்பது சமயமறிந்த உண்மை. 63 நாயன்மார்கள் செயற்கரிய செயல்புரிந்த திருத்தொண்டில் மகிழ்ந்த சிவபெருமான் அவரவர் நிலைக்கேற்ப அருளிச் செய்த பெருமையை விளக்கும் பாடற் தொகுப்பே திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம். மன்னு புகழ் மதுரையில் உள்ள அம்பலத்தை **"வெள்ளியம்பலம்"** என்று கூறுவர் சமயச் சான்றோர். அடியவர்களுக்காக 64 திருவிளையாடல் களை வெள்ளியம்பலத்திலே நிகழ்த்திய பெருமைக்குரியவன் சொக்கநாதப் பெருமான். அக்கூத்தப் பெருமானின் 64 திருவிளை யாடல்களின் நிலைகள், பெருமைகள், அருளிச் செயல்கள் ஆகியவற்றை விளக்கும் தோத்திர நூலே "திருவிளையாடல் புராணம்' சந்திரசேகரர், ரிஷபாரூடர், நடராசர், பிட்சாடனர், அர்த்தநாரீஸ்வரர், நீலகண்டர், சோமஸ்கந்தர், தட்சிணாமூர்த்தி, லிங்கோத்பவர் முதலாகக் கொண்ட 64 மூர்த்தங்கள் ஆகும். இதனை வடமொழியில் அஷ்டாஷ்ட மூர்த்தங்கள் என்பர். அவற்றுள் ஒரு மூர்த்தமே சரபேஸ்வரர். **சரபேஸ்வரரை சிம்மஹக்னர்** என்றும் கூறுவர்.

## பதினாறு கால் மண்டபத் தூணில் ..

குறுங்காலீஸ்வரர் கோயில் கோபுரத்திற்கு முன்னும், கிழக்கு நோக்கிய வைகுண்ட வாசப் பெருமாள் கோபுரத்திற்கு முன்னும், லவகுச தீர்த்தத்திற்கு முன்னும் அமைந்துள்ளது பதினாறு கால் மண்டபம். பார்ப்பவர்களின் பார்வை பரவசம் அடைந்திடும் நிலையில் கண்ணைக் கவரும் வண்ணம் கருங்கல் தூணில் உள்ள சிற்பங்கள் யாவும்



வில்[illegible]மும் வேப்ப மரமும்
பிணைந்திருக்கும் காட்சி



நரசிம்மரைத் தழுவும்
சரபேஸ்வரர்

அழகுடையனவாகத் திகழ்கின்றது. அம் மண்டபத்தில் மேற்கு திசை நோக்கிய நிலையில் உள்ள **ஓர் கருங்கல் தூணில் சரபேஸ்வர சிற்பம்** அமைந்துள்ளது.

சரபேஸ்வர மூர்த்தியின் அருமை பெருமைகளை உணர்ந்த சமயச் சான்றோர்கள் கலையழகுமிக்க சிற்பத்தினைக் கண்ணாரக் கண்டு ரசித்தால் மட்டும் போதுமா? என எண்ணிக் கரங்கள் குவித்து ஐம்புலன்கள் ஒடுங்குமாறு, மலரிட்டு வழிபடும்படி செய்தனர். சரபத் திருவுருவத்தின் அளப்பரிய சக்தியினை வியந்து போற்ற, எண்ணிலாப் பிறவிகள் வேண்டும். இத்திருவுருவத்தின் பெருமையினைப் படித்தவர்களும், படிப்பறியா பாமரர்களும் உணர்ந்தனர், வழிபாடு செய்தனர். இறையருளால் மக்கள் நலமுடனும் வளமுடனும் வாழ்கின்றனர்.

## வழிபாடும் வழிபடுவதும் மக்களே!

வாரத்தின் விடுமுறை நாளாகத் திகழ்வது ஞாயிற்றுக்கிழமை. ஞாயி றன்று இராகு காலம் மாலை 4-30 மணி முதல் 6-00 மணி வரை ஆகும். இராகு கால நேரத்தில் கோயில் முன் கூடும் கூட்டம் கடலலைபோல் இருக்கும். இவ்வடியார்கள் கூட்டத்தில் மதம், இனம், மொழி முதலான வேறுபாடு இல்லாமல் யாவரும் ஒன்றாய் நின்று வழிபாடு செய்வர். இவ்வழிபாடு மக்களிடத்தில் காணும் சமய ஒற்றுமையை வெளிக்காட்டுகிறது. இவ்வழிபாடு, இவ்வூரிலுள்ள மக்களால் விரும்பி, போற்றிக் கொண்டாடப்படும் சிறந்த வழிபாடாகத் தெரிகிறது. ஞாயிறு மாலை 4-00 மணி முதல் 6-00 மணி வரை சரப வழிபாட்டிற்குரியதான காலத்தில் அபிடேகம் முதல் அலங்காரம், தீபாராதனை வரை அடியவர்களின் மனம் சரபத் திருமூர்த்தத்தில் லயித்திருப்பதைக் காண முடிகிறது. இவ்வழிபாட்டிற்கு மக்கள் தம்மிடம் உள்ள பூசைப் பொருள்களை அகமகிழ்ந்தளிப்பர். மேலும் மக்களே வழிபாடு நடத்துவது பெருமைக்குரிய ஒன்றாகும்.

## சரபேஸ்வர வழிபாட்டின் பலன்:

சரபேஸ்வரரை மனதாலும், உடலாலும் வணங்கிட நாம் அடையும் பலன்கள் எண்ணிட முடியாது. **சரபரின் சக்திகளை** இரு வகைப்படுத்தலாம்: 1. **ஆக்கல் சக்தி** 2. **அழித்தல் சக்தி.**

ஆக்கல் சக்தி என்பது உயிர்கள் செய்யும் நல்வினைக்குத்தக அருள்புரிதலைக் குறிக்கும்.

அழித்தல் சக்தி என்பது உயிர்களை அழிப்பதல்ல. உயிர்களுக்கு ஏற்பட்டுள்ள தீவினைகள், தீய சக்திகள் போன்றன யாவும் அழித்து, நன்னிலைப்படுத்தி அருள்புரிவது.

பில்லி, சூனியம், ஏவல், பூதப்பிரேதம், பைசாச பயங்கள் முதலான செய்வினைகள் யாவும் முழுதும் அழித்தொழிக்கும். மேற்கூறிய தீமைகளைச் செய்பவனையே திருப்பி அழிக்கும் வல்லமை பெற்றது.

தீ விபத்து, விஷக்கடிகள், மருத்துவத்தால் குணப்படுத்த முடியாத உடல்நோய்கள், மனோ வியாதிகள் முதலியன சரபரின் வழிபாட்டினால் முற்றிலும் நீங்கும்.

ஊழ்வினை காரணமாக, தீராத நோய்களையும் தீர்த்து வைக்கும் தீர்த்தனாக சரபேஸ்வரன் விளங்குகிறான். **இயற்கைச் சக்தியும் செயற்கைச் சக்தியும் சரபரின் திருவருள்** இருப்பின் எவையும் நெருங்காது என்பது உறுதி.

## சரபேஸ்வரர் ஏன்? எதற்கு? தோன்றினார்.....

இரண்ய கசிபு, தான் எல்லா நிலைகளிலும் உயர்ந்துள்ளதாக நினைந்து ஆணவச் செருக்குடன் வாழ்ந்து வந்தான், தானே தெய்வத்திற்கு நிகரானவன் என்று கூறியும் வந்தான். "நானே தெய்வம்", "நானே பரம்பொருள்" என்று மக்கள் கூறும்படி ஆட்சி செய்தான். தெய்வத்தையும், தன்னை தெய்வமாகக் கருதி வழிபடாதவரையும் நிந்தனை செய்து வந்தான். அவன் மகனாகிய பிரகலாதன் ஸ்ரீமந் நாராயணனையே பக்திச் சிரத்தையுடன் தொழுது வந்தான்.

**இரண்யகசிபு தன் மகன் பிரகலாதனை நோக்கி**, உன் கடவுள் என் முன் வரச் சொல் என்றான். உடனே பிரகலாதன், "ஸ்ரீ நாராயணா, நாராயணா, நாராயணா" என்று மனமுருகி அழைத்தான். அன்பனின் குறைதீர்க்கும் பொருட்டு தூணைப் பிளந்தபடி வெளிவந்த நரசிம்மம் இரண்ய கசிபுவின் நெஞ்சைப் பிளந்து, குடலை உருவி, உதிரம் குடித்து

அவனை அழித்தார். அழித்த நரசிம்மமூர்த்தி இரண்யகசிபை(பகலும் இரவுமற்ற மாலை நேரத்தில், உள்ளும் வெளியுமற்ற நிலையில் அமர்ந்து, ஆயுதங்கள் இல்லாமல் தம்முடைய கூரிய நகங்களாலேயே) அழித்தார். அவனை அழித்ததனால் உக்கிரம் அடங்காமல் அசுர இரத்தம் தலைக்கேறியது.

பிரம்மன் முதலான தேவர்கள் யாவரும் நடுங்கும்படி அழிவுச சக்தியாக ஆர்ப்பரித்து நரசிம்மம் நின்றது. இதனைக் கண்ட தேவர்கள் பயந்து போய், குற்றங்களை நீக்கும் குணசேகரனாம் அம்மையப்பன் திருவடிகளைச் சரணடைந்து அடைக்கலம் புகுந்தனர். தமது திருவடிகளை அடைந்த தேவர்களிடம், பூத கணங்களின் தலைவனும், தன் **வடிவொத்தவனும் ஆகிய அகோர வீரபத்திரரை அனுப்பி வைக்கிறேன்** என்று கூறி அனுப்பினார்.

## சரபேஸ்வரரின் வடிவம்:

நரசிம்மத்தின் ஆவேசத்தினை, வீரபத்திரரால் தணிக்க முடியவில்லை. உடனே **வீரபத்திரர், தன் வடிவம் நீங்கி, ருத்ர மூர்த்தியானவர் சரபப் பறவையும், மனித உடலும், மிருகமும் கலந்த ஒரு மகா பயங்கர வடிவமெடுக்கிறார். அவ்வடிவங்கொண்ட இறைவனே சரபேஸ்வரர்.** (சரப + ஈஸ்வரர் - சரபேஸ்வரர்) சரபேஸ்வரரின் வடிவமே சிவபெருமானின் வடிவம்.

எட்டுக்கால்களும், இரண்டு முகங்களும், நான்கு கைகளும், கூர்மையான நகங்களும், இருபுறத்திலும் இறக்கைகளும், சிங்கத்தின் வால் போல் நீண்ட வாலும், கருடனைப் போன்ற மூக்கும், காளியைப் போன்ற தெத்துப்பல்லும் கொண்டு தோன்றிய **பறவை வடிவமே சரபேஸ்வர வடிவம் ஆகும்.**

இரு சிறகுகளும் இரு சக்திகளைக் கொண்டன. ஒரு சிறகு **பத்திர காளி (ப்ரத்தியங்கரா)** பிறிதொரு சிறகு **துர்க்கை (சூலி ரி)** இச்சரபப் பறவை வடிவில் சக்தியாய் மாறி, சிவபெருமான் பறந்து வரும் போது சரபத்திருவுரு நிழல் பட்டவுடனேயே, நரசிம்மரின் உக்கிரம் அடங்கி ஒடுங்கியது.

## பதினெட்டு நாட்களா! பதினெட்டு சுலோகங்களா!...

நரசிம்மத்தின் சினத்தினைத் தணிக்க, சரபர் 18 நாட்கள் பல்வேறு வகைகளில் முயற்சி செய்து ஒடுக்கினார். அதில் ஒரு வடிவம் "நரசிம்மரை மார்புடன் தழுவ இழுக்கும் கோலம்'. இக்கோல வடிவமே கோயம்பேடு ஸ்ரீ குசலவபுரீஸ்வரர் கோயிலின் முன்னுள்ள பதினாறு கால் மண்டபத்தூணில் காணலாம். சிவனின் வடிவமாகிய சரபேஸ்வரர் முடிவில் நரசிம்மத்தின் பாதங்களை இருபுறமும் பிடித்து இரண்டாகக் கிழித்துவிட முயல்கையில் தான் எனும் தன்னுணர்வு திரும்பினார் மகாவிஷ்ணு. அப்போது அவர் 18 சுலோகங்களால் தன் சினம் தணியச் செய்த சரபேஸ்வரரைத் துதிக்கிறார். சரப அஷ்டோத்திரமானது நரசிம்மர் வாய் வழித் தோன்றியதே.

## சரப காயத்ரி

ஸாலுவேசாய வித்மஹே
பக்ஷிபராஜாய தீமஹி
தந்நோ சரப: ப்ரசோதயாத்

## ஸ்ரீ சரபேஸ்வரர் மந்திரம்

பாயரன்னோதேவ: சரபஸ்தவ பாயாத்
ஸதாரி ரோகாத் விபிநோர காப்யாம்
வைஸ்வானாரோ குகரி ரிக்ஷிகேபய:
ப்ரேப்யோ பூதே பயோருஷ: க்ருதாந்தத்

இந்த அதர்வண வேத சரப மந்திரம் எல்லா பாபங்களையும் போக்கி, காத்து அருள்புரியவல்லது என்று கூறப்படுகின்றது.

காஞ்சிப்புராணம், சிவப்ராக்ரமம், திருஞானசம்பந்தர் தேவராம் போன்ற நூல்களில் சரபேஸ்வரர் பற்றிய விளக்கத்தைக் கண்டுணர்ந்து தெளியலாம்.

# தொண்டை நாட்டில் கோயம்பேடு

"தொண்டை நாடு சான்றோர் உடைத்து" எனும் பழமொழியால் (தொண்டை நாட்டின்) பெருமையை அறியலாம். அருளாளர்களும், முனிவர்களும் வாழ்ந்த தவபூமி. சங்க காலப் புலவர்கள் முதல் தற்காலம் வரைப் புலவர்கள் பாடும் பாடல்களைத் தன்னகத்தே தாங்கும் ஞானபூமி. அடியவரின் பெருமை, ஆண்டவனால் வெளிப்படும். அது போல ஊரின் பெருமை, நாட்டின் வாயிலாக வெளிப்படும். தொண்டை நாட்டின் ஒரு பகுதியாகவும், முக்தி தரும் நகரமாகவும், கோயில்கள் நிறைந்த நகரமாகவும் காணப்படுவது கோயம்பேடு எனில் மிகையாகாது.

கோயம்பேடு திருத்தலம் சிவத்தலமாக விளங்குவது யாவரும் அறிந்த ஒன்றே. பாடல் பெற்ற தல வரிசையில் 32 சிவத்தலங்கள் அமைந்துள்ளன. அவ்வரிசையில் கோயம்பேடு திருத்தலம் இடம் பெற்றிருத்தல் வேண்டும். காலம் செய்த சதியால் இடம் பெறவில்லை. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்ற அருளாளர்கள் அண்மையிலுள்ள திருவேற்காடு, பாடி என்னும் திருவலிதாயம், திருமுல்லைவாயில், மயிலை முதலான திருத்தலங்களில் பாடியுள்ளனர். கோயம்பேடு திருத்தலத்தினையும் பாடியிருக்க வேண்டும். பாடியிருக்கக்கூடும். இத்தலம் தல வரிசையில் இடம் பெறாதது புலவர்களின் கவனக்குறைவாலும், இயற்கை மற்றும் செயற்கை பாதிப்புகளால் பாடல் பெற்ற சிறப்பு அறிய முடியாமல் போயிருக்கலாம் என்பது என் உள்ளம் துணிந்த முடிபு.

ஏனெனில் வான்மீகி முனிவர் வாழ்ந்த குறிப்பும், குசலவர் பூசித்த குறிப்பும், மூவேந்தர்களில் சோழன் கட்டிய கோயில் கருவறையும், விசயநகர அரசர்களின் வழிவந்த புக்கராயரின் அர்த்த மண்டபமும், காலத்தால் அழியாத கல்வெட்டுகளும் இத்தலத்தைப் பற்றி பறைசாற்றுகின்றன. அருணகிரி நாதர், திருப்புகழால் முருகனைப் பாடிய பாடலும் கிடைத்துள்ளது. இத்தலம், சிவத்தலங்களில் முதன்மை யான தலமாக இருத்தற்குரிய சிறப்பு முழுதும் பெற்றிருக்கிறது.

சிவத்தலங்கள் வரிசையில் இடம் பெறாமல் இருப்பினும் சிவநேய அன்பர்கள், தாம் போற்றும் ஆலயமாகக் காப்பது சாலச் சிறப்பு.

## தொண்டை நாட்டில் உள்ள சிவத்தலங்கள் வரிசையில் இடம் பெற்ற ஊர்கள் பின்வருமாறு:

1. திருக்கச்சி ஏகம்பம் (காஞ்சிபுரம்)
2. திருக்கச்சி மேற்றளி
3. திருக்கச்சி ஓண காந்தன் தளி
4. திருக்கச்சி அநேக தங்காபதம்
5. திருக்கச்சி நெறிக்கரைக்காடு
6. குரங்கணில் முட்டம்
7. திருமாகறல்
8. திருவோத்தூர்
9. திருப்பனங்காட்டூர் (திருப்பனங்காடு)
10. திருவல்லம்
11. திருமால்பேறு
12. திருவூறல் (தக்கோலம்)
13. இலம்பையங்காட்டூர்
14. திருவிற்கோலம் (கூவம்)
15. திருஆலங்காடு
16. திருப்பாச்சூர்
17. திருவெண்பாக்கம்
18. திருக்கள்ளில்
19. திருக்காளத்தி
20. திருஒற்றியூர்
21. திருவலிதாயம் (பாடி)
22. வடதிருமுல்லைவாயில்
23. திருவேற்காடு
24. மயிலாப்பூர்
25. திருவான்மியூர்
26. திருக்கச்சூர்
27. திருவிடைச்சுரம்
28. திருக்கழுகுன்றம்
29. அச்சிறுபாக்கம்
30. திருவக்கரை
31. அரசிலி (ஒழிந்தியாபட்டு)
32. இரும்பை மாகாளம்.

# வரலாற்று நோக்கில் கோயம்பேடு

தமிழகத்தின் பண்டைய கால ஆட்சிமுறை, தர்மங்கள், கலை, நாகரீகம், பண்பாடு ஆகியனவற்றை விளக்கும் காலக்கண்ணாடியை வரலாறு என்று பெயர் சூட்டுகின்றோம். கல்வெட்டுகள், கலையம்சங்கள் நிறைந்த கோயில்கள், இலக்கியங்கள் ஆகியன காலங்கடந்து வந்த பாதச் சுவடுகளை அறிந்திட உதவும் ஆதாரங்களாகத் திகழ்கின்றன. **வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற நகரமாகத்** திகழ்கின்றது கோயம்பேடு எனில் மிகையாகாது.

தற்போது **மாநகரத்தின் வணிக வளாகமாகக் கோயம்பேடு** (KOYAMBEDU MARKET) என்னும் ஊர் சிறந்து விளங்குவது என்பது யாவரும் அறிந்த ஒன்றே.

## ஜெயங்கொண்ட சோழனின் கலைவண்ணம்:

முற்காலத்தில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்கள் தாம் ஆட்சி செய்யும் பகுதியில் வெற்றிக் கொடி நாட்டிடுவர்! மேலும் தம்மாட்சியில் அழியாச் செல்வமிக்க யாவருக்கும் நன்மைதரும் செயல்களிலும் கலைகளிலும் ஈடுபட்டு மன்னிய சீர்புகழ் பெறுவர். அவ்வகையில் கி.பி.10 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்தவன் முதலாம் இராஜராஜன் என்னும் ஜெயங்கொண்ட சோழன். சோழ மன்னன் அரசாட்சியை நன்னிலையில் ஆண்டு செங்கோலோச்சி வந்தான். அவன் தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக விளங்கும் கோயம்பேடு என்னும் சிவத்தலத்திற்கு அறங்கள் பல செய்துள்ளான். அவற்றுள் தலைசிறந்த அறமாகப் போற்றும் கற்கோயிலையும் கட்டியுள்ளான். **குசலவர்கள் போற்றி வழிபட்ட குறுங்காலீஸ்வரர் ஆலயத்தின் கருவறையுடன் அமைந்த கோபுரத்தை அழகுடன் கட்டித் தந்தான் என்று வரலாற்று ஆராய்ச்சி கூறுகிறது**. ஜெயங்கொண்ட சோழனின் ஆட்சிக் காலம் கி.பி.985 முதல் 1014 ஆண்டு வரை.

## மூன்றாம் குலோத்துங்கன்:

கி.பி.11-ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த அரசன் திரிபுவன சக்கரவர்த்தி என்னும் **மூன்றாம் குலோத்துங்கச் சோழன்,** இவ்வாலயத்திற்கு நிவந்தங்கள் பல அளித்து இனிது காத்து அருள்

பாலித்துள்ளான் எனக் கல்வெட்டுகள் கூறுகின்றன. காலம் கி.பி. 1070 முதல் 1128-ஆம் ஆண்டு வரை.

## அர்த்த மண்டபம் கட்டிய வள்ளல்:

**விஜய நகர அரசர்களில்** ஒருவர் புக்கராயர். இவரது ஆட்சிக் காலத்தில் கோயம்பேடு மாநகரமும் ஆளுகைக்குட்பட்ட ஒரு பகுதியாகும். இக்கோயம்பேடு தலத்தில் கோயில் கொண்ட ஈசன் மீது அன்பும் சமய ஈடுபாடும் கொண்டு விளங்கினார் புக்கராயர். மேலும் கோயிலின் **அர்த்த மண்டபத்தைக்** கட்டி, தாம் கொண்ட ஈடுபாட்டைக் கலையின் வாயிலாகக் காட்டியுள்ளார். தொல்லியல் ஆராய்ச்சியாளர்கள், இக்குறுங்காலீஸ்வரர் கோயில் கட்டி 2700 ஆண்டுகள் கடந்த நிலையிலும் சிறப்புற்று விளங்குகிறது என்று கூறுகின்றனர்.

## நாற்பது கால் மண்டபம்:

**நாற்பது கால் மண்டபத்தூணின் முகப்பு வாசலின் இரு புறமும் குதிரைகளைக் கடிவாளத்துடன் பிடித்த நிலையில் இலவ குசர்கள் விளங்கும் காட்சி கண்ணுக்கு விருந்தாகவும், தொன்மை வரலாற்றுக்குச் சான்றாகவும் விளங்கும்.** இராமன், வில்லேந்திய நிலையிலும், இலட்சுமணன், இலவகுசர் பூசிப்பது, அனுமன் வணங்கும் நிலை முதலான சிற்பங்கள் இராமாயணக் கதையில் இடம்பெறும் காட்சிகளைக் கொண்டிருப்பதும் வரலாற்றுச் சான்றாக விளங்குகின்றது.

## வால்மீகி முனிவர்:

கோயம்பேட்டில், **வால்மீகி முனிவர் ஆசிரமம்** அமைத்துத் தங்கி வாழ்ந்துள்ளார் என்ற குறிப்பும் அறியப்படுவதால் இக்கோயில் இராமாயண காலத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கும் அளவிற்கு வர்லாற்றுத் தொடர்புடையதாக விளங்குகிறது.

## அருணகிரிநாதர்:

அருணகிரிநாதர், முருகன் அருள் பெற்றவர்; சந்தக் கவி பாடிய கவிஞர். இவர் தல வழிபாடு செய்து வருகின்றபோது இங்கு உள்ள முருகனைக் **கோசைநகரில் வீற்றிருக்கும் முருகனே** என்று போற்றிப்

பாடுகின்றார். சுமார் 600 ஆண்டுகட்கு முன்னர் வாழ்ந்த அருணகிரி நாதர் பாடிய பாடல் வாயிலாகக் கோயிலின் பழமையை உணரலாம்.

## முத்திக்கு வித்து

கோயம்பேடு திருத்தலம் சித்தர்கள் முத்தியடைவதற்குத் தக்க இடமாகத் திகழ்ந்துள்ளது. சித்தர்கள் மனத்தினில் யோகீஸ்வரனை நினைத்து யோக நிலையில் நின்று தவம் புரிந்து சமாதிநிலை அடைந்துள்ளனர். இச்செய்தியினை விஜயநகர அரசர் புக்கராயர் தாம் கட்டிய 40 கால் மண்டபத்தில் அமைந்துள்ள பல தூண்களில் சித்தர்களின் உருவம் செதுக்கப்பட்டுள்ளனவற்றைக் கண்டு உணரலாம்.

## கல்வெட்டுக்களில்

இக்கோயிலைப் பற்றிய செய்திகள், பாடி எனும் திருவலிதாயம், திருமுல்லைவாயில், திருவான்மியூர் ஆகிய கோயில் கல்வெட்டுகளில் குறிப்பிட்டுள்ளது முதலான செய்திகள் முன்னோர்கள் கூறியதன் வாயிலாக அறிய முடிகிறது.

வடதிருமுல்லை வாயில் மாசிலாமணி ஈசுவரன் திருக்கோயிலில் மாசி மாதம் நடக்கும் மக விழாவிற்கு, கோசை நகரில் வீற்றிருக்கும் குறுங்காலீஸ்வரர் கோயில் சார்பாக நிதி அனுப்பியுள்ளதாகக் கல்வெட்டின் வாயிலாக அறியலாம்.

## இலக்கியங்களில்

கோயிலுக்கு முன் அமைந்துள்ள 16 கால் மண்டபத் தூணில் அமைந்த சரபேஸ்வரரை நினைந்து, அருட்கவி தவத்திரு சாதுராம் சுவாமிகள், **ஸ்ரீ சர்பமூர்த்தி போற்றி 108** என்னும் பாமாலையைப் பாடியருளியுள்ளார். உயிர் வருக்க மாலையாகப் பாடியிருப்பது நூலின் சிறப்பாகும்.

கோயம்பேடு எனும் **குசலவபுரீசுவரர் தோத்திரப்பஞ்சகம்** மற்றும் **தருமசம்வர்த்தனியம்மை தோத்திரப்** பஞ்சகம் என்னும் இவ்விரு நூல்கள் கிடைத்துள்ளன. இந்நூலைப் பாடியவர்கள் பெயரினை அறிய முடியவில்லை.

ARE No.: 1, Location : On the west wall of Central Shrine

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன்
முடித்தலையும கொண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க -
கசோழதேவற்கு யாண்டு இருபத்தொன்றாவது ஜயங்கொண்ட
சோழ மண்டலத்துப் புலியூர்க் -
கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டு மாங்காட்டு
நாட்டுக் கோயம்பேட்டு உடையார் குறுங்கா -
லாண்டற்கு இம்மண்டலத்து இக்கோட்டத்து இன்னாட்டுச்
சிந்துக்காட்டு இளங்கி-
ழவன் பள்ளிகொண்டான் திருக்காளத்தி உடையான்
சந்திராதித்தவரை செல்வதாக வைத்த
திருநந்தாவிளக்கு ஒன்றுக்கும் இக்கோயிற் காவி உடைய
சிவப்பிராமணன் கௌ -
வதமன் பெருமாள் பட்டன் குழைஞ்சருள குலோத்துங்க
சோழ பட்டன் உள்ளிட்டொரும் இக்கோ -
த்திரத்து ஆகும்பிரான் பட்டன் சிவஞானதேவன் உள்ளிட்டொரும்
கைக்கொண்ட புசபல புதுமாடை ப -
ன்னிரண்டும் இத்திரு நந்தாவிளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை
எரிப்பதாக கைக்கொண்டோம் பெருமா -
ள் பட்டன் குழைஞ்சருள குலோத்துங்க சோழ பட்டன் உள்ளிட்டொரும்
ஆகும் பிரான்பட்டன் சிவஜ
ஞானதேவன் உள்ளிட்டொரும் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை

## கல்வெட்டின் விளக்கம்

இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்:

**இருக்குமிடம்:** கருவறையின் மேற்குச் சுவரின் நடுவில் அமைந்துள்ளது

## கல்வெட்டுச் செய்தி:

ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையும் கொண்டு அருளியவன் **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவன்.** ஆட்சியாண்டு **இருபத்தியொன்றாவது ஆட்சியாண்டு கி.பி.1199**

ஜயங்கொண்ட சோழ மண்டலத்தில் புலியூர்க் கோட்டம் என அழைக்கப்பெறும் குலோத்துங்க சோழ வள நாட்டில் மாங்காட்டு நாட்டில் ஒரு ஊரான கோயம்பேட்டில் உள்ளவரான குறுங்காலண்டற்கு (குறுங்காலீஸ்வரருக்கு) இம்மண்டலத்தில் உள்ள இக் கோட்டத்தில் இந்நாட்டில் வசிக்கும் **சிற்றுக்காட்டு இளங்கிழவன் பள்ளிகொண்டான் திருக் காளத்தி உடையான்** என்பவர் சந்திரனும் சூரியனும் உள்ள வரை நடப்பதாக வைத்த திரு **நந்தாவிளக்கு ஒன்றினை ஏற்ற,**

இக் கோயிலில் காவி உடைய சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள்பட்டன் இசைந்தருள, குலோத்துங்க சோழ பட்டன் உள்ளிட்டோரும், இக்கோத்திரத்து ஆகும் பிரான் பட்டன் சிவஞான தேவன் உள்ளிட்டோரும் கைக்கொண்ட **பன்னிரண்டு புசபல புதுமாடை** (1 புசபலபுதுமாடை - 3 பழங்காசு - 12X3 = 36 காசுகள்: **சோழர் கால** நாணயங்கள்) தந்து இத்திரு நந்தா விளக்கு ஒன்றினைச் சந்திரன் சூரியன் உள்ள வரை விளக்கேற்றவதாக உடன்படிக்கை செய்து கொண்டோம்.

**பெருமான் பட்டன் இசைந்தருள குலோத்துங்கச் சோழ பட்டன் உள்ளிட்ட** வரும் ஆகும் **பிரான் பட்டன் சிவஞான தேவன் உள்ளிட்ட** வரும் செய்து கொடுத்த உடன்படிக்கையான இது பல சிவனடியார்களின் தர்மச் செயலைக் காப்பாற்றுவதற்காகவே அமைக்கப்பட்டது.

ARE No.: 2, Location : On the west wall of Central Shrine

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சீரங்கநாதரான
யியாதவராயற்கு
யாண்டு பதினாறாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்து
புலியூர் கோட்டமா -
ன குலோத்துங்கசோழ வளநாட்டில் மாங்காட்டு நாட்டு
கோயம்பேட்டு உடையார் குறுங்காலா -
ண்டாற்கு நடுவில் மண்டலத்து திருமுனைப்பாடி நாட்டு
திருநாவலூர் நாவலூருடை
யான் முதலிப் பிள்ளை கரியதேவர் சந்திராதித்தவரை
செல்வதாக வைத்த
திருசந்திர விளக்கு ஒன்றுக்கும் இக்கோயிற்
காவிஉடைய சிவப்பிராமணன்
கௌவுதமன் ஆகும்பிரான்பட்டன் ஆகும்பிள் ளையும்
இ(க்)த்திரத்து வாழவ -
ந்தான் பட்டன் உடையாரும் கைக்கொண்ட
பசு ஒன்றும் நாகும் ஒன்றும் ஆகவரு
.............. ந்திராதித்தவரை எரிப்பதாகக்
கைக்கொண்டோம்.

## கல்வெட்டின் விளக்கம்

இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 2

**இருக்குமிடம்:** கருவறை மண்டபத்தின் கிழக்குச் சுவரில் இத்தமிழ்க் கல்வெட்டு அமைந்துள்ளது.

**பேரரசு :** ஸ்ரீ திருபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ சீரங்க நாதரான **யாதவராயர்**

**ஆட்சியாண்டு:** 16 ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1353 ஆம் ஆண்டு)

**மண்டலம்:** ஜயங்கொண்ட சோழ மண்டலம்

**கோட்டம்:** புலியூர்க் கோட்டம்

**வளநாடு:** குலோத்துங்க சோழ வள நாடு

**நாடு :** மாங்காடு

**ஊர்:** கோயம்பேடு

**இறைவன்:** குறுங்காலாண்டார்

## கொடையாளர் தந்த கொடை:

நடுவில் மண்டலத்து திருமுனைப்பாடி நாட்டில் **திருநாவலூரில் நாவலூருடையான் முதலிப்பிள்ளை கரிய தேவர்** என்பவர் இக்கோயிலில் **சந்திவிளக்கு** ஒன்று ஏற்றுவதற்காக, **கொடைப் பொருளாக பசு ஒன்றும், இளங்கன்று ஒன்றும் காவி உடைய சிவப்பிரமாணன் கௌதமன் பெருமாள் பட்டன், பிரான் பட்டன்** மற்றும் வாழவந்தான் பட்டன் ஆகியோர் முன்னிலையில் சந்திராதித்தவரை விளக்கேற்றுவதற்காக செய்து கொடுக்கப்பட்ட உடன்படிக்கையாகும்.

ARE No.: 3, Location : On the south wall of Central Shrine

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும்
பாண்டியன் முடித்தலையுங் கொ -
ண்டருளிய ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு
இருபத்தொன்றாவது ஜயங்கொண்ட -
ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டமாவகுலோத்துங்க
சோழ வளநாட்டு மாங்காட்டு நாட்டு
க் கோயம்பேட்டு உடையார் குறுங்காலாண்டாற்கு இவ்வூர் சிவபூதன்
மதிசூதன் வானவனாயகன் அகமுடையாள் உய்(ய) -
வந்தான் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த திருநந்தா விளக்கு
இரண்டுக்கும் இக்கோயிற் காவிஉடைய சிவப் -
பிராமணன் கௌவுதமன் பெருமாள்பட்டன் குழைஞ்சானான குலோத்துங்க
சோழபட்டன் உள்ளிட்டொழும் இக் -
கோத்திரத்து ஆகும்பிரான்பட்டன் சிவஞானதேவன்
உ ள்ளிட்டொழுங் கைக்கொண்-
ட புசபலப்புது மாடை இருபத்திநாலு இம்மாடை
இருபத்திநாலும் இத்தி -
கு நந்தாவிளக்கு இரண்டும் சந்திராதித்தவரை
எரிப்பதாக கைக்கொண்டோம்
பெருமா(ள்) பட்டன் குழைஞ்சானான குலோத்துங்க
சோழபட்டன் உள்ளிட்டொ -
ழும் ஆகும்பிரான் சிவஞானதேவன் உள்ளிட்
டொழும் இது பன்மா -
ஹேஸ்வர ரக்ஷை

## கல்வெட்டின் விளக்கம்

இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 3

| | |
|---|---|
| **இருக்குமிடம்:** | கருவறை மண்டபத்தின் தெற்குப்புறச் சுவரில் இருக்கும் தமிழ்க் கல்வெட்டு. |
| **பேரரசு:** | ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவன்** |
| **ஆண்டு:** | இருபத்தொன்றாவது ஆட்சியாண்டு (கி.பி.1199 ஆம் ஆண்டு) |
| **மண்டலம்:** | ஜயங்கொண்ட சோழ மண்டலம். |
| **கோட்டம்:** | புலியூர் கோட்டம் |
| **வளநாடு :** | குலோத்துங்க சோழ வளநாடு |
| **நாடு:** | மாங்காடு |
| **ஊர்:** | கோயம்பேடு |
| **இறைவன் :** | குறுங்காலாண்டான் |

## கொடையாளர் தந்த கொடை:

**இவ்வூர் சிவபூதன் மதிசூதன் வானவ நாயகன் அகமுடையான் உய்ய வந்தான்** என்பவர் **இரண்டு திரு நந்தா விளக்கு ஏற்றுவதற்காக,** கோயிலில் காவி உடைய சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள் பட்டன், குலோத்துங்க சோழ பட்டன், பிரான் பட்டன், சிவஞான தேவன் ஆகியோர் முன்னிலையில் 24 புசபலபுதுமாடை**(24 X 3 = 72 பழங்காசுகள் – சோழர் கால நாணயங்கள்)** தந்துள்ளார். அப்பணத்தை வைத்துக்கொண்டு சந்திராதித்தவரை மேற்கூறிய மூவரும் திருநந்தா விளக்குகளை ஏற்றுவதாக உடன்படிக்கை செய்து கொடுத்தனர். இதனைப் போற்றிக் காப்போம்.

ARE No.: 4, Location : On the south and east walls of the Central Shrine.

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன்
முடித்தலையுங் கொண்டருளிய ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவற்கு யாண்டு
இருபத்திரண்டாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப் புலியூர்க் கோட்டமான
குலோத்துங்க சோழ வளநாட்டு மாங்காட்டு நாட்டுக்
கோயம்பேட்டு உடையார் குறுங்காலாண்டாற்கு இவ்வூர்க்கருப்புழான்
அரிகுலனாயகன் வடுகநாதன் அகமுடையாள் தேவாண்டாள் சந்திராதித்த
வரை செல்வதாக வைத்த திருவந்தா விளக்கு ஒன்று இவ்விளக்கொன்றும்
இக்கோயிற் காவிஉடைய சிவப்பிராமணன் கௌவுதமன் பெருமாள்பட்டன் - குழைஞ்சனான
குலோத்துங்க சோழபட்டன் உள்ளிட்டொழும் இக்கோத்திருத்து
ஆகும் பிரான்பட்டன் சிவஞானதேவன் உள்ளிட்டொழு
ம் கைக்கொண்ட புசப்பலபுதுமாடை பன்னிரண்டு இம்மாடை பன்னிரண்டும்
உபையமாகக் கைக்கொண்டு இவ்வாண்டைத்ன -
த மாதமுதல் இத்திருநந்தாவிளக்கு ஒன்றுஞ் சந்திராதித்தவரை
எரிப்போமாகக் கைக்கொண்டோம் பெருமாள் பட்டன்
குழைஞ்சானான குலோத்துங்க சோழபட்டன் உள்ளிட்டொழும்
ஆகும்பிரான் பட்டன் சிவஞான தேவன் உள்(ளி)
ட்டொழும் இவ்வளைவோம் இது பன்மாஹே
ஸ்வர ரக்ஷை

## கல்வெட்டின் விளக்கம்

### இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 4

| | |
|---|---|
| **கல்வெட்டு இருக்குமிடம்:** | கருவறை மண்டபத்தில் தெற்கு மற்றும் கிழக்குப்புறச் சுவர்களில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது. |
| **கல்வெட்டு:** | தமிழில் அமைந்த கல்வெட்டு |
| **பேரரசு:** | ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையும் கொண்டருளிய **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ வேந்தன்.** |
| **காலம்:** | இருபத்திரண்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 1200 ஆம் ஆண்டு) |
| **மண்டலம்:** | ஜயங்கொண்ட சோழ மண்டலம் |
| **கோட்டம்:** | புலியூர்க் கோட்டம் |
| **வளநாடு:** | குலோத்துங்க சோழ வளநாடு |
| **நாடு:** | மாங்காடு |
| **ஊர்:** | கோயம்பேடு |
| **இறைவன் பெயர்:** | குறுங்காலாண்டார் |

## கொடையாளரும் கொடையும்:

இவ்வூர் **கருப்புழான் அரிகுல நாயகன் வடுகநாதன் அகமுடையாள் தேவாண்டாள்** என்பவர் சந்திராதித்த வரை செல்வதாக வைத்த **திரு நந்தா விளக்கு ஒன்று** எரிப்பதற்காக, கோயில் காவி உடைய சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள் பட்டன், குலோத்துங்க சோழ பட்டன் மற்றும் பிரான் பட்டன் சிவஞான தேவன் உள்ளிட்டவர்கள் முன்னிலையில் **12 புசபலபுதுமாடை** (12 X 3 =36 பழங்காசுகள், சோழர்கால நாணயங்கள்) உபயமாகக் கொடுக்கப்பட்டது. இப்பழங்காசுகளை வைத்து இவ்வாண்டு **தை மாத முதல் நந்தா விளக்கினை சந்திராதித்த வரை எரிப்பதாக** இசைவு தெரிவித்து உடன்படிக்கை செய்து ஒப்புக்கொண்டோம். இதனைப் போற்றிக் காப்போம்.

ARE No.: 5, Location : On the east wall of Central Shrine

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் திரிபுவனவீரதெவற்கு யாண்டு

முப்பத்தெழாவது ஜயங்கொண்ட சோழ மண்டலத்துப்புலியூர்க் கொட்டமான - குலோத்துங்க

சோழ வளநாட்டு யார்காட்டுக் கொயம்பெட்டு உடையார் குறுங்காலாண்டார்க்கு

திருநந்தவனஞ்செய்யத் திருநந்தவனப்பட்டிக்கு இவ்வூர் இருப்புழான் வடுக நாதன்

அகமுடையாள் தெவாண்டாளென் இந்நாயனார் தெவதாயமாய் ஒருகிழகாயிநிலத்தில்

குறுச்சுழான் பள்ளமான செறுக்குழி ஐந்தாறும் முன்பு நந்தவனப்பட்டி என -

பெயர் கூறிவருகிற ஏரிகீழ் குழி ஐந்தாறும் ஆகக் -

குழி ஆயிரமும் சங்டெய்சுரலில்லயாக இறையிழிச்சி கொண்டு சிபண்டாரத்துக்கு

முடுக்கின பழங்காசு பத்தும் இன்பழங்காசு பத்துக்கும் இக்குழி ஆயிரமும்

கொண்டு இந்நாயநார்க்குத்திரு

நந்தவனப் படியாக கொண்டு (எ)ன் தன்மமாக இன்னாயநார்க்கு

சந்திராதித்தவரை செல்வதாக யிட்டென தெவாண்டானென்.

## கல்வெட்டின் விளக்கம்

இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 5

**இருக்குமிடம்:** கருவறை மண்டபத்தின் கிழக்குச் சுவரில் அமைந்துள்ளது.

**கல்வெட்டு:** தமிழ்க் கல்வெட்டு

**பேரரசு:** ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் **திரிபுவன வீர தேவன்**

**காலம்:** 37 ஆவது ஆட்சியாண்டு (கி.பி. 1215 ஆம் ஆண்டு)

**மண்டலம்:** ஜயங்கொண்ட சோழ மண்டலம்

**கோட்டம்:** புலியூர்க் கோட்டம்

**வளநாடு :** குலோத்துங்க சோழ வளநாடு

**நாடு :** மாங்காடு

**ஊர்:** கோயம்பேடு

## கொடைதந்த கொடையாளர்:

குறுங்காலண்டார்க்கு இவ்வூரில் அகமுடையாள் **தேவாண்டாள்** என்பவர் திருநந்த வனம் செய்யத் திருநந்தவனப்பட்டிக்காகக் கொடுக்கப்பட்ட கொடையாகும்.

தேவாண்டாள் என்பவர் தேவதாயமாய் வருகிற காணி நிலத்தில் **குறுச்சுழான் பள்ளமான செலுக்குழி ஐந்து தூறும்.**

**ஆகக் குழி ஆயிரமும், சண்டெய் சுரளிக்காக இறையிழிச்சி கொண்டு,** திருப்பண்டாரத்துக்குக் கொடுத்த பழங்காசு **பத்தும்** கொடைப் பொருளாகத் தந்துள்ளார்.

மேற்கூறிய பழங்காசு பத்தும், இக்குழி ஆயிரமும் கொண்டு இந்நாயனாராக விளங்கும் குறுங்காலாண்டார்க்குத் திருநந்தவனப் படியாகக் கொண்டு என் தன்மமாக (தருமமாக)ஏற்றுக் கொண்டு சந்திராதித்தவரை செல்வதாகச் செய்ய வேண்டுமென அடியேனாகிய தேவாண்டாள் கேட்டுக் கொள்கிறேன்.

| ARE No.: 6, Location : | On the south wall of the Mandapa in front of the Central Shrine |
|---|---|

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையு

ங்கொண்டருளிய ஸ்ரீ குலொத்துங்க சொழதெவற்கு யாண்டு இருபத்தைந்தாவது

கொயம்பெட்டு உடையார் குறுங்காலாண்டார்க்கு இவ்வூர்ச்சிவபூதன் பொன்னம்பல (ன)

க்கத்தன் செல்வன் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த சந்திவிளக்கு ஒன்றுக்கும் இக் -

கொயிற்காணிஉடைய சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள்பட்டன் குழைஞ்சானானகுலொ -

த்துங்க சொழ பட்டன் உள்ளிட்டொழும் இக்கொத்திரத்து ஆகும் பிரான்பட்டன் சிவஜ்ஞான

னவன் உள்ளிட்டொழும் கைக்கொண்ட பசு ஒன்றும் சினைநாகு ஒன்றும் நாகு ஒன்றும்

ஆக வரு ஒன்றும் கைக்கொண்டு சந்திவிளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிப்பதாக கைக்கொண்டொம்

பெருமாள் பட்டன் குழைஞ்சானான குலொத்துங்க

சொழப்பட்டனுள்ளிட்டொழும் ஆகும் - பிரான்பட்டன் சிவஜ்ஞான தெ - வன் உள்ளிட்டொரும் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை.

வன் உள்ளிட்டொழும் இது பன்மாஹாஸ்வரரக்ஷை

## கல்வெட்டின் விளக்கம்

### இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 6

**இருக்குமிடம் :** கருவறை மண்டபத்தின் தெற்குச் சுவரில் அமைந்துள்ளது.

**கல்வெட்டு :** தமிழில் அமைந்துள்ளது.

**பேரரசு :** ஸ்ரீ திருபுவன சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளிய சோழன் ஸ்ரீ **குலோத்துங்கச் சோழ தேவன்**

**ஆண்டு :** இருபத்தைந்தாவது ஆட்சி ஆண்டு (கி.பி.1203 ஆம் ஆண்டு)

**மண்டலம் :** ஜயங்கொண்ட சோழ மண்டலம்

**கோட்டம் :** புலியூர்க் கோட்டம்

**வளநாடு :** குலோத்துங்க சோழ வளநாடு

**நாடு :** மாங்காடு

**ஊர் :** கோயம்பேடு

### கொடையும், கொடையாவரும் :

இவ்வூர்ச் **சிவபூதன் பொன்னம்பலக் கூத்தன் செல்வன்** என்பவர் **சந்தி விளக்கு ஒன்று ஏற்ற, ஒரு சினை நாகு (கன்றும்) கன்று ஒன்றும்** கோயிலுக்குக் கொடையாகக் கொடுத்து சந்திராதித்தவரை விளக்கு எரிக்கவேண்டும் என்று கொடுத்துள்ளார்.

**முன்னிலையும், ஒப்புக் கொண்டவர்களும்** : காவி உடைய சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள் பட்டன், குலோத்துங்கச் சோழ பட்டன் மற்றும் பிரான் பட்டன் சிவஞானதேவன் உள்ளிட்டவர்களும் இசைவு தெரிவித்து உடன்படிக்கை செய்து ஒப்புக் கொண்டனர். மேற்கூறிய அனைவரும் போற்றிக் காப்பார்களாக.

| ARE No.: 7, Location : On the south wall of the Mandapa, in front of the Central Shrine |
|---|

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்

தலையுங்கொண்டருளிய சிகுலொத்துங்க சொழதெவற்கு யாண்டு முப்பதாவது

ஜயங்கொண்ட சொழ மண்டலத்துப் புலியூர்கொட்டமாவகுலொத்துங்க சொழ வள

னாட்டு மாங்காட்டு நாட்டுக் கொயம்பெட்டு உடையார் குறுங்காலாண்டார்க்கு இவ்வூர்க்

கருப்புழா -

ன் வடுகநாதன் மகள் வியாண்டாள் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த சந்திவிளக்கு ,

ல்விளக்கு ஒன்றும் இக்கொயிற் காவிஉடைய சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள்பட்டன் குழை

ஞ்சானான குலொத்துங்க சொழபட்டன் உள்ளிட்டொழும் இக்கொத்திரத்து ஆகும்பிரான்ப -

ட்டன் சிவஜஞானதெவன் உள்ளிட்டொழும் கைக்கொண்ட புசபலப்புதுமாடை இரண் -

டு இம்மாடை இரண்டும் உபையமாகக் கைக்கொண்டு இவ்வாண்டைப் புரட்டாசி

மாதமுதல் இச்சந்தி விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிப்பொமாகக் கைக்கொண் -

டொம் பெருமாள் பட்டன் குழைஞ்சானான குலொத்துங்க சொழபட்டன் உள்ளிட்டொ -

ழும் ஆகும்பிரான்பட்டன் சிவஜஞானதெவன் உள்ளிட்டொழும் இன்னவைலொம் இது ப -

ன்மாஹெஸ்வரரக்ஷை

## கல்வெட்டின் விளக்கம்

### இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 7

**இருக்குமிடம் :** கருவறை மண்டபத்தின் தெற்குச் சுவரில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது.

**கல்வெட்டு :** தமிழ்க் கல்வெட்டு.

**பேரரசு :** ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையும் கொண்டருளியவன் **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவன்.**

**ஆட்சியாண்டு :** முப்பதாவது ஆட்சியாண்டு (கி.பி.1208 ஆம் ஆண்டு)

**மண்டலம் :** ஜயங்கொண்ட சோழ மண்டலம்

**கோட்டம் :** புலியூர்க் கோட்டம்

**வளநாடு :** குலோத்துங்க சோழ வளநாடு

**நாடு :** மாங்காடு

**ஊர் :** கோயம்பேடு

## கொடையும் , கொடை தந்தோரும் :

இவ்வாண்டு புரட்டாசி மாத முதல் **சந்தி விளக்கு ஒன்று** சூரியன் சந்திரன் உள்ளவரை **ஏற்றிட இரண்டு பழங்காசுகள்** (புசபலபுதுமாடை) வழங்கப்பட்டன. **கருப்புழான் வடுகநாதனின் மகள் இறையாண்டாள்** என்பவள் (கொடைப் பொருளை வழங்கியவர்).

**முன்னிலையும், உடன்படிக்கை செய்தவர்களும் :** காவி உடைய சிவப்பிராம்ணன் கௌதமன் பெருமாள் பட்டன், குலோத்துங்க சோழபட்டன், மற்றும் பிரான் பட்டன் சிவஞானதேவன் ஆகியோர்கள் புரட்டாசி மாதமுதல் ஒரு அணையாவிளக்கு ஏற்ற, 2 பழங்காசுகள் பெற்றுக் கொண்டோம் என்று இசைவு தெரிவித்து, சந்திரன் சூரியன் உள்ளவரை விளக்கெரிப்போம் என எழுதி உடன்படிக்கை செய்து கொடுக்கிறோம். இத் தருமத்தை அனைவரும் போற்றிப் பாதுகாக்கவும்.

ARE No.: 8, Location : On the south wall of the Mandapa in front of the Central Shrine

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங் கொ -

ண்டருளிய சி குலொத்துங்க தெவர்க்கு யாண்டு இருபத்தஞ்சாவது ஐயங்கொ -

ண்டசொழ மண்டலத்துப் புலியூர் கொட்டமான குலொத்துங்க சொழவ-

ளனாட்டு மாங்காட்டு நாட்டுக் கொயம்பெட்டு ஊராம் எங்களூர் நாயனார் குறு -

ங்காலாண்டார்க்கு திருவொத்த சாமச்சந்திமுட்டுதல்லால் இக்கொயிலில் ஆண்டார்

சிறுதொண்டர் வாயி(லி)லெ தாடக் கொக்க(ப்)புக்கமையில் ஊராக நாங்கள்

இதுவரை வாயித்தாள் கொவாமெ தவிர்த்து இச்சந்தி செலுத்துவொமா -

க இதுக்கு உடலாக இவ்வூர்ப் பயிர் செய்த நிலத்துக்கு கையிட்ட நிலத்து-

க்கு விரிவிலெ நெற்பயிர்செய்த நிலத்துக்கு வெலி இருகல நெல்லு குடுப்பதாக -

வும் வரகுகேழ்வரகு உள்ளிட்ட(ட)புன்சை நிலத்துக்கு வெலிகலங்குடுப்பதாகவும் இரும்

பு செய்த நிலத்துக்கு நெல்லிரட்டி குடுப்பதாகவும் கமுகு செய்த நிலத்துக்கு

கமுகால் பத்துபாக்கும்(கு) ஒயொரு கட்டு வெற்றிலையும் எள்குப் பருத்தி

க்கு வெலி ஐஞ்சு புதுக்காசும் ஆறு மாக்காளி வா(சி)யெற்றின நிலத்துக்கு குடு

ப்பதாகவும் குடாதாரை ஒடுக்கியும் பறித்தும் பறித்துக் கொள்ளக்கடவதாக இப்படி ...

(செலுத்தி) சந்திராதித்தவரை செல்வதாக வைச்சுக் குடுத்தொம் கொயம்பெட்டு ஊரொம்

## கல்வெட்டின் விளக்கம்

### இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 8

**கல்வெட்டு :** தமிழ்க் கல்வெட்டு. முழுமையாகக் கிடைக்கவில்லை.

**இருக்குமிடம் :** கருவறை மண்டபத்தின் தெற்குச் சுவரில் இக்கல்வெட்டு அமைந்துள்ளது.

**பேரரசு :** ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையுங் கொண்டு அரசாள்பவன் **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவன்**

**ஆட்சியாண்டு :** இருபத்தைந்தாவது ஆட்சியாண்டு (கி.பி.1203 ஆம் ஆண்டு)

**மண்டலம் :** ஜயங்கொண்ட சோழ மண்டலம், **கோட்டம் :** புலியூர்க் கோட்டம்

**வளநாடு :** குலோத்துங்க சோழ வளநாடு, **நாடு :** மாங்காடு

**ஊர் :** கோயம்பேடு

**இறைவன் பெயர் :** குறுங்காலாண்டார்

**கொடை கொடுத்தவர் :** சிறுதொண்டர்

**கொடை :** கொடைப் பொருளாக நிலம் தந்துள்ளார்.

குறுங்காலீஸ்வரரின் அர்த்த சாம பூஜைக்காகத் தடையில்லாமல் சிறப்பாக நடைபெறுவதற்குச் சிறுதொண்டர் வாயிதாவாகக் கொடுக்கப் புகுந்தமையால் ஊராக நாங்கள் இதுவரை வாயிதா கொடுக்காமல் தவிர்த்து இச்சாம பூஜையினைச் சிறப்பாகச் செலுத்துவோமாக.

இதற்கு உடலாக இவ்வூர்ப் பயிர் செய்த நிலத்துக்குக் கையிட்ட நிலத்துக்கு விரிவாக நெற்பயிர் செய்த நிலத்துக்கு வேலி **இருகலம் நெல்** கொடுப்பதாகவும்,

வரகு, கேழ்வரகு உள்ளிட்ட புன்செய் நிலத்துக்கு **வேலி கலம்** (அளவு) கொடுப்பதாகவும், கரும்பு செய்த நிலத்துக்கு **நெல் இரட்டித்துக்** கொடுப்பதாகவும்,

கமுகு (பாக்கு) செய்த (பயிரிட்ட) நிலத்துக்குக் **கமுகால் பத்துப் பாக்கும்,**

**ஒரே ஒரு கட்டு வெற்றிலையும்**, எள், **பருத்திக்கு வேலி ஐந்து புதுக்காசும், ஆறு மரக்கா வா(சி) யெற்றிய** நிலத்துக்குக் கொடுப்பதாகவும், அப்படி பொருள் கொடுக்காதவரை ஒடுக்கியும் (தண்டனை கொடுத்தாவது) பறித்தும் பதிவு செய்து கொள்ளக் கடவதாக என்று இப்படி வசூல் செய்து சந்திரன் சூரியன் உள்ளவரை செல்வதாக வைத்துக் கொடுத்தோம்.

இக்கல்வெட்டு, நிலத்தைக் கோயிலுக்குத் தந்து அதனைக் குத்தகைக்குப் பயிரிட்டு அதில் கோவிலுக்குச் சேரவேண்டிய பொருளைத் தரவேண்டும். அப்படித் தராவிட்டால் தண்டனைகள் தந்து அவற்றைப் பெற்று கோயிலின் அர்த்த சாம பூசை தடையில்லாமல் நடக்கவேண்டும் என்று கூறுகிறார் கொடையாளர்.

ARE No.: 9, Location : On the east wall of the Mandapa in front of the Central Shrine

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன்

முடித்தலையுங்கொண்டருளிய சி குலொத்துங்க சொ -

ழதெவர்க்கு யாண்டு உயரு வது ஜயங்கொண்ட சொழ மண்டலத்துப்

புலியூர்க்கொட்டமான குலொத்துங்க சொழவள நா -

ட்டு மாங்காட்டுக் கொயம்பெட்டு உடையார் குறுங்காலாண்டார்க்கு இவ்வூர்

செரிப்பெரையன் மகன் கல்வி ஆண்டானான திருஞானசம்

பந்த வெளான் சந்திராதித்தவரை செல்வதாக வைத்த சந்திவிளக்கு ஒன்றுக்கு

இக்கொயிற் காவிஉடைய சிவப்பிராமணன் கௌத -

மன் பெருமாள்பட்டன் குழைஞ்சானான குலொத்துங்கசொழப்பட்டன் உள்ளிட்டொமும்

இக்கொத்திரத்து ஆகும்பிரான்பட் -

டன் சிவஜஞான தெவன் உள்ளிட்டொமும் கைக்கொண்ட பசு இரண்டும் நாகு கன்று

மூன்றும் ஆகலகு ஐஞ்சும் கைக்கொண்டு இச்சந்தி

விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை எரிப்பதாக கைக்டொம் பெருமாள்பட்டன்

குழைஞ்சானான குலொத்துங்க சொ -

ழபட்டன்உள்ளிட்டொமும் ஆகும்பிரான்பட்டன் சிவஜஞானதெவன் உள்ளிட்டொமும்

இது பன்மாஹெஸ்வர ரக்ஷை.

## கல்வெட்டின் விளக்கம்

இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 9

**இருக்குமிடம் :** மண்டபத்தின் முன்பகுதியில் கிழக்குச் சுவரில் அமைந்துள்ளது இக் கல்வெட்டு.

**கல்வெட்டு :** தமிழில் அமைந்துள்ளது.

**பேரரசன் :** ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையுங் கொண்டருளியவன் **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவன்**

**ஆட்சியாண்டு :** இருபத்தைந்தாவது ஆட்சியாண்டு (கி.பி.1203 ஆம் ஆண்டு)

## கல்வெட்டு தரும் செய்தி :

செயங்கொண்ட சோழமண்டலத்தில் புலியூர்க் கோட்டமான குலோத்துங்க சோழ வளநாட்டில் மாங்காட்டு நாட்டின் ஒரு ஊரான கோயம்பேட்டில் இருக்கின்ற குறுங்காலண்டார்க்கு இவ்வூரிலே இருக்கும் **செரிப்பரை மகனான கள்ளியாண்டான்** என்றழைக்கப்படும் **திருஞான சம்பந்த வேளாண்** என்பவர் ஒரு **நந்தா விளக்கினைச்** சூரியனும், சந்திரனும் உள்ளவரை ஏற்றிட, கோயிலுக்காக **2 பசுமாடுகளும் 3 இளங்கன்றுகளும் தானமாகத் தந்து அறச் செயல் நீடூழி விளங்க வேண்டுமென்று** காவி உடைய சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள் பட்டன், பிரான் பட்டன் சிவஞானதேவன் மற்றும் குலோத்துங்கச் சோழ பட்டன் ஆகியோர் முன்னிலையில் கொடையினைக் கொடுத்தார். இம் மூவரும், கொடையாகத் தந்தவர்க்கு உறுதி செய்து உடன்படிக்கை செய்தனர். இதனைப் போற்றிக் காக்க வேண்டும்.

ARE No.: 10, Location : On the north wall of the Mandapa in front of the Central Shrine

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்

தலையும்கொண்டருளிய சி குலொ -

த்துங்கசொழதெவற்கு யாண்டு இருபத் தொன்றாவது ஜயங்கொண்ட

சொழமண்டலத்துப் புலியூர்க் கொ -

ட்டமான குலொத்துங்கசொழவளநாட்டு மாங்காட்டு நாட்டுக்

கொயம்பெட்டு உடை -

யார் குறுங்காலாண்டாற்கு நடுவுனாட்டுத் திரு

வெண்ணைநல்லூர் உமை ஆண்டாள்

சந்திராதித்தவரை செல்வதாக வைத்த சந்திவிளக்கு

ஒன்றுக்கும் இக்கொயிற் காவி உடை -

டய சிவப்பிராமணன் கௌவுதமன் பெருமாள்பட்டன் குழைஞ்சானான

குலொத்துங்க சொழ பட்ட

உள்ளிட்டொழும் இக்கொத்திரத்து ஆகும் பிரான் பட்டன்சிவஜஞான

தெவன் உள்ளிட்டொழுங்கைக்கொ -

ண்ட பழங்காசு இரண்டையும் சந்திவிளக்கு எரிப்பதாகக்

கைக்கொண்டடொம்.

## கல்வெட்டின் விளக்கம்

### இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 16

**இருக்குமிடம்:** மண்டபத்தின் முன்பகுதியின் நடுவில் அமைந்துள்ள வடக்குச் சுவரில் இக் கல்வெட் டு அமைந்துள்ளது.

**கல்வெட்டு:** தமிழ்க் கல்வெட்டு

**பேரரசு:** ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையுங் கொண்டு அருளிய **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவன்**

**காலம்:** இருபத்தியொன்றாவது ஆட்சியாண்டு (கி.பி. 1199 ஆம் ஆண்டு)

**மண்டலம்:** ஜயங்கொண்ட சோழ மண்டலம்

**கோட்டம்:** புலியூர்க் கோட்டம்

**வளநாடு :** குலோத்துங்க சோழ வளநாடு

**நாடு :** மாங்காடு

**ஊர்:** கோயம்பேடு

### கொடையும், கொடையளித்தோரும் :

கோயில் கொண்ட குறுங்காலாண்டார்க்கு **நடுநாட்டில் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் இருக்கும் உமையாண்டாள்** என்னும் அம்மையார் சந்திரனும், சூரியனும் உள்ளவரை சந்தி விளக்கு ஏற்றி எரிப்பதற்காகப் **பழங்காசு இரண்டினைக்** ( 6 சோழர் கால நாணயங்கள்) கொடைப் பொருளாகக் கொடுத்துள்ள செய்தியினை அறிய முடிகிறது.

**முன்னிலையும், உடன்படிக்கையும்** : காவி உடைய சிவப் பிராமணன் கௌதமன் பெருமாள் பட்டன், குலோத்துங்க சோழ பட்டன் மற்றும் பிரான் பட்டன் சிவஞானதேவன் ஆகிய மூவரும் விளக்கேற்றுவதாக இசைவு தெரிவித்து, ஒப்புக் கொண்டு உடன்படிக்கை செய்தனர்.

ARE No.: 11, Location : On the north wall of the first Prakara (outside) right of entrance.

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும் பாண்டியன் முடித்தலையுங்

கொண்டருளிய சி குலொத்துங்க சொழ தெவற்கு

ண்டு இருபத்தெட்டாவது செயங்கொண்ட சொழ மண்டலத்துப் புலியூர்க் கொட்ட

மான குலொத்துங்கசொழ வளனா -

ட்டு மாங்காடு னாட்டுக் கொயம்பெட்டு ஆளுடையார் குறுங்காலாண்டார்

கொயிற் காவி உடைய சிவப்பிராமண -

ன் கௌவுதமன் பெருமாள் பட்டன்குழைஞ்சானான குலொத்துங்க சொழ

பட்டனுள்ளிட்டொழும் இக்கொத்திரத்து ஆகும் பி -

ரான்பட்டன் சிவஜஞானதெவனுள்ளிட்டொழும் இன்னாயனார்க்கு இவ்வூரிலிருக்கும்

வெள்ளாளன் உய்யவந்தான் வைத்த சந்திவி -

ளக்கு ஒன்றுக்குச் சந்திராதித்தவரை எரிப்பதாகக் கைக்கொண்ட பழங்காசு

மூன்றும் திருமங்கலத்திலிருக்கும் வெள்ளாளன்ஆற்றுழான்

ஆட்கொண்ட நாயகன் வைத்த சந்திவிளக்கு ஒன்றுக்குக் கைக்கொண்ட

பசுமூன்றும் இவ்வூரில் வெள்ளாளன் ஈரடி வைத்தா -

ன்குவித்தான் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்கு சந்திராதித்த வரை எரிப்பதாக

கைக்கொண்ட பசு மூன்றும் கௌவுதமன் பெ -

ருமாள் பட்டன் குழைஞ்சானான குலொத்துங்க சொழ பட்டனுள்ளிட்டொழும்

இக்கொத்திரத்து ஆகும்பிரான் பட்டன் சிவஜஞானதெ -

வனுள்ளிட்டொழும் இச்சந்தி விளக்கு மூன்றும் சந்திராதித்த ....ப்ப ... தாக

கைக்கொண்டொம் இவ்வ னைவொம்

இது பன்மாஹெஸ்வர ரக்ஷை

## கல்வெட்டின் விளக்கம்

இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 11

| | |
|---|---|
| **இருக்குமிடம்:** | முதல் பிரகாரத்தின் நுழைவாயிலின் வலது புறச் சுவரில் இக்கல்வெட்டு வெளிப்புறமாய் அமைந்துள்ளது. |
| **பேரரசு:** | ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் மதுரையும், பாண்டியன் முடித்தலையுங் கொண்டு அருளிய **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவன்** |
| **காலம்:** | இருபத்தியெட்டாவது ஆட்சியாண்டு (கி.பி. 1206 ஆம் ஆண்டு) |
| **கல்வெட்டு:** | தமிழ்க் கல்வெட்டு |
| **மண்டலம்:** | ஜயங்கொண்ட சோழ மண்டலம் |
| **கோட்டம்:** | புலியூர்க் கோட்டம், |
| **வளநாடு :** | குலோத்துங்க சோழ வளநாடு |
| **நாடு :** | மாங்காடு, **ஊர்:** கோயம்பேடு |

## கல்வெட்டு நல்கும் செய்தி :

**கொடையாளர் :**

(1) ஆளுடையார் குறுங்காலாண்டார்க்கு இவ்வூரில் இருக்கும் வெள்ளாளன் உய்யவந்தான் வைத்த சந்தி விளக்கு ஒன்று எரிப்பதற்குப் பழங்காசு மூன்றும்

(2) திருமங்கலத்திலிருக்கும் வெள்ளாளன் ஆற்றுழான் ஆட்கொண்ட நாயகன் வைத்த சந்தி விளக்கு ஒன்று ஏற்றுவதற்குப் பசு மூன்றும்,

(3) இவ்வூரில் வெள்ளாளன் ஈரடி வைத்தான் குவித்தான் வைத்த சந்தி விளக்கு ஒன்றுக்குச் சந்திரன் சூரியன் உள்ளவரை எரிப்பதற்காகக் கொடுக்கப் பசு மூன்றும் கொடையாகத் தரப்பட்டது.

**முன்னிலையும், உடன்படிக்கை செய்து தந்தவர்களும் :** இக்கோயில் காவி உடைய சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள் பட்டன், குலோத்துங்க சோழ பட்டன் மற்றும் பிரான் பட்டன் சிவஞானதேவன் ஆகியோர் மேற்கூறிய கொடைப்பொருளைப் பெற்றுச் சந்திரன் சூரியன் உள்ளவரை விளக்கேற்றுவதாக இசைவு தெரிவித்து ஒப்புக் கொண்டு உடன்படிக்கை செய்தனர். இவ்வனைத்தும் போற்றிக் காப்பதற்குரியது.

ARE No.: 12, Location : On the first Prakara (outside) Left of entrance.

ஸ்வஸ்தி ஸ்ரீ திரிபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீகுலொத்துங்கசொழ -

தெவற்கு யாண் -

டு துகூய(க) ஆவது இன்னாயனார்க்குத் திருமஞ்சனக்கிணறு

இட்டார் இவ்வூர்

க் கருப்புழான் வடுகநாதன் அகமுடையாள் தெவாண்டாள்

# கல்வெட்டின் விளக்கம்

இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 12

**இருக்குமிடம் :** முதல் பிரகாரத்தின் நுழைவாயிலின் இடது புற வடக்குச் சுவரில் இக் கல்வெட்டு வெளிப்புறமாய் அமைந்துள்ளது.

**கல்வெட்டு தரும் செய்தி :**

ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் எனும் ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவனின் 31வது ஆட்சி ஆண்டு ஆட்சிக்காலம் (கி.பி.1209)

**கல்வெட்டு :** தமிழ்க் கல்வெட்டு.

## கொடையாளர் மற்றும் கொடை :

கோயம்பேட்டில் உறையும் குறுங்காலாண்டார்க்கு **இவ்வூர்க் கருப்புழான் அரிகுல நாயகன்** வடுகநாதன் அ்கமுடையாள் **தேவாண்டாள்** என்பவர் **திருமஞ்சனக் கிணறு** எடுத்தவர்.

| |
|---|
| ARE No.: 13, Location : On the north wall of the first Prakara (outside) Left of Entrance. |

பிரமாதிச வருஷம் காத்திகை மாதம் யஉ தீ ஸ்ரீமன் மகாமன்

கண்ட கட்டாரிசாளுவ திப்பைய தெவமகா இராசாவின் கா -

ட்டில் ஊரவரும் நாயினார் குறுங்கால் ஆண்டாற்கு -

யிந்தப்பட்டி தடி இரண்டு குழிகுளம் துக்கைபட்டி தடி

நிலம் சிறுகாலை சந்திக்கு அமுதுபடிக்கு சந்திரா .............

....................து இது .................................

## கல்வெட்டின் விளக்கம்

### இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 13

**இருக்குமிடம் :** முதல் பிரகாரத்தின் நுழைவாயிலின் இடதுபுற வடக்குச் சுவரில் இக் கல்வெட்டு வெளிப்புறமாய் அமைந்துள்ளது.

### கல்வெட்டு தரும் செய்தி :

திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்கச் சோழ தேவனின் ஆட்சிக்காலம்.

**காலம் :**

பிரமாதிச ஆண்டு கார்த்திகை மாதம் 12 ஆம் நாள் (கி.பி.நவம்பர் 10 ஆண்டு 1459)

**கல்வெட்டு :**

தமிழ்க் கல்வெட்டு. கல்வெட்டின் இறுதியில் கூறப்படும் செய்திகள் நமக்குக் கிடைக்கவில்லை.

**செய்தி :**

ஸ்ரீ மகாமண் கண்ட கட்டாரிசாளுவ திப்பைய தேவமகா இராசானின் காட்டில் விளையக்கூடிய விளைச்சலை நாயனாராக விளங்கும் குறுங்காலாண்டானுக்குச் சிறுகாலைப் பொழுதில் நடக்கும் பூசைக்கு அமுது படைப்பதற்குத் தரப்பட்ட கொடைப் பொருளாகும்.

**இடம் :** இந்தப் பட்டி தடி இரண்டு குழி குளம் துக்லகப்பட்டி தடி நிலம்.

இந்தச் செயல் சந்திராதித்தவரை நடைபெற வேண்டும் என்று உடன்படிக்கை செய்யப்பட்டது.

ARE No.: 14, Location : On the north wall of the first Prakara (outside) left of entrance.

ஸ்வஸ்தி ஸ்ரீ ................ ஸ்ரீபொக்கராயர்க்கு
ச் செல்லாவின்ற பாத்திவ வருஷம் ஆவணி மீ
யஉ தியதி புளையு -
ம் திங்கட் கிழமையும் பெற்ற அவிட்டத்தமுள்
ஜயங்கொண்ட சொழ -

1933 - 34 ARE - Annual Report on Epigraphy

நன்றி :

1) South Indian Epigraphy For 1933-34

2) திரு.சு.இராசவேல், கல்வெட்டாய்வாளர்.
இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத்துறை,
சென்னை.

3) திரு.M.சேரன், தொல்லியல் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

## கல்வெட்டின் விளக்கம்

### இந்தியக் கல்வெட்டியல் அறிக்கை எண்: 14

**இருக்குமிடம் :** முதல் பிரகாரத்தின் நுழைவாயிலின் இடதுபுற வடக்குச் சுவரில் இக்கல்வெட்டு வெளிப்புறமாய் அமைந்துள்ளது.

**கல்வெட்டுச் செய்தி :** தமிழ்க் கல்வெட்டில் அமைந்த இக்கல்வெட்டு விஜயநகரப் பேரரசு காலத்தில் தந்த அறச் செயலைக் கூறுவது. வீரபுக்கராயர் விஜயநகரப் பேரரசர்களில் ஒருவர். இக்கல்வெட்டின் காலம் கி.பி.1405 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 10 நாள் (தமிழில் பார்த்திவ ஆண்டு ஆவணி மாதம் 12 ஆம் நாள் பௌர்ணமி திதி, திங்கட்கிழமை, அவிட்ட நட்சத்திரம்)

இக்கல்வெட்டு, முழுமையாக கிடைக்கப் பெறவில்லை. இதனால் செய்தியை ஓரளவு தான் அறிந்து கொள்ள முடிகிறது. இக்கல்வெட்டின் ஒருபகுதி நந்திக்கு எதிரில் உள்ளதாகவும் அறிய முடிகிறது.

புலியூர்க் கோட்டத்தில் **சாத்தமங்கலம்** என்னும் பகுதியில் வாழ்கின்ற **சூரியக்கோன்** என்பவரின் மகனான **காரிக்கோன்** என்பவர் **இரண்டு வெள்ளாட்டினைத் தானமாகத்** தந்து இதிலிருந்து பெறுபவற்றைத் **திருவிளக்கேற்ற** பயன்படுத்தவேண்டும் என்று கல்வெட்டுச் செய்தி தருகிறது.

# கல்வெட்டுகளில் காணலாகும் பொதுவான செய்திகள்

தொன்மையான செய்திகளை அறிந்து கொள்ள உதவும் வரலாற்று ஆதாரங்களுள் ஒன்றாகக் கருதப்படுவது கல்வெட்டாகும். அவ்வகையில் கோயம்பேட்டில் வீற்றிருக்கின்ற குறுங்காலீஸ்வரப் பெருமானுக்குக் கொடைப் பொருளாகக் கொடுத்த செய்திகளே கல்வெட்டுகளில் அமைந்துள்ளன. கருவறை மண்டபத்தைச் சுற்றியும், முதல் பிரகார மண்டபச் சுவரிலும் **14 கல்வெட்டுகள்** உள்ளன. இவை தரும் செய்திகளை வகைப்படுத்தி ஈண்டு காண்போம்.

1) **கல்வெட்டு** : இங்கு அமைந்துள்ள 14 கல்வெட்டுகள் யாவும் தமிழ்மொழியில் எழுதப்பட்டுள்ளன. இரண்டு கல்வெட்டுகள் முழுமை பெறாத நிலையில் நமக்குக் கிடைத்துள்ளன. ஏனைய 12 கல்வெட்டுகள் முழுமையாகக் கிடைத்துள்ளன.

2) **இறைவன் திருப்பெயர்** : நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் இறைவனின் திருப்பெயர் **குறுங்காலாண்டார்** என்றே குறிக்கப் பெற்றுள்ளது.

3) **ஊர்ப்பெயர்** : இத்தலத்திற்குக் கோசை நகர், கோயட்டிபுரம், பிராயச்சித்த புரம் எனப் பலபெயர்கள் வழங்கினாலும் **கல்வெட்டுகளில் கோயம்பேடு என்ற ஊர்ப்பெயரே** வழக்கத்தில் வழங்கி வந்தமை அறிய முடிகிறது.

4) **பேரரசு** : கல்வெட்டுகளில் காணலாகும் பேரரசர்கள் பின்வருமாறு: ஸ்ரீ திரிபுவன சக்கரவர்த்திகள் **ஸ்ரீ குலோத்துங்கச் சோழ தேவன்**, திரிபுவன சக்கரவர்த்திகள் **திரிபுவன வீர தேவர்** (ஐந்தாம் கல்வெட்டு), திரிபுவன சக்கரவர்த்திகள் **ஸ்ரீ ரங்கநாதர்** என அழைக்கப்பெறும் **யாதவராயர்** (இரண்டாம் கல்வெட்டு) விஜயநகரப் பேரரசர்களில்

ஒருவரான **வீரபுக்கராயர்** (14 ஆம் கல்வெட்டு)

5) **ஊர்ப்பிரிவுகள்** : பெரும்பாலான கல்வெட்டுகளில் **மண்டலம், கோட்டம், வளநாடு, நாடு, ஊர்** - முதலான நாடு, ஊர்ப் பிரிவுகள் அக்காலத்தில் இருந்துள்ள நிலையை அறிந்து கொள்ள முடிகிறது. அக்காலத்தில் **தொண்டை நாட்டை** இவ்வாறு **பிரித்துப்** பகுத்துள்ளமை தெரியவருகிறது.

| | | |
|---|---|---|
| **மண்டலம்** | : | **ஜயங்கொண்ட சோழமண்டலம்** |
| **கோட்டம்** | : | **புலியூர்க்கோட்டம்** |
| **வளநாடு** | : | **குலோத்துங்க சோழ வளநாடு** |
| **நாடு** | : | **மாங்காடு** |
| **ஊர்** | : | **கோயம்பேடு** |

**6) முன்னிலையும் உடன்படிக்கை செய்து கொடுத்தவர்களும்**

ஒரு பொருளைத் தானமாகக் கொடுத்தாலும் அப்பொருளைக் கொடுப்பவர் பெயரும், அப்பொருளைப் பெறுபவர்கள் பெயரும், யார் முன்னிலையில் பெற்றது பற்றியும், யார் உடன்படிக்கை செய்தவர்கள் பற்றியும் கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளதால் அக்காலச் செயல்பாடுகள் இன்று நமக்கும் ஓர் வழிகாட்டியாக அமைகிறது.

கோயிலில் காவி உடைய **சிவப்பிராமணன் கௌதமன் பெருமாள் பட்டன், குலோத்துங்கச் சோழ பட்டன், பிரான் பட்டன் சிவஞானதேவன்** ஆகிய மூவரும் முன்னிலையாக நின்று, கொடைப்பொருளைப் பெற்றுக் கொண்டு, அச்செயலைச் சூரியன், சந்திரன் உள்ளவரை செய்வதாக இசைவு தெரிவித்து உடன்படிக்கை செய்து கொடுத்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

7) **மங்கல வாசகம்** : ஒரு செயலைச் செய்கின்ற போது மங்கலமான சொல்லை எழுதியோ, சொல்லியோ தொடங்குவது மரபு. அவ்வழியில் கல்வெட்டுகளை எழுதத் தொடங்குகின்ற போது ஸ்வஸ்தி ஸ்ரீ என்னும் மங்கல வாசகத்தைக் கொண்டு தொடங்கி உள்ளனர்.

8) **ஓம்படைக்கிளவி** : கொடைப் பொருளாகத் தருகின்றவற்றைப் போற்றிப் பாதுகாக்கவேண்டும் என்ற வாசகம் கல்வெட்டின் இறுதியில் எழுதப்பட்டிருக்கும். இவற்றையே வரலாற்றாய்வாளர்கள்

ஓம்படைக்கிளவி என்பார்கள். இங்கு நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் இது பன்மாஹேஸ்வர ரக்ஷை என்ற வாசகம் காணப்படுகிறது.

**9) கொடையும் கொடைப்பொருளும்** : குறுங்காலாண்டார்க்கு இறைப்பணி தடையின்றி தொடர்ந்து செயல்படவேண்டும் என்று பூசைக்குரிய பொருள்களைக் கொடையாகக் கொடுப்பது மரபு. அவ்வகையில் **நந்தா விளக்கு எரிப்பதற்காகப் பசுக்களும், கன்றுகளும் கொடையாகத்** தந்தும், மேலும் **சோழர்கால நாணயங்களான பழங்காசுகள்** பல தந்தும் **தர்மத்தைத்** தொடர்ந்து செய்ய கொடுத்துள்ளார்கள். மேலும், இறைவனுக்குத் **திருமஞ்சனம்** செய்ய, ஒருவர் **திருமஞ்சனக் கிணறு** அமைத்துத் தந்துள்ளார். அடுத்து இறைவனுக்குப் **பூசைக்குரிய மலர்கள்** வேண்டுமென்பதற்காகத் தம் நிலத்தை **நந்தவனப்பட்டிக்காக ஒதுக்கித்** தந்துள்ளமையும் அறிய முடிகிறது. **சுருங்கக்கூறினால் கொடைப்பொருளாகப் பழங்காசுகள், நிலம், பசு, கன்று முதலானவைகளைத் தந்துள்ளனர்.**

**10) கொடையாளர்கள்** : கோவிலுக்கு அறப்பணிகள் எல்லோருமே செய்வதற்குரியர். இருப்பினும் இங்கு நமக்குக் கிடைத்துள்ள கல்வெட்டுகளில் **ஊரில்உள்ளவர்கள், திருவெண்ணெய் நல்லூரில் உள்ளவர்கள், வேளாளர்கள்** முதலானவர்கள் அறக்கொடையாளர்களாக விளங்கியுள்ளனர். மேலும் **ஒரு குடும்பத்திலே குடும்பத்தலைவர், தலைவி, மகள் (கணவன், மனைவி, மகள்) ஆகியோர் செய்த தொண்டினை அறிய முடிகிறது.** இது **அந்தக் காலச் சமுதாய அறச்செயல்களை** அறிவதோடு மட்டுமல்லாமல், **இக்கால சந்ததியினர்க்கும்** ஒரு வழிகாட்டியாக அமைகிறது.

**11) ஆட்சியாண்டு** : திரிபுவனச் சக்கரவர்த்திகள் குலோத்துங்க சோழ தேவன் ஆட்சி செய்த காலம் ஆம் ஆண்டு முதல் 37 ஆவது ஆட்சியாண்டுக் காலம் வரை ஆண்ட பேரரசுக்காலத்தில் செய்த அறச் செயல்கள் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது.

கிறித்துவ ஆண்டின் கணக்குப்படி கி.பி.1199 முதல் கி.பி.1459 ஆம் ஆண்டு வரையிலாக செய்த அறத்தொண்டுகள் வரலாற்றாராய்ச்சிக் குறிப்புகளால் அறியலாம்.



தட்சிணாமூர்த்தி



நூதன பஞ்சவர்ண நவக்கிரகம்

# நவக்கிரக வழிபாடு

ஒன்பது கோள்களும் மனித வாழ்க்கையில் முக்கிய அங்கம் வகிக்கின்றன. நாம் பிறந்தது முதல் இறப்பு வரை, வானில் நிலவுகின்ற கோள்களின் அடிப்படையில் தான் ஜாதகம் குறிப்பார்கள் சோதிடர்கள். வாழ்க்கை நிலையை நிர்ணயிக்கும் கோள்கள் நன்மை, தீமை இரண்டுமே தருவன. இவ்விரண்டினுள் தீமையின் பாதிப்பு அதிகம் ஏற்படக்கூடாது என்பதற்காகவே நவக்கிரக வழிபாடு செய்கின்றோம். கோள்களின் ஆற்றலை உணர்ந்த சமயச் சான்றோர்கள் சாந்தி ஏற்படுத்துவதற்காகப் பல பாடல்களைப் பாடியுள்ளார்கள். அவர்கள் சென்ற பாதச் சுவடுகளைப் பின்பற்றி நாமும் நலமடைவோம்.

## வேயுறுதோளிபங்கன் :

நாளும் இன்னிசையால் தமிழ்ப் பரப்பும் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரிடம் நலிந்தவர்க்கில்லை நாளும் கோளும் என்று கூறிய போது பாடிய பாடல்களே கோளறு பதிகம் என்னும் நூலாகும். இந் நூல் நவக்கிரகங்களைப் போற்றிப் பாடுவதாகும். இப்பதிகப் பாடலின் முதல் பாடல் **வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்** எனத் தொடங்குவது. இம் முதற் பாடலிலேயே ஒன்பது கிரகங்களையும் சேர்த்துப் பாடியுள்ளார். பதிகம் முழுதும் பாடினாலும், பாட முடியாதவர்கள் முதல் பாடலைப் பாடினாலும் பதிகம் முழுதும் ஓதி உணர்ந்த பலனைத் தரும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.

## மேலும் ஓர் அணிகலன் :

வரலாற்றுச் சிறப்புமிக்க, இக்கோயிலுக்கு மேலும் பெருமை சேர்க்கின்ற வகையில் ஓர் அணிகலனாகத் திகழ்வது நவக்கிரச சந்நிதியாகும்.

இவ்விடத்தில் உள்ள நவக்கிரகங்களை நிகழ்ந்த குரோதி தை மீ 26ஆம் தேதி (8.2.1965) ஆம் ஆண்டு **திருவலம் மௌன குருசாமி** அவர்கள் நூதன பஞ்சவர்ண நவக்கிரகப் பிரதிஷ்டை கும்பாபிஷேகம் செய்து அருளினார்கள்.

சிறப்பு மிகுந்த ஆலயங்களில் கூட காணமுடியாத ஓர் அற்புத சிறப்பம்சம் கொண்டது குறுங்காலீஸ்வரர் திருக்கோயில். இங்குள்ள நவக்கிரக மூர்த்தங்கள், அவரவர்க்குரிய வாகனங்களோடு கீழே பெயர் பொறித்திருப்பது மேலும் ஒரு சிறப்பாகும். ஒன்பது கிரகங்களின் நடுநாயகமாக விளங்குபவரான சூரிய பகவான் தம் மனைவியர் சாயா, உஷா ஆகிய இருவருடன் இருப்பது சிறப்பாம். வேதங்களின் 7 சந்தங்களாகிய7 குதிரைகளைப் பூட்டி ஒற்றைச் சக்கரத் தேரினைச் செலுத்தும் சாரதியாக அங்காரகன் விளங்குகின்றான் என்பது மேலும் ஓர் சிறப்பம்சமாகும்.

| கிரகங்களின் பெயர் | வாகனம் | நிறம் | நவமணிகள் |
|---|---|---|---|
| சூரியன் | குதிரை / தேர் | இளஞ்சிவப்பு | மாணிக்கம் |
| சந்திரன் | கிளி (அ) தாமரை | வெண்மை | முத்து |
| அங்காரகன் | அன்னம் | இரத்தச்சிவப்பு | பவழம் |
| புதன் | குதிரை | பச்சை | மரகதம் |
| வியாழன் | யானை | பொன் | புஷ்பராகம் |
| சுக்கிரன் | கருடன் | வெண்மை | வைரம் |
| சனி | காகம் | கருமை | நீலமணி |
| இராகு | ஆடு | கருநிறம் | கோமேதகம் |
| கேது | சிம்மம் | கறுப்பு | வைடூரியம் |

## நூதன பஞ்சவர்ண நவக்கிரகம் :

குறிப்பு :

| | | |
|---|---|---|
| சுவாமிகள் | - | பச்சை நிறக் கற்கள் |
| ரதம் | - | கருப்பு நிறக் கற்கள் |
| தாமரைப்பூ | - | சிவப்பு நிறக் கற்கள் |
| கீழ்பீடம் | - | வெள்ளை நிறக் கற்கள் |
| பூமி | - | மஞ்சள் நிறக் கற்கள் |

நவக்கிரகங்களை வழிபட்டால் நமக்கு வரக் கூடிய துன்பத்தின் வேகம் குறையும். நவக்கிரகத்தை நாள்தோறும் போற்றி வழிபடுவதற்கான ஓர் எளிய பாடல். இப்பதிகத்தைத் திருஞானசம்பந்தர் கோளறுபதிகம் என்னும் தலைப்பில் பாடியருளியுள்ளார்.

*வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன்*
*மிகநல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமேல ணிந்துஎன்*
*உளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழம் வெள்ளி*
*சனிபாம்பு இரண்டும் உடனே*
*ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல*
*அடியார் அவர்க்கு மிகவே.*

## தினப்பூசையும் திருவிழாவும்

இக்கோயிலில் தினந்தோறும் பூசை முறைகள் சிவாகமப்படி நடத்தப் பெறுகின்றன. நாள்தோறும் நான்கு கால வழிபாடுகள் நடைபெறுகின்றன. நான்கு கால வழிபாடுகளைத் தரிசித்தால் அடையும் பலன்களைச் **சிவதரிசன மகத்துவம்** என்னும் நூல் தெளிவாகக் கூறுகிறது. **காலசந்தி வழிபாட்டில்** கலந்து கொண்டு தரிசனம் செய்தால் **முன் செய்த வினைகள் நீங்கும். உச்சி கால பூசையினைக்** கண்டு வழிபாடு செய்ய, இப்பிறப்பில் **அனுபவிக்கும் கொடிய துன்பங்கள் நீங்கி,** இன்பம் அடையலாம். **சாயரட்சை** என்னும் மாலைக்கால வழிபாட்டினைத் தரிசித்தால் எழுகின்ற **ஏழு பிறவிகளில் படும் துன்பங்கள் நீங்கி** இன்பம் பெறலாம். **அர்த்த சாம பூசையினைக்** கண்ணாரக் கண்டு வணங்க **வருகின்ற தீவினைகள் அகலும்.** எளிதில் வீடுபேறு எனும் முக்தி கிடைக்க வழிகாட்டும். ஆதலால் பூசை நேரங்களில் சென்று வழிபட மிகுந்த புண்ணியத்தைப் பெறலாம்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| காலசந்தி | - | காலை | 7.30 | முதல் | 8.30 | மணி வரை |
| உச்சிக்காலம் | - | மதியம் | 11.30 | முதல் | 12.00 | மணி வரை |
| சாயரட்சை | - | மாலை | 5.00 | முதல் | 6.00 | மணி வரை |
| அர்த்தசாமம் | - | இரவு | 8.30 | முதல் | 9.00 | மணி வரை |

அன்பர்களின் தரிசனத்திற்காக ஆலயம், காலை 7.00 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரையிலும், மாலையில் 4.30 மணி முதல் இரவு 9.00 மணி வரையிலும் திறந்திருக்கும். சிவாலய பூசைகளைத் தற்போது செய்து வருபவர் ஆதிசைவ அர்ச்சகர் வழி வந்த திரு.சதாசிவ குருக்கள் அவர்கள்.

விழா நடந்த நாளும் நிகழ்ச்சியும் பின்வருமாறு :

| திருநாள் | தமிழ்த் தேதி | ஆங்கிலத் தேதி | காலம் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|---|---|
| | பிரமாதி வருடம் | 8.4.2000 | மாலை | விநாயகர் உற்சவம் |
| | பங்குனி 26 ஆம் நாள் | சனி | | மூஷிக வாகனம் புறப்பாடு |
| 1. | 27 ஆம் நாள் | 9.4.2000 | காலை | 7.30 முதல் 9.00 மணிக்குள் கொடியேற்றம் |
| | | ஞாயிறு | இரவு | ஸ்தல விருட்சம் |
| 2. | 28 ,, | 10.4.2000 | காலை | சூரிய பிரபை |
| | | திங்கள் | இரவு | சந்திரபிரபை |
| 3. | 29 ,, | 11.4.2000 | காலை | அதிகார நந்தி |
| | | செவ்வாய் | இரவு | பூத வாகனம் |
| 4. | 30 ,, | 12.4.2000 | காலை | சந்திரசேகரர் பவனி |
| | | புதன் | இரவு | நாக வாகனம் |
| 5. | விக்கிரம வருடம் | 13.4.2000 | காலை | தொட்டி உற்சவம் |
| | சித்திரை 1ஆம்நாள் | வியாழன் | இரவு | இடப வாகனம் |
| 6. | 2 ஆம் நாள் | 14.4.2000 | காலை | மங்களகிரி விமானம் |
| | | வெள்ளி | இரவு | யானை வாகனம் |
| 7. | 3 ,, | 15.4.2000 | காலை | இரதோற்சவம் |
| | | சனி | இரவு | இரதத்திலிருந்து சுவாமி திருக்கோயிலுக்கு எழுந்தருளல் |
| 8. | 4 ,, | 16.4.2000 | காலை | சந்திரசேகரர் புறப்பாடு |
| | | ஞாயிறு | இரவு | குதிரை வாகனம் |
| 9. | 5 ,, | 17.4.2000 | காலை | அஸ்துமான கிரி |
| | | திங்கள் | இரவு | பிச்சாடனர் |
| 10. | 6 ,, | 18.4.2000 | காலை | தீர்த்தவாரி உற்சவம் |
| | | செவ்வாய் | இரவு | திருக்கல்யாணம் |
| | | | | இராவணேஸ்வர வாகனம் |
| 11. | 7,, | 19.4.2000 | காலை | கொடியிறக்கம் |
| | | புதன் | இரவு | சாந்தி அபிஷேகம் |

*காலைதொழ அற்றைவினைக் கட்டகலும் கட்டுச்சி*
*வேலைதொழ இப்பிறப்பில் வெந்துயர்போம் - மாலையினில்*
*வந்து சிவன்தாளை வந்தித்தால் ஏழ்பிறப்பின்*
*வெந்துயர மெல்லாம் விடும்.*

- சிவதரிசன மகத்துவம்.

இத் திருக்கோயிலில் அமாவாசை, பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை, மகவிழா, திருவாதிரைத் திருநாள், திங்கள், வெள்ளி முதலான நாள்களில் சிறப்பு வழிபாடு நடைபெறும்.

பிரம்மோற்சவப்பெருவிழா மிகச் சிறப்பாக எல்லா ஆலயங்களில் நடப்பது போல் இங்கும் நடைபெறுகிறது. பிரம்மோற்சவப் பெருவிழா இரண்டுவிதமாக நடக்கும். மலைப் பகுதியில் இருக்கக்கூடிய கோயில்கள் யாவும் நட்சத்திரத்தின் அடிப்படையில் (பௌர்ணமி, அமாவாசை) பிரம்மோற்சவ விழா நடைபெறும். கடல், ஆறு முதலான பகுதிகளில் திதி பிரகாரம் பத்து நாள் பிரம்மோற்சவ விழா நடக்கும்.

நமது **குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலில் திதி பிரகாரம் நடக்கும்.** சித்திரை மாத வளர்பிறையில் வரும் சஷ்டி திதியில் கொடியேற்று விழா தொடங்கும். அன்று முதல் தொடர்ந்து பத்து நாளும் பிரம்மோற்சவப் பெருவிழா வெகு சிறப்பாக நடைபெறும். **சித்திராப் பௌர்ணமி**யன்று தீர்த்தவாரி திருவிழாவுடன் பிரம்மோற்சவப் **பெருவிழா நிறைவு** பெறும். பத்து நாளிலும் இறைவன் அலங்காரத்துடன் உற்சவமூர்த்தியில் எழுந்தருளி, வாகனங்களில் அமர்ந்து திருவீதியுலாக்காட்சியுடன் மக்களுக்கு அருள்புரிந்து, புரந்து வருவான்.

இத்திருத்தலத்தில் **பலநூறு ஆண்டுகளுக்குப்** பிறகு திருப்பணி செய்து மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற பின் நிகழும் பிரமாதி வருடம் பங்குனி மாதம் 27 ஆம் நாள் (9.4.2000) ஞாயிற்றுக்கிழமை முதல் விக்ரம வருடம் சித்திரை மாதம் 7 ஆம் நாள் (18.4.2000) செவ்வாய்க்கிழமை வரையிலாக பிரம்மோற்சவப் பெருவிழா **முதன்முதலில்** நடைபெற்றது.

பிரம்மோற்சவப் பெருவிழாவில் அலங்காரம் செய்த உற்சவ மூர்த்தியைத் தோளில் சுமந்து தூக்குவதற்கு நான்கு ஊர் மக்கள் வந்து

தூக்கியதாக, முன்னோர்கள் கூறுகின்ற செவி வழிச் செய்தியால் அறிய முடிகிறது. திருவீதியுலா வரும் இறைவன் அரும்பாக்கம் வரை சென்று அன்பர்களுக்கு அருள் தந்து வந்ததாக அறிய முடிகிறது.

## பஞ்ச மூர்த்திகள் புறப்பாடு

| | | | |
|---|---|---|---|
| பிள்ளையார் | - | மூஞ்சுறு வாகனத்திலும் | |
| முருகர் | - | மயில் | ,, |
| சிவபெருமான் | - | ரிஷப | ,, |
| அம்மன் | - | ரிஷபி | ,, |
| சண்டிகேஸ்வரர் | - | ரிஷப | ,, |

எழுந்தருளி பவனி வந்துள்ளார். மேலும், பாடி, சைதாப்பேட்டை, கோயம்பேடு ஆகிய மூன்று தலங்களிலும் ஒரே நாளில் ரிஷப வாகனத்தில் எழுந்தருளி, திருவீதியுலாவுக்காகப் புறப்பாடு நடந்ததாக அறிய முடிகிறது. இதற்குச் சான்று ஆதாரம் ஆற்காடு சீத்தாராம அய்யர் பஞ்சாங்கத்திலும், நம்பெருமாள் அய்யங்கார் பஞ்சாங்கத்திலும் பஞ்சமூர்த்திகள் விழா நிகழ்ச்சிகள் பற்றிய குறிப்புகள் குறிப்பிடப்பட்டிருக்கும்.

கோயம்பேடு குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலிலிருந்து காஞ்சிபுரம், மதுரை, கந்தகோட்டம், மாங்காடு, பாடி எனும் திருவலிதாயம், திருமுல்லைவாயில் ஆகிய கோயில்களில் நடைபெறும் விழாவிற்கு, இங்கிருந்து தானியங்கள், நிதி மற்றும் மானியங்கள் அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது. இக்குறிப்புப் பற்றிய செய்திகள் பிற ஆலய கல்வெட்டுகளில் உள்ளதாகவும் சில செவி வழிச் செய்தியாக அறிந்தவை என்றும் கோயில் அர்ச்சகர் திரு.சதாசிவ குருக்கள் அவர்கள் மூலம் அறியப்பட்டது.



கோயம்பேடென்னும் குசலவபுரம்

# குசலவபுரீசுவரர் தோத்திர பஞ்சகம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரியவிருத்தம்

திசைபுகழுந் தசரதனார் செல்வனென
வவதரித்த சீரா மன்றன்,
னிசைபுகழு மீருருவாய் மைந்தரென
வந்தனவென் றிசைக்கத் தோன்றிக்,
குசலவர்க ளெனும்பெயர்கொண் டரியபழி
செய்தினைந்து குருவாற் றேறி,
வசையொழியச் சிவலிங்க மியற்றிவழி
படவருளும் வள்ளால் போற்றி. (1)

செம்முளரிக் கண்ணனடி செம்முளரிக்
கண்ணன்முடி தேடி வாடக்,
கொம்மைமுலைத் தருமசம் வர்த்தனியென்
னம்மையொடு குலவி வான்றோய்,
பொம்மன்மணி மாடமலி குசலவமா
புரத்தமர்ந்த புனிதா போற்றி,
செம்முளரிக் கண்ணாவென்னண்ணாவுன்
னன்பரடி சேர்ப்பாய் போற்றி. (2)

கறைமருவு கந்தரவெண் டலைமாலை
யாயரவ கங்க ணத்தாய்,
நிறைமருவு விடையேறி கரியுரிபோர்த்
துழுவையத ணிலைக்கச் சேர்த்தாய்,
மறைமருவு விதிதலையொன் றோடாக
வேற்றுண்டாய் மழுமா னேந்தீ,
பொறைமருவு மறிஞர்செறி குசலவமா
புரத்தமர்ந்த புனிதா போற்றி. (3)

இரவிமதி யரிபிரம ரிந்திரர்வா
னவரியம ரிருடி யோகர்,
விரவுநிதிக் கிழவர்முனி வரர்கருடர்
காந்தருவர் மேலா மன்பர்,
சுரர்பரவு மருத்துவர்வித் யாதரருஞ்
சித்தர்களுஞ் சூழ்ந்து நாளும்,
பரவுகுச லவபுரத்தீ சனைவணங்கென்
னன்னெஞ்சே பவந்தீர் வாயே. (4)

கரியானைக் கண்டவனைக் கருதரிய
பெருமானைக் கமலக் கையி,
லெரியானை வேட்புரமு முப்புரமு
மெரித்தவனை யிலங்கு கைலைக்,
கிரியானை யரவணிசங் கக்குழையு
மணிந்தவனைக் கிரிவல் லானைப்,
பெரியானைக் குசலவமா புரத்தமர்ந்த
பெருந்தகையைப் பேணி வாழ்வாம். (5)



# தருமசம்வர்த்தனியம்மை தோத்திர பஞ்சகம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நீரேறுஞ் செஞ்சடையெம் பெருமான்ற
னிடம்பிரியா நிமலி யன்பர்,
நாரேறு மனமடைந்து வாழ்வதெனக்
குசலவர்க ணக ரினும்ப,
ரூரேறுஞ் சினகரத்து வாழ்வமர்ந்த
பெருமாட்டி யுரைக் கடங்காச்,
சீரேறுந் தருமசம் வர்த்தனியை
யெந்நாளுஞ் சேர்ந்து வாழ்வாம். (1)

கொன்றையணி சடாதரர்க்கு வலமமர்ந்த
நாயகியைக் குவல யத்து,
ளென்றுமெவர்க் குந்தாயாய்க் குமரியெனப்
பேர்பெற்ற வெழிலி னாளைக்,
கன்றுபவம் வீய்த்திடுவான் போற்றிசெயுங்
குசலவர்க்குக் காக்ஷி யான,
துன்றிடுசீர் தருமசம் வர்த்தனியை
யெந்நாளுந் துதித்து வாழ்வாம். (2)

ஆர்ந்தவன்ப ரியற்பகையார் மனைவியைமுன்
விரும்பினது மதுமட் டேயோ,
கூர்ந்தவெழிற் பூவணத்துப் பூவையுட
னிருந்தவளாற் குறியைக் கொண்டுந்,
தேர்ந்தவர குணவன்பன் மனைவியையுட்
கொண்டதுமுன் றெரிந்து மெம்மாற்,
சார்ந்துவளர் தருமசம் வர்த்தனியைத்
தணிவிலன்பிற் சார்ந்து வாழ்வாம். (3)

கொச்சைவரு மிளம்பிள்ளைக் கருண்ஞானப்
    பாலளித்த கோதை வாய்ந்த,
பச்சையிளம் பிள்ளையுடன் குதலைபயி
    லிளம்பாவை படிவர் தங்க,
ளிச்சைவழி யெழுந்தருளுங் குசலவர்கள்
    புரமமர்ந்த வெந்தா யன்பர்,
பிச்சையழித் தறம்வளர்க்குந்
    தருமசம் வர்த்தனியைப் பேணி வாழ்வாம். (4)

தேவர்கடஞ் செருக்கலைக்க வருமியக்க
    னியலுரைத்த தேவி யக்கம்,
பூவில்வரு மங்கையர்க ளாக்கொளுமம்
    பிகையம்மை புராரி யையை,
தாவில்சீர் குசலவர்கள் புரமமர்ந்த
    சங்கரி சாம்பவி பவானி,
யாவையுமாந் தருமசம் வர்த்தனியை
    யுளமமர்த்தி யன்பு செய்வாம். (5)

## அருள்மிகு அறம்வளர்த்தநாயகி (தர்மசம்வர்த்தனி) உடனுறை குசலவபுரீஸ்வரர் எனும் குறுங்காலீஸ்வரர் திருக்கோயில்
## கோயம்பேடு - சென்னை - 107.

### அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் எனும் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா அழைப்பிதழ்

நாள் : 11-02-2000 வெள்ளிக்கிழமை

காலை : 7.30 மணிக்கு மேல் 9.00 மணிக்குள்.

அன்புடையீர்,

சென்னை மாநகரில் மிக்க தொன்மை வாய்ந்ததும், புராண வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் ஸ்ரீ இராமபிரானின் புதல்வர்களான இலவ, குசர்களால் போற்றி வழிபட்டு வந்த பெருமை உடையதுமான, கோயம்பேடு எனும் இத்திருத்தலம் குசலவபுரீஸ்வரர் எனும் குறுங்காலீஸ்வரர் எனும் திவ்விய நாமங்களோடு சுயம்புருவாய் எழுந்தருளி அருள்பாலித்து வரும் சிறப்பினையுடையது. இவ்வண்ணம் சிறப்பினையுடைய இத்திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் யாவும் பூர்த்தியாகி,

நிகழும் மங்களகரமான பிரமாதி வருடம் சுக்லபட்சம், சஷ்டி திதி, அசுவினி நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய நன்னாளான தை மாதம் 28 ஆம் நாள் (11-02-2000) வெள்ளிக்கிழமை மீன லக்கினத்தில் காலை 7-30 மணிக்கு மேல் 9-00 மணிக்குள் திருக்கோயில் விமானங்கள், நூதன துவஜஸ்தம்பம், சுவாமி, அம்பாள் மற்றும் பரிவாரங்களுக்கு,

# மகா கும்பாபிஷேகம் எனும் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா

தவத்திரு. **சுவாமி ஓங்கார நந்தா** அவர்கள் ஆசியுடன்,
ஓங்கார தலைமை பீடம், தலைவர், ஓங்கார ஆசிரமம், பாண்டிச்சேரி

மாண்புமிகு முனைவர். **மு.தமிழ்க்குடிமகன்** அவர்கள் தலைமையில்
தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாட்டு மற்றும்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர்

ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்
உளுந்தூர்பேட்டை

தவத்திரு விவேகானந்த சுவாமிகள்
உளுந்தூர்பேட்டை

ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது.

**இவ்விழாவில்**

**திரு.ச.சாவர்க்கர்**, இ.ஆ.ப. அவர்கள்
ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

**திரு.எஸ்.கனகய்யா**, பி.எஸ்.சி., பி.எல்., அவர்கள்
கூடுதல் ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

**திரு.ப.தனபால்**, எம்.ஏ., பி.எல்., அவர்கள்
இணை ஆணையர் (தலைமையிடம்), இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை.

**திரு.ஜி.இராஜநாயகம்**, பி.ஏ., பி.எல்., அவர்கள்
இணை ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை.

**திரு.ஆர்.சுப்பிரமணியன்**, எம்.ஏ., எம்.ஏ., பி.எல்., அவர்கள்
உதவி ஆணையர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை.

ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.
எனவே ஆன்மீகப் பெருமக்கள் அனைவரும் திருக்குடமுழுக்கு விழாவில் பங்கு கொண்டு இறையருள் பெற்றுய்ய அன்புடன் வேண்டுகிறோம்.

இவண்,

ஆர்.குப்புசாமி, பி.ஏ., எம்.காம்.,
தக்கார்

ஸ்ரீ சரபேஸ்வரர் அறப்பணியாளர்கள்
கிராமபொதுமக்கள
கோயம்பேடு

பொ.சரவணன், பி.ஏ.,
செயல் அலுவலர்

# கும்பாபிஷேக விழா நிகழ்ச்சி நிரல்

| தேதி | நேரம் | நிகழ்ச்சிகள் |
|---|---|---|
| 7-2-2000 திங்கள் தை-24 | காலை 6.00 மணி | அனுக்ஞை, விக்னேஸ்வர பூசை, பிரதிஷ்டா சங்கல்பம், தனபூசை ஸ்ரீ மகா கணபதி ஹோமம் |
| | மாலை 7.00 மணி | வாஸ்து சாந்தி, பிரவேச பலி |
| 8-2-2000 செவ்வாய் | காலை 6.00 மணி | நவக்கிரக ஹோமம், லெக்ஷிமி ஹோமம் |
| தை-25 | மாலை 6.00 மணி | மிருத்சங்கிரகணம் |
| 9-2-2000 புதன் | காலை 6.00 மணி | சாந்தி திசா ஹோமங்கள் முதலியன |
| தை-26 | மாலை 6.00 மணி | அங்குரார்ப்பணம், ஆச்சார்ய ரஷாபந்தனம் கலாகர்ஷணம், யாத்ரா ஹோமம் |
| | இரவு 7.00 மணி | யாகசாலை முதல் கால பூசை ஆரம்பம் |
| | இரவு 9.00 மணி | மகாபூர்ணாஹுதி, தீபாராதனை |
| 10-2-2000 வியாழன் தை-27 | காலை 8.00 மணி | விசேஷ சந்தி |
| | காலை 8.30 மணி | யாகசாலை இரண்டாம் கால பூசை |
| | காலை 10.30 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை |
| | இரவு 7.00 மணி | விசேஷ சந்தி |
| | இரவு 7.30 மணி | யாகசாலை மூன்றாம் கால பூசை ஆரம்பம் |
| | இரவு 9.30 மணி | பூர்ணாஹுதி, தீபாராதனை |

| | | |
|---|---|---|
| 11-2-2000<br>வெள்ளி | காலை 5.00 மணி | யாகசாலை நான்காம் கால பூசை<br>ஸ்பர்சாகுதி |
| தை-28 | காலை 7.30 மணி | மகாபூர்ணாஹுதி, தீபாராதனை |
| | காலை 8.00 மணி | யாத்ராதானம், கிரகப்ரீதி,<br>கடம் புறப்படுதல் |
| | காலை 8.40 மணி | விமானங்கள், நூதன துவஜஸ்தம்பம்<br>கும்பாபிஷேகம் |
| | காலை 9.00 மணி | அருள்மிகு அறம்வளர்த்த நாயகி<br>சமேத குசலவபுரீஸ்வரர்<br>எனும் குறுங்காலீஸ்வரர்<br>சுவாமி மற்றும் பரிவாரங்களுக்கு ஏக<br>காலத்தில் மகா கும்பாபிஷேகம் எனும்<br>திருக்குடமுழுக்கு நன்னீராட்டு |
| | மதியம் 12.00 மணி | மகா அபிஷேகம்<br>மகா தீபாராதனை |
| | இரவு 7.00 மணி | திருக்கல்யாண மகோத்ஸவம் |
| | இரவு 9.00 மணி | பஞ்ச மூர்த்திகள் திருவீதி உலா |

சர்வ சாதகம் புரிந்தவர்
திருவாவடுதுறை ஆதீன சிவாகம வித்வான்,
சிவநெறிச் செம்மல், சித்தாந்த இரத்தினம்,
எஸ்.கண்ணப்பன் என்கிற சா.பசுபதி சிவாச்சாரியார்,
திருவிடைமருதூர்.

## கும்பாபிஷேக விழா சிறப்பு நிகழ்ச்சிகள்

| நாள் | நிகழ்ச்சி | நிகழ்த்துபவர்கள் |
|---|---|---|
| 7-2-2000 திங்கள் | பக்தி நெறி | சக்தி தொண்டன், சன்மார்க்க நன்மணி, சின்னமனூர் **திருமிகு.கே.பொன்னையா** அவர்கள் |
| | ஸ்ரீ மீனாட்சித் திருக்கல்யாணம் | இன்னிசை இளவரசி **திருமதி.பாரதி திருமகன்** எம்.ஏ., எம்.பில்., அவர்கள் குழுவினர் (த/பெ. கலைமாமணி கவிஞர் சுப்பு ஆறுமுகம் வில்லிசை வேந்தர்) |
| 8-2-2000 செவ்வாய் | நாட்டிய நிகழ்ச்சி | **பரத நாட்டிய வித்யாலயம்** கொளத்தூர், சென்னை - 600 099. |
| 9-2-2000 புதன் | புத்தாயிரத்தில் ஆன்மீகப் புத்தொளி | இலக்கியச் சக்கரவர்த்தி **கவிஞர். திருமிகு இளந்தேவன்** அவர்கள் |
| 10-2-2000 வியாழன் | இறைவனின் திருவருள் | **திருமிகு.சந்திரசேகரன்,** இ.ஆ.ப. அவர்கள் |
| 11-2-2000 வெள்ளி | தேவார இன்னிசை | தேவார இசைத் திலகம் **திருமதி.சியாமளா குமார்** அவர்கள், சென்னை |
| | மகேசன் தொண்டு | **ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள்** உளுந்தூர்பேட்டை |

## நிகழ்ச்சித் தொகுப்பாளர்கள்

*பேராசிரியர். வைணவ இலக்கியச்செம்மல்*
முனைவர். **திரு.ச.பார்த்தசாரதி** அவர்கள்

*செந்தமிழ் நம்பி, மயிலம்*
**திரு.வேல்.கார்த்திகேயன்** அவர்கள்.

## சென்னை, கோயம்பேடு

## *அருள்மிகு அறம்வளர்த்தநாயகி (தர்மசம்வர்த்தனி) உடனுறை குசலவபுரீஸ்வரர் எனும் குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் எனும் திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா பல ஆண்டுகள் கழித்து*

சென்னை மாநகரில் மிக்க தொன்மை வாய்ந்ததும், புராண வரலாற்றுச் சிறப்பு மிக்கதும் ஸ்ரீ இராமபிரானின் புதல்வர்களான இலவ, குசர்களால் போற்றி வழிபட்டு வந்த பெருமை உடையதுமான, கோயம்பேடு எனும் இத்திருத்தலம் குசலவபுரீஸ்வரர் எனும் குறுங்காலீஸ்வரர் எனும் திவ்விய நாமங்களோடு சுயம்புருவாய் எழுந்தருளி அருள்பாலித்து வரும் சிறப்பினையுடைய இத்திருக்கோயிலின் திருப்பணி வேலைகள் யாவும் பூர்த்தியனது.

மங்களகரமான பிரமாதி வருடம் சுக்லபட்சம், சஷ்டி திதி, அசுவினி நட்சத்திரம் அமிர்தயோகம் கூடிய நன்னாளில் தை மாதம் 28 ஆம் நாள் (11-02-2000) வெள்ளிக்கிழமை மீன லக்கினத்தில் காலை 7-30 மணிக்கு மேல் 9-00 மணிக்குள் திருக்கோயில் விமானங்கள், நூதன துவஜஸ்தம்பம், சுவாமி, அம்பாள் மற்றும் பரிவாரங்களுக்கு, மகா கும்பாபிஷேகம் எனும்



வைகுண்ட வாசப் பெருமாள் கோயில் கருவறை கோபுரம்



தச அவதார முகப்பு மண்டபம்

திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற்றது.

அவ்விழாவில் *தவத்திரு.* **சுவாமி ஓங்கார நந்தா** (தலைவர், ஓங்கார ஆசிரமம், பாண்டிச்சேரி.) அவர்கள் ஆசியுடன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ் பண்பாட்டுமற்றும் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை அமைச்சர் *மாண்புமிகு முனைவர்.* **மு.தமிழ்க்குடிமகன்** அவர்கள் தலைமைதாங்க உளுந்தூர்பேட்டை ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக சுவாமிகள், தவத்திரு விவேகானந்த சுவாமிகள் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. மேலும் இவ்விழாவில்இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் திரு.ச.சாவர்க்கர், இ.ஆ.ப. அவர்கள், கூடுதல் ஆணையர் திரு.எஸ்.கனகய்யா, பி.எஸ்.சி., பி.எல்., அவர்கள், இணை ஆணையர்(தலைமையிடம்) திரு.ப.தனபால், எம்.ஏ., பி.எல்., அவர்கள் , இணை ஆணையர் திரு.ஜி.இராஜநாயகம், பி.ஏ., பி.எல்., அவர்கள் உதவி ஆணையர் திரு.ஆர்.சுப்பிரமணியன், எம்.ஏ., எம்.ஏ., பி.எல்., அவர்கள் உள்ளிட்ட பெருமக்கள்சிறப்பித்தனர்.

இவர்களைத் தொடர்ந்து பல ஆயிரக்கணக்கான பக்தர்களும் ஊர்க் கிராம மக்களும் சரபேஸ்வரர் அறப்பணியாளர்களும் கலந்து கொண்டு திருக்குடமுழுக்கு விழா சீரும் சிறப்புமாக நடைபெற்றதைக் கண்ணாரக் கண்டு, செவியார வேத முழக்கங்களை நுகர்ந்து மனம் குளிர இறையருளைப் பெற்றனர்.

# வைகுண்ட வாசப்பெருமாள் திருக்கோயில்,

**கோயம்பேடு, சென்னை - 107.**

## அமைவிடம் :

சென்னை - கோயம்பேடு பேருந்து நிறுத்தத்திலிருந்து 10 நிமிட நடை தூரத்தில் அருள்மிகு வைகுண்ட வாசப்பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. அருகில் வடதிசை நோக்கிய நிலையில் அ/மி குறுங்காலீஸ்வரர் திருக்கோயில் அமைந்துள்ளது. தற்போதுள்ள மொத்த வணிக வளாகத்திற்கு (KOYAMBEDU MARKET) அருகில் இக்கோயில், இருப்பிடமாகத் திகழ்கின்றது.

## கோயிலின் சிறப்பு :

அருள்மிகு வைகுண்ட வாசப்பெருமாள் திருக்கோயில் கிழக்குத் திசை நோக்கிய நிலையில் விளங்குகின்றது. மேலும், சிறப்பம்சமாக ஆதிகாலத்தில் இங்கு வால்மீகி முனிவருக்கும், இராமனின் புதல்வர்களான இலவகுசர்களுக்கும், வைகுண்ட வாசப்பெருமாள் பிரத்யட்சமாக காட்சி தந்து அருள்புரிந்த இடமாக இக்கோயில் திகழ்கின்றது. சாயா விமானமாக, இக்கோயில் விளங்குகின்றது. கோயில் 115 அடி நீளமும், 188 அடி அகலமும் கொண்ட நிலையில் விளங்குகின்றது.

## மூலவரின் சிறப்பு :

வைகுண்ட வாசர் என்றாலே, ஆதிசேஷன் மீது அமர்ந்த நிலையில் காட்சி தருவார். ஆனால் இங்கு ஸ்ரீதேவி, பூதேவி தாயார் சமேதராய் நின்ற திருக்கோலத்தில் வைகுண்டவாசர் காட்சி தந்து அருள்புரிவது மிகவும் சிறப்பம்சமாகும். இதற்குக் காரணமாக, முன்னோர்கள் (ஆன்றோர்கள்) கூறிய செவிவழிச் செய்தியினைப் படித்துணர்ந்து அறியலாம்.

வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்துத் தங்கி எம்பெருமானாகிய வைகுண்ட வாசப்பெருமானைத் தியானித்து வேண்ட, வேண்டிய கணப்பொழுதில் என்றும் அழிவிலா பெருமானாகிய நித்திய வைகுண்ட வாசப் பெருமானாகத் தோன்றி காட்சி தந்து அருள் புரிந்தார். கோயம்பேட்டில் வீற்றிருந்து அருள்புரிபவர் நித்திய வைகுண்ட வாசப்பெருமாள். இவர் என்றும் அழிவிலா இன்பந் தந்து காக்கும் வரதர்.



குச, இலவருடன் வால்மீகி



வில்லேந்திய

இராமனும்

கோடாலிக்

கொண்டையுடன்

சீதையும்

வைகுண்ட லோகத்தில் மார்கழி மாதம் ஏகாதசியன்று ஒருநாள் மட்டும் பரமபத வாசல் திறந்து அவ்வழியாக உலா வந்து வணங்குகின்ற அடியார்களுக்கு அருள்புரிந்து பேரின்பம் நல்குவார். பரமபத வாசல் வழி வருகின்றப் பெருமானைத் தொடர்ந்து வருகின்ற அடியார்களுக்குப் பேரின்பம் (வைகுண்டபதவி) நல்கியும், மறுபிறவி (வடமொழியில் மோட்சப் பிராப்தி என்பார்கள்) என்பதே கிடையாது என்றும் ஆன்றோர்கள் உரைத்துள்ளனர். அன்றைய நாள் மட்டும் முழுதும் பரமபத வாசல் திறந்து இருக்கும். வைகுண்டத்தைக் காட்டிலும், கோயம்பேடு எனும் நகரத்தில் ஆசிரமம் அமைத்துத் தங்கிய வால்மீகி முனிவர் வேண்டிய கணப்பொழுதில் வைகுண்ட வாசப்பெருமாளே, நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் (அன்றும் இன்றும் என்றும் அழிவிலா) நித்திய வைகுண்ட வாசனாகக் காட்சி தந்துள்ளார்.

வைகுண்ட லோகத்தில் வைகுண்ட ஏகாதசியன்றுபரமபதவாசல் வழி அருள்புரிவார். ஆனால், இத் திருக்கோயிலில் பரமபதவாசல் வழி வரும் பெருமானே, கோயம்பேடு தலத்தில் நின்ற திருக்கோலத்தில் நான்கு திருக்கரங்களுடன் முறையே சங்கு, சக்கரம், வரத ஹஸ்தம், கடிக ஹஸ்தத்துடன் தன்னை நாடி வரும் அடியார்களுக்கு நித்தியமாய் ஸ்ரீதேவி பூதேவி தாயாருடன் வைகுண்ட பதவியினை நல்கக் கூடியவராக விளங்குகின்றார். இக்கோயில் கும்பாபிஷேகம் பல நூறு ஆண்டுகளுக்குப் பிறகு 5.4.1995 புதன்கிழமை காலை 9.00 மணி முதல் 10.30 மணிக்குள் சிறப்பாக நடைபெற்றது.

## உற்சவ மூர்த்தி :

ஸ்ரீராமனைச் சக்கரவர்த்தித் திருமகன் என்று யாவரும் சிறப்பாகப் போற்றுவார்கள். ஸ்ரீராமனைப் பட்டாபிஷேகக் கோலத்துடன் அனைவரும் கண்டு வணங்கி மகிழ்ந்துள்ளோம். வேறு எந்தக் கோயில்களிலும் காணமுடியாத சிறப்பம்சங்களை இத் திருக்கோயிலில் உள்ள உற்சவமூர்த்திகளைக் கண்டறிந்து உணரலாம். இராமனை ராஜாவுக்கு உண்டான கிரீடத்துடனும், சீதாப்பிராட்டியை, ராணிக்கு உண்டான கிரீடத்துடனும் உடன் இலட்சுமணர், ஆஞ்சநேயர் முதலானோர்களோடு உடனிருந்து காட்சி தந்ததைக் கண்ணாரக் கண்டு மகிழ்ந்துள்ளோம்.

ஆனால் இங்குள்ள திருக்கோயில் சந்நிதியில் இராமன், இலவகுச யுத்தத்தின் பொழுது இராஜாவுக்கு உண்டான எந்தவித ஆபரணங்களும் இல்லாமல் மரவுரி தரித்த கோலத்தில் காட்சி அளிக்கின்றார். அதேபோல் மற்ற சந்நிதியில் சீதாப்பிராட்டியார், அயோத்தி ராணிக்கு உண்டான கிரீடத்துடன் காட்சி அளிப்பார். ஆனால் இங்கு வால்மீகி ஆசிரமத்தில் தங்கி இருக்கும் காலத்தில் ராணிக்கு உண்டான கிரீடம் இல்லாமல் கோடாலிக் கொண்டை முடிச்சுடன் சீதாப்பிராட்டி விளங்குகின்றார்.

## வைகுண்ட வாசப்பெருமாள்

ஸ்ரீதேவி, பூதேவியருடன் வைகுண்ட வாசப்பெருமாள் உற்சவமூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இங்குள்ள உற்சவமூர்த்தி, மூலவரைப் போன்று எழுந்தருளியிருந்தாலும், கடிகாஹஸ்தத்திற்குப் பதிலாக ஆக்குவான ஹஸ்தமாக (பக்தர்களைத் தன்னருகில் அருள் புரிவதற்காக அழைப்பது போல்) அமைந்திருக்கிறது. இந்த மாற்றத்தினைத் தவிர வேறு ஒரு மாற்றமில்லை.

மற்ற சந்நிதியில் இலட்சுமணன், அனுமார் ஆகியோர் உடனிருப்பார்கள். ஆனால் இங்கு மட்டும் ஒரு யுத்தத்திற்குப் பிறகு, இராமன், சீதை சேர்வதால் ஏகாந்தமாகக் காட்சி அளிக்கிறார்கள். உடன் இலட்சுமணன், அனுமன் கிடையாது.

முன் மண்டபத்தில் இரு துவார பாலகர்கள் காவல் காத்து நிற்கின்றனர். வாசலின் இடது பக்கத்தில் ஒரே கல்லில் வால்மீகி முனிவர், மற்றும் இருபுறமும் இலவகுசர்கள் இருப்பது போல் உள்ள விக்ரகம் உள்ளது. இதுவும் தல வரலாற்றுச் சான்றுக்கு ஆதாரமாகத் திகழ்கின்றது.

சந்நிதிக்கு அருகில் தனி நிலையில் சீதாப் பிராட்டி விளங்குகின்றார். இதற்குக் காரணம், இராமனால் காட்டிற்கு அனுப்பிய பின், தாயார் இங்கு வந்தார் என்றும், வால்மீகி ஆசிரமத்தில் தங்கி, வைகுண்ட வாசப் பெருமானைத் தரிசித்ததாகவும் நம் முன்னோர்கள் கூறுகின்றனர்.

## உற்சவ மூர்த்திகள் :

1. சக்கரத்தாழ்வார்
2. செல்வர்

3. கோடாலிக் கொண்டையுடன் சீதாப்பிராட்டி நின்ற கோலத்தில் எழுந்தருளல்.
4. வில், அம்பு ஏந்திய நிலையில் மரவுரி தரித்துக் கொண்ட இராமன்
5. 6. 7. கௌதகர், ஸ்ரீ தேவி, பூதேவியுடன்
8. நம்மாழ்வார்
9. ஆண்டாள்
10. நவநீதக் கண்ணன்
11. விகனசர்
12. திருக்கச்சி நம்பிகள்
13. உடையவர்
14. கனகவல்லித்தாயார்
15,16, 17. வைகுண்டவாசப்பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி

## தெலுங்கு மொழியில் எழுதிய வடமொழி வைத்திய இராமாயணம் :

ஏறக்குறைய 250 ஏடுகள் கொண்ட ஓலைச்சுவடிகள் அடங்கியது. இவ்வேடுகள் கூறும் செய்தியினை ஆராய்ந்து பார்த்தபோது வடமொழி இராமாயணம் என்றும், இக்காவியத்தைத் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளது என்றும் ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்தனர். கோயில் நிர்வாகத்தினர் இதனைப் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

## சேர்ந்துள்ள வில்வ வேப்பமரம் :

இரண்டு வில்வமரங்களுக்கு இடையில் ஒரு வேப்பமரம் பின்னிப் பிணைந்தது இக்கோயிலின் சிறப்பம்சங்களுள் ஒன்று. சிவன் வில்வமரமாகவும், பார்வதி வேப்பமரமாகவும், திருமால் வேறொரு வில்வமரமாக்வும் நின்று திருமணம் புரிவதாக ஐதீகம். இக்காட்சி கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைகின்றது. திருமணம் விரைவில் நடைபெறவும், குழந்தைப்பேறு கிடைக்கவும் இங்கு பிரார்த்தனை செய்வது வழக்கம். அருகில் திருநந்தவனம் அமைந்துள்ளது.

## அருள்மிகு கனகவல்லித்தாயார் சந்நிதி

முதல் பிரகாரத்தைச் சுற்றி வரும்போது இடதுபுறத்தில் அ/மி கனகவல்லித் தாயார் சந்நிதி அமைந்துள்ளது. ஸ்ரீ விபவ ஆண்டு ஆவணித் திங்கள் 29 ஆம் நாள் (14.9.1988) அன்று ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன மகா சம்ப்ரோட்சணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அருகிலே வேம்புமரம் அமைந்துள்ளது.

## ஆண்டாள் சந்நிதி :

திருப்பாவை பாடிய பாவையராக விளங்கும் ஆண்டாள் சந்நிதி தனியாக வலப்புறத்தில் உள்ளது.

## முன் மண்டபத்தில் :

அடுத்து சேனை முதலிகள், பன்னிரு ஆழ்வார்கள், உடையவர், நாகத்தில் நவநீதக் கண்ணன் முதலிய உருவங்கள் விக்ரகத்தில் அமைந்துள்ளன. அருகில் முற்காலத்தில் பயன்படுத்திய சுரங்கப்பாதை இருக்கிறது. மண்டபத்தின் எதிரில் கருடாழ்வார் சந்நிதி, கொடிமரம், பலிபீடம் ஆகியன அமைந்துள்ளன.

## தலமரம் :

இக்கோயிலின் தலமரம் (விருட்சம்) மா மரம் என்று கூறுகின்றனர். ஆனால் தற்போது செழிப்பாக இல்லை. அருகில் இரண்டு குறுகிய அளவு உயரங்கொண்ட பலா மரங்கள் கனிகளுடன் காட்சி தருகின்றன.

## வாகன மண்டபம் :

உற்சவ மூர்த்தங்கள் எழுந்தருள வாகனங்கள் பல உள்ளன. நாக வாகனம், யானை வாகனம், அன்ன வாகனம், மான் வாகனம் முதலானவற்றைப் பாதுகாப்பாக வைக்க வாகன மண்டபம் பெரிய அளவில் உள்ளது.

## ஆஞ்சநேயர் சந்நிதி :

நின்ற திருக்கோலத்தில் இரு கரம் கூப்பிய நிலையில் பக்த ஆஞ்சநேயர் பெருமாளை நோக்கி வழிபடுவது போல் காட்சி தருகின்றார். கிரீடம் இல்லாத நிலையில் ஆஞ்சநேயர் வீற்றிருப்பது விசேஷம்.

## இராச கோபுரம் :

இராசகோபுரம், மண்டபத் தூண்களாக அமைந்து உள்ளது.

## சுரங்கப்பாதை :

அர்த்த மண்டப நுழைவாயிலின் வலதுபுறத்தில், வலக்கதவினையொட்டி கீழ்ப்பகுதியில் சுரங்கப்பாதை அமைந்துள்ளது. இச் சுரங்கப்பாதையைப் பற்றி பல கருத்துகள் நிலவுகின்றன. முதலாவதாக, மாலிக்காபூர் படையெடுப்பின் போது, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி பெருமாள் கோயிலிலுள்ள உற்சவமூர்த்திகளைப் பாதுகாக்கும் பொருட்டு, சுரங்கப்பாதையின் வழியாக, முன்னாளில் வனப்பகுதியின் நடுப்பகுதியில் ஆசிரமத்துடன் ஒட்டியமைந்த இக்கோயிலுள் வைத்துச் சென்றனர் என்றும், அப்போது இச் சுரங்கப்பாதையைப் பயன்படுத்தினர் என்றும் கூறினர். மேலும் இப்பாதை, அருகிலுள்ள குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலுக்குச் செல்வதாகவும் கூறுகின்றனர். மேலும் அக்காலத்தில் அரசன் பாதுகாப்பாக செல்லவேண்டியும், அவசரக்காலத்தில் தன்னையும், நாட்டு மக்களையும் காப்பாற்றுவதற்கு இச் சுரங்கப் பாதையைப் (அடித்தள வழி - Basement Route) பயன்படுத்தினார்கள் என்றும் கூறுகின்றார்கள்.

## தலப்பெயர் :

இத்தலத்திற்கு, கோயம்பேடு, கோசைநகர், இராகவபுரம், குசலவபுரம், பிராயசித்த புரம் முதலான பெயர்கள் உள்ளன. மேலும் விளக்கத்திற்கு முன்பு கூறியுள்ளவற்றைக் கண்டு படித்தறியலாம். மேலும், இத்தலத்தை வீக்ஷாரண்ய ஷேத்திரம் என்று கூறுவார்கள். வீக்ஷ - பார்வை, ஆரண்யம் - காடு, க்ஷேத்திரம் - தலம். கண்பார்வை பட்ட இடமெல்லாம் ஒரே காடாக இருந்ததாம். அதனால் இப்பெயர் வந்தது என்றும் முன்னோர்கள் கூறிய கருத்து இன்றும் நிலவுகிறது.

## இலவகுச தீர்த்தம் :

இலவனும், குசனும் பூசனை புரிவதற்காக உண்டாக்கிய தீர்த்தம் (திருக்குளம்) மிகப் பரந்த நிலையில் உள்ளது.


# அருள்மிகு வைகுண்ட வாசர் பெருமாள் திருக்கோயில்

## தரைப்பட விளக்கம்

1. அருள்மிகு வைகுண்டவாசப் பெருமாள், பூதேவி, ஸ்ரீதேவியுடன் எழுந்தருளல் (மூலவர்)
2. அருள்மிகு வைகுண்டவாசப் பெருமாள், பூதேவி, ஸ்ரீதேவியுடன் எழுந்தருளல் ( உற்சவர்)
3. செல்வர்
4. சக்கரத்தாழ்வார்

5, 6. உற்சவமூர்த்திகள்

7. துவாரபாலகர்கள்
8. தெலுங்கு மொழியில் எழுதிய வடமொழி வைத்திய இராமாயணம் வைத்துள்ள பெட்டி
9. வால்மீக முனிவருடன் இலவகுசர் விக்ரகம்.
10. சீதாப்பிராட்டி
11. பன்னிரு ஆழ்வார்கள்
12. சுரங்கப்பாதை
13. கருடாழ்வார் சந்நிதி
14. கொடிக்கம்பம்
15. பலிபீடம்
16. இராசகோபுரம்
17. கோயில் அலுவலகம்
18. மடைப்பள்ளி
19. வேப்பமரம் வில்வமரம் இரண்டும் இணைந்த மரத்தின் கீழ் தும்பிக்கை ஆழ்வார் சந்நிதி
20. அருள்மிகு கனகவல்லித் தாயார் சந்நிதி




**அருள்மிகு வைகுண்ட வாசப் பெருமாள் திருக்கோயில் தரைப்படம்**

## பூசைகளும், திருவிழாக்களும் :

வைகானச ஆகமம், பாஞ்சராத்திர ஆகமம் என வைணவ ஆகமங்கள் இரண்டாக இருந்தாலும், இக்கோயிலில் வைகானச ஆகம முறைப்படி பூசைகள் நடைபெறும். காலையில் 7.00 மணி முதல் 10.30 மணி வரையிலும், மாலையில் 5.00 மணி முதல் 8.30 மணி வரையிலும் கோயில் திறந்திருக்கும். கோயில் பூசை முறைகளைத் தற்போது செய்து வருபவர்கள் திரு. ராமன் பட்டாச்சாரியார் அவர்கள், திரு. அனந்தகிருஷ்ணன் பட்டாச்சாரியார் அவர்கள் மற்றும் திரு. கண்ணன் பட்டாச்சார்யார் அவர்கள்.

## உற்சவங்கள் :

இத் திருக்கோயிலில் சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரையிலும் 12 மாதங்களிலும் மாதாந்திர மற்றும் சிறப்பு தின உற்சவங்கள் நடைபெற்று வருகின்றன.

சித்திரை : புத்தாண்டு தினச் சிறப்பு வழிபாடு,
சித்ராப்பௌர்ணமி விசேஷத் திருமஞ்சனம்

வைகாசி : விசாகம்

ஆனி : பிரம்மோற்சவம் (10 நாள் பெருவிழா)

ஆடி : பூர நட்சத்திரத்தன்று ஆண்டாள் திருக்கல்யாணம்

ஆவணி : கிருஷ்ண ஜெயந்தி - உறியடி உற்சவம்

புரட்டாசி : நவராத்திரிப் பெருவிழா ; 5 சனி - சிறப்பு வழிபாடு

ஐப்பசி : தீப ஒளி

கார்த்திகை : தீப ஒளி விழா

மார்கழி : வைகுண்ட ஏகாதசி, கருட சேவை.
போகித் திருக்கல்யாணம் - ஆண்டாள்

தை : மகர சங்கராந்தி

மாசி : மகம்

பங்குனி : உத்திரப் பெருவிழா (தாயார் திருக்கல்யாணம்)
ராமர் அவதார உற்சவம்

## பிரம்ம உற்சவம் :

ஆனி மாதத்தில் நடக்கும் பிரம்ம உற்சவ விபரத்தினைக் கீழே காண்போம்.

| நாள் | உற்சவம் | - வாகனம் |
|---|---|---|
| முதல் நாள் | காலை | - துவஜாரோகணம் - தொட்டி உற்சவம் |
| | மாலை | - சிம்ம வாகனம் |
| இரண்டாம் நாள் | காலை | - சூரிய பிரபை |
| | மாலை | - சந்திர பிரபை |
| மூன்றாம் நாள் | காலை | - அன்ன வாகனம் |
| | மாலை | - அனுமந்த வாகனம் |
| நான்காம் நாள் | காலை | - தொட்டி உற்சவம் |
| | மாலை | - சேஷ வாகனம் |
| ஐந்தாம் நாள் | காலை | - நாச்சியார் திருக்கோலம் |
| | மாலை | - கருடசேவை |
| ஆறாம் நாள் | காலை | - தொட்டி உற்சவம், சூர்ணாபிஷேகம் |
| | மாலை | - யானை வாகனம் |
| ஏழாம் நாள் | காலை | - திருத்தேர் |
| | மாலை | - தொட்டி உற்சவம் |
| எட்டாம் நாள் | காலை | - தொட்டி உற்சவம், வெண்ணெய் தாழி கண்ணன் உற்சவம் |
| | மாலை | - குதிரை வாகனம் |
| ஒன்பதாம் நாள் | காலை | - பல்லக்கு, போர்வை களைதல் |
| | மாலை | - மங்களகிரி துவஜ அவரோகணம் |
| பத்தாம் நாள் | காலை | - திருமஞ்சனம் |
| | மாலை | - சப்தா வர்ணம், மங்களகிரி |

## வைணவ இலக்கியக் கழகம்

வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமையன்று மாலை 6.00 மணி முதல் 8.00 மணி வரை கழகத்தின் சார்பில் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தச் சொற்பொழிவு நடைபெறும். பிரதி சனிக்கிழமை தோறும் 4.00 மணி முதல் 5.00 மணி வரை கம்பராமாயணம் - சுந்தரகாண்டம் மற்றும் பகவத்கீதை இவ்விரண்டையும் நித்திய பாராயணம் செய்து வருகின்றார்கள். 5.00 மணி முதல் 6.00 மணி வரை விஷ்ணு சகஸ்ரநாமம் பாராயணம் செய்து பின் பிரசாதம் வழங்குவது இறைபணியுடன் இலக்கியச் சீர்மையும் உயர்வு பெற, இக்கழகம் அரும்பணியாற்றி வருகின்றது. வைணவ இலக்கியச் செம்மல் முனைவர் திரு.ச.பார்த்தசாரதி அவர்கள் இதனைச் செம்மையாக செயல்படுத்தி வருகின்றார்.

## நிறைவுரை :

கோயம்பேட்டில் மூர்த்தியாக வீற்றிருந்தருளும் வைகுண்ட வாசப்பெருமானும், வால்மீகி முனிவர் ஆசிரமம் அமைத்து வழிபட்ட சிறப்பு மிக்க தலத்தாலும், இராமனின் பிள்ளைகளான இலவனும், குசனும் பூசித்த தீர்த்தத்தாலும் இத்தலம் சிறந்து விளங்குகின்றது. மூலவர் சந்நிதியின் விமானம் சாயாவிமானமாகும். குலோத்துங்க சோழ மன்னனும், விஜயநகர அரசர்களில் ஒருவரான வீர புக்கராயரும் இத் திருக்கோயிலுக்குத் திருப்பணி செய்துள்ளனர்.

சுருங்கக்கூறின் இத்தலத்தில் எழுந்தருளியுள்ள வைகுண்ட வாசப்பெருமாள் கோயிலும் அருகிலுள்ள குறுங்காலீஸ்வரர் திருக்கோயிலும் எழுந்தருளியதைக் காண்பது சைவ-வைணவ சமயப் பிணக்கின்றி ஒற்றுமையைக் காணும் திருத்தலமாக விளங்குகின்றது என்பது உள்ளங்கையில் நெல்லிக்கனி போல் அறிந்து கொள்ள முடிகிறது.






சிவன் கோயில் விமான கலசம்




அலங்காரத்தில் சிவனின் அழகிய தோற்றம்



ரிஷப, ரிஷபி வாகனம்



குடமுழுக்கு விழாவன்று புனைந்த
வெள்ளி மலையில் சிவன் எழுந்தருளிய காட்சி



குசன், இலவன் பூசித்த குறுங்காலீஸ்வரர்
வால்மீகி முனிவர் பூசித்த வைகுண்ட வாசர்